# கார்ல் மார்க்ஸின்

## நம்மை மேம்படுத்தும் எண்ணங்கள்

22



# கார்ல் மார்க்சின்

## நம்மை மேம்படுத்தும் எண்ணங்கள்

புலவர் : என். வி. கலைமணி எம்.ஏ. (வரலாறு)

பாரதி பதிப்பகம்
புதிய எண். 126, உஸ்மான் சாலை,
தியாகராய நகர், சென்னை-600 017.
தொ. பெ. எண்: 4984 :: போன்: 4340205

# பதிப்புரை

நம்மை மேம்படுத்தும் எண்ணங்கள் என்ற தலைப்பின் கீழ் உலகப் பேரறிஞர்கள் பலரது கருத்துக்களையும் நமது நாட்டிலுள்ள பல்வேறு சிறப்புக்குரியவர்களின் கருத்துகளையும் தொகுத்து எங்கள் நிறுவனம் தொடர்ந்து வெளியிட்டு வருகிறது.

அந்த வரிசையில் தொழிலாளர்களின் விடுதலைக்காக் அல்லும் பகலும் பாடுபட்டு உழைத்து வெற்றிகண்ட தத்துவ மேதை கார்ல் மார்க்ஸ் அவர்களின் கருத்துக்கள் அடங்கிய இந்நூலை வெளியிடுவதில் மிகவும் பெருமிதம் கொள்கிறோம்.

எமது மற்ற வெளியீடுகளுக்கு தமிழக மக்களிடையே உள்ள பேராதரவை விட பன்மடங்கு ஆதரவு இந்நூலுக்குக் கிட்டும் என்று நம்புகிறோம். தவறாது படித்துப்பயன் பெறுமாறு கேட்டுக்கொள்கிறோம்.

நன்றி.

பதிப்பகத்தார்

**விலை : ரூ. 22-00**

○ KARAL MARXIN NAMMAI MEAMPADUTHTHUM EANNANGAL ○ Self Improvement Essays By : PULAVAR. N.V. KALAIMANI M.A, ○ First Edition: December 2000 ○ Price : Rs. 22-00 ○ Copy Right Holder & Publisher: BHAARATHE PATHIPPAHAM, New No.16, UsmanRoad, T.Nagar, Chennai-600017, P. B. No. 4984, Phone : 4340205 ○ Printed at: Champion Power Printers, 3, Satyanarayana Street, Chennai-33. ○

# கார்ல் மார்க்சின் நம்மை மேம்படுத்தும் எண்ணங்கள்

## 1. சூரியன் ஒளி மறைவு - சந்திரன் ஒளி இரங்கல்!

### மயானத்தில் எங்கல்ஸ் கண்ணீர் உரை

1883-ம் ஆண்டு, மார்ச் மாதம் 14-ம் நாள் பிற்பகல் இரண்டே முக்கால் மணி!

உலகத்தின் மிகப்பெரிய சிந்தனையாளர்களுள் ஒருவரான கார்ல் மார்க்ஸ் என்ற சிந்தனைச் சூரியன், தனது சிந்தனை எனும் சூரிய ஒளியைப் படிப்படியாகக் குறைத்துக்கொண்டு இங்கிலாந்து நாட்டின் கீழ்வானிலே மறைந்து விட்டது.

'சமதர்மம்' என்ற தத்துவ வானிலே 'பொதுவுடைமை' எனும் பூலோக மோட்சத்தைத் தொழிலாளர் ஒவ்வொருவரும் பெற்றிட, அத் தத்துவத்தின் சோசலிசச் சமுதாயம் மெல்ல மெல்ல வளர்ந்து, மக்கள் அனைவரும் சம அறிவும், திறனும், உழைப்பும், நிலைபெற்ற ஒரு சமுதாய நிலைமையைக் கண்டிடத் துடிதுடிப்போடு தகத்தகப்பாகஒளிபரப்பிப் பணியாற்றிய கார்ல் மார்க்ஸ் என்ற சூரியன் இன்று மறைவு பெற்ற துயர நாள்!

### சோசலிசம் — என்றால் என்ன?

'சோசலிசச் சமுதாயம்' என்றால் என்ன? என்ற வினாவை உலக மக்கள் இடையே எழுப்பியவர் மார்க்ஸ் அவரது கட்டுரைகளின் ஒவ்வொரு எழுத்திலும்

மேடைகள் ஏறி அவர் முழக்கமிட்ட ஒவ்வொரு கூட்டத்திலும் அதற்குரிய விடைகளை விளக்கமளித்துப்பேசியவர் மார்க்ஸ்.

'முதலாளித்துவம் வீழ்த்தப்பட்டு, உற்பத்திச் சாதனங்கள் எல்லாம் அரசுடைமை ஆக்கப்பட்ட மக்களது சமுதாய அமைப்புதான் சோசலிசம்' என்று பதிலளித்தார் மார்க்ஸ்!

அத்தகைய ஓர் அற்புதச் சிந்தனையாளர்தான் தத்துவ ஞானிதான்—இங்கே உயிரற்ற உடலாகச் சாய்ந்து கிடக்கின்றார்!

எல்லார்க்கும் எல்லாம் இருக்கின்ற இடம் நோக்கி இந்த வையம் நடக்க வேண்டும் என்று ஆசைப்பட்டவர் தான் இந்த மார்க்ஸ் என்ற மேதை!

இவரது கனவு என்று நனவாகி, சமதர்மம் என்ற பூந்தோட்டத்தில் மக்களது வளவாழ்வு. நலவாழ்வு என்ற பூக்கள் பூத்துப் புதுமணம் வீசுகின்றதோ—அந்த நன்நாள் தான் சோசலிசம் மலர்ச்சி பெற்ற நாளாகும்.

டார்வினும்; மார்க்சும்

எவ்வாறு மனிதன் படிப்படியாக வளர்ந்தான் என்ற மனிதகுல பரிணாம வளர்ச்சியை; டார்வின் என்ற மேதை கண்டு பிடித்தான்!

மனிதகுல வரலாறு எவ்வாறு கால நிலைகளுக்கு ஏற்றவாறு வளர்ச்சிப் பெற்றது; என்பதைக் கண்டுணர்ந்த மாமேதை மார்க்ஸ்!

அந்த வரலாற்றுணர்வுடைய பேராசிரியர்தான்: இதோ நாய் புடை சூழ மரணமெனும் மஞ்சத்திலே துயில் கொண்டு இருக்கிறார்!

மரண மாதா அவரைத் தாலாட்டிக் கொண்டிருந்த இறுதிக் கட்டத்தில், சுமார் இரண்டே இரண்டு நிமிட

நேரம் மட்டும் தான், இந்த மனித குல மேம்பாட்டுக்குரிய உழைப்பாளியை, அமைதியாக, சிகிச்சைக்காகத் தனியாக விட்டு வைத்திருந்தோம்!

திரும்பி வந்து அந்த மகாஞானியை நாங்கள் பார்த்த போது, சமதர்மச் சிற்பியான மார்க்ஸ்; தனது நாற்காலியில் மௌன நிலையில் — மௌனமாக நீடு துயில் கொண்டு விட்டார்.

இனிமேல் எங்களிடம் ஏதும் கலந்துரையாட முடியாத நிலையில்; தனது இறுதி நிலை மீளாத் தூக்கத்தில் ஆழ்ந்து விட்டார்!

உலகத் தொழிலாளர்களின் வளமான வாழ்வுக்குப் போராடிக் கொண்டிருந்த ஓர் உயிர்;

முதலாளித்துவத்தை எதிர்த்து, கம்யூனிசத்தைப் பரப்புவதற்காக அல்லும் பகலும் அயராது பாடுபட்ட ஓர் ஆன்மா:

இன்று ஓய்ந்து விட்டது!

மார்க்ஸ் மறைந்தது இந்த உலகுக்கு எவ்வளவு பெரிய நட்டம் என்று இப்போது அளந்து கூறமுடியாது.

மகத்தான இந்த அறிவுச் சக்தியின் அருமையை, பெருமையை, எதிர்காலத் தொழிலாளர்கள் உலகம் தனது அனுபவ வெற்றிகளால்தான் அதை அளந்து அறிவிக்க முடியும்!

அரசியல், அறிவியல், சமுதாயவியல், கலையியல், மதவியல், சமயவியல், வாணியல், ஆன்மிகவியல் என்ற ஒவ்வொன்றிலும், மக்கட் பிறப்பெடுத்த ஒவ்வொருவரும், அவ்வக்கால நிலைகளுக்கு ஏற்றவாறு அவரவர் சிந்தனைகளைச் செலுத்துவார்கள்.

ஆனால், வாழ்வதற்காகப் பிறவி எடுக்காத அவர்கள்: ஏதோ பிறந்ததற்காக வாழ்ந்தாக வேண்டுமே என்ற

கட்டாய நெருக்கடி நிலைக்குத் தள்ளப்பட்ட அவர்கள்; உண்ணவேண்டும்; உடுக்கவேண்டும்; உறையுள் வேண்டும்; குடிக்க வேண்டும்; குடும்பத்துடன் இருக்க வேண்டும் என்ற அன்றாடத் தேவைகளைத் தேடிஓடியாக வேண்டியவர்கள் ஆவர்."

அவற்றுக்கான தேவைகளை அவரவர் தகுதி, திறமைகளுக்கு ஏற்றவாறு, உற்பத்தி செய்து கொள்வதும்—அவற்றைப் பகிர்ந்து கொள்வதும்—அந்தந்தக் காலப் பொருளாதார அமைப்புகளுக்கு உகந்தவாறு நடந்து கொள்வதும்—அவரவர்களுக்கான அவசியமாகும்.

அத்தகைய பொருளாதார அமைப்புகளை அல்லது அதனதன் அரசியல் வளர்ச்சிகளைக் கொண்டே சட்டங்கள், கலைகள் மதக் கோட்பாடுகள், வசதி-வாய்ப்புகள் நன்மை—தீமைகள் எல்லாம் அமையும்!

இந்த அடிப்படைகளை ஆதாரமாகக் கொண்டு அந்தந்தக் காலத்து அரசியல் சூழ்நிலைகளை மக்கள் விமர்சிப்பார்கள்!—வியாக்கியானம் செய்வார்கள்!

## பனிப்படலமாக இருந்த தத்துவம்

இந்த வரலாற்று உண்மைகள், இதோ தனது இரு விழிகளையும் மூடிக்கொண்டு துயில் கொண்டிருக்கிறாரே எனது கெழுதகை நண்பர் மார்க்ஸ், அவனுடைய காலத்திற்கும் முன்னரே, தத்துவ உலகத்தில் பனிப்படலங்களாக மறைந்து கொண்டுதான் இருந்தன!

மாண்டு கிடக்கும் எனது மாண்புமிகு நண்பன் கார்ல் மார்க்ஸ்தான், அந்த பனிப்படலத் தத்துவத்திற்கு சூரியனாகத் தோன்றி வெளிச்சம் வீசி உண்மை என்னஎன்பதை உலகுக்கு உணர்த்தினான்!

சாவின் தோள்களிலே சாய்ந்து கிடக்கும் எனது உயிர் ண்பருக்காக இதை நான் வலிந்து கூறவில்லை. தயவு

செய்து யாரும் அவ்வாறு எண்ண வேண்டாம், உண்மை ஒருநாள் உதறி உதைத்துக் கொண்டு வெளிவந்தே தீரும்.

அந்த மனசாட்சியால், சிதறும் கண்ணீர்த்துளிகளோடு இன்று சத்தியமிட்டுச் சொல்கிறேன்; கண்ணீர்த்துளிகள் என்றும் தோல்வி அடைந்ததில்லை.

இன்றுள்ள முதலாளித்துவத்தின் கீழ், இந்த பொருள் உற்பத்தி முறை எப்படி வளர்ந்திருக்கிறது?

அதனால், செல்வச் சீமான்கள், பிரபுக்கள், நிலச்சுவான்தாரர்கள் கூட்டம் எப்படி வளர முடிந்தது?

இந்தக் கேள்விக் குறிகளை முதன் முதலில் கேட்டவன் யார் தெரியுமா? இதோ படுத்துக் கொண்டு ஒன்றும் தெரியாதவர் போல நெடுந்துயில் கொண்டு விட்டாரே இதே கார்ல் மார்க்ஸ்தான்!

வினாக்களை விளித்ததோடு மட்டுமா நின்றார்? இதற்கான விடைகளையும் அவர்தான் கண்டு பிடித்தார்!

**சமதர்மம் கண்ட சான்றோன்!**

சவமாக இன்று சாவின் கரங்களிலே சிக்குண்டுகிடக்கும் அருமை நண்பா! எனது உயிரினும் மேலான உடன்பிறப்பே! திரட்டிய அறிவை எல்லாம் உனது ஆய்வுத் தினவுக்குத் தீனியாக வைத்து விட்ட சான்றோனே; இந்த அறிவியல் உண்மைகளை எல்லாம் முதன் முதலாகக் கண்டுபிடித்த அறிவியல் ஞானம்தான்; இந்த சமதர்ம விஞ்ஞானம் என்பதை எழுந்து வந்து நீர்சாற்றமாட்டீரா?—சாட்சியாக,

பொருள் உற்பத்தி முறையில் 'மிஞ்சிய மதிப்பு' (Surplus Value) எனும் புதியதொரு முதல் கண்டுபிடிப்பை, 'Invention' ஐ, கண்டு பிடித்த விஞ்ஞானியே நான்தான் என்று புலம்பும் என்போன்ற நெஞ்சங்களின் பொருமலை அடக்கிட எழுந்து வந்து பேசமாட்டாயா; நண்பரே!

மார்க்ஸ் கண்டு பிடித்த இக்கண்டுபிடிப்புக்குப் பிறகு தான், பொருளாதார உலகில் புதியதோர் அறிவொளி பூத்துப் பரவியது!

காரல் மார்க்ஸ் இதுபோன்ற பல கண்டு பிடிப்புக்களைப் பலதுறைகளிலே கண்டு ஆய்வு செய்துதான்- அவரால் எழுதப்பட்ட 'காபிடல்' என்ற மூலதனம் நூற் புதையலாகும்!

ஏதோ, இது ஒரு சடங்குக்கான தத்துவ ஆய்வாகக் கருதி மார்க்ஸ் செய்யவில்லை! தொழிலாளர் சமுதாயத்துக்குரிய வளம் வழங்கும்; நலம் நல்கும் சத்தியச்செயலான ஆய்வாகவே—இந்த பிணம் செய்திருக்கிறது!

மார்க்ஸ் ஒரு சமுதாய, பொருளாதார விஞ்ஞானி மட்டுமல்ல; அவர் பூதஉடல் இருக்கும் துயரமான இந்த நேரத்தில், இப்படிப் புகழ்க் கண்ணீரை அவருக்குச் சிந்துவதாலோ—சிதறுவதாலோ மட்டுமே நாம், அந்த ஞானப் பண்பாளரின் முழுநிலா ஒளிபோன்ற புதுப்புது ஆய்வுகளை அறிந்தவர்களாக, 'Marxian' தொண்டர்களாக ஆக மாட்டோம்.

**மார்க்ஸ் விஞ்ஞானம் என்றால் என்ன?**

மார்க்ஸ் விஞ்ஞானம என்னவென்றால், புதிய கொள் கைகளை; கோட்பாடுகளை தேடித் தேடி உருவாக்கும் பண்பு பெற்ற ஒரு வரலாற்றுப் புரட்சி சக்தியை உடையதே அவரது விஞ்ஞானம்!

அவர் சிறுவயது முதலே தத்துவ ஞானத்தை விரும்பியவர்!

அதனால், எந்தெந்த தத்துவத்தின் சார்பாக எதை யெதைக் கண்டு பிடித்தாலும் அவற்றை தனது உற்ற நண்பர்களிடமும் உலகத்திடமும் கூறி உற்சாகமடைவார்!

இவ்வாறு அவர் கண்டு பிடித்த மற்ற எல்லாவற்றையும் விட, அவர் மிகப் பெரும் களிப்பு பெற்றது எதிலே என்றால்; தொழில் வளர்ச்சி, சரித்திர வளர்ச்சி முதலிய சம்பவங்களில் புரட்சிகரமான மாற்றங்களை உருவாக்கக் கூடிய சில உண்மைகளைக் கண்டு பிடித்தபோதுதான்.

எடுத்துக்காட்டாக, மின்சார சக்தியைப் பற்றி அவர் ஆய்வு செய்த போதும், மார்சல் டெப்ரஸ் (Marcel Deperz) கண்டுபிடிப்புப் பற்றி உழைத்த போதும், இடைவிடாமல் அதற்காக அக்கறை காட்டி ஆய்வு செய்த போதும் பெரு மகிழ்வடைந்தார்!

மார்க்ஸ் ஒரு புரட்சிவாதி

மார்க்ஸ் விஞ்ஞானி மட்டுமன்று; அவர் ஒரு புரட்சி வாதி! முதலாளித்துவத்தின் கீழ் உருவாகியுள்ள சமுதாய அமைப்பு. அதன்மீது எழுப்பப்பட்டுள்ள அரசு சம்பந்தப் பட்ட நிர்வாக நிறுவனங்கள் ஆகியனவற்றை ஆணி வேரோடு வீழ்த்திட வேண்டும் என்ற சிந்தனையிலே அவர் கோடை சூரியனாக மாறி முதலாளித்துவ அமைப்பு முறைகளைச் சுட்டெரித்த சிந்தனையாளரானார்!

இத்தகைய ஒரு கடுமையான வீழ்ச்சியை அதற்கு விளைவிக்க; தொழிலாளர் இயக்கங்கள் எந்த வகையிலாவது, யாருடனாவது ஒத்துழைக்க வேண்டும் என்ற கருத்துப்போராட்டத்திலே அவர் கடுமையான கதிரவனாக நின்றார்!

தொழிலாளர்களுக்கு விடுதலையும் வேண்டும்; அதற்காகவும்கூட, தொழிலாளர் இயக்கங்கள் யாருடனாவது, எந்த வகையிலாவது ஒத்துழைப்புப் பெற வேண்டும் என்ற சிந்தனையிலே அவர் சித்திரை மாத அக்னிகோண அருணனானார்.

## தொழிலாளிக்கு என்றே ஒரு தனி சித்தாந்தம்

"சமுதாய வாழ்க்கையிலே தொழிலாளர்களுக்கு என்று தனியான ஒரு தகுதி வேண்டும் என்றார். ஆனால், அவர்கள் விடுதலை பெறுவதற்கு முன், 'தாங்கள் யார்?' என்ற தகுதியை முதலில் உணர வேண்டும்." என்ற தொழிலாளர்கள் சித்தாந்தத்தை முதன்முதலாக உலகுக்கு எடுத்துக் காட்டி உணர்த்தியவர் இதோ இந்த மார்க்ஸ் என்ற மகத்தான ஞானிதான்!

மார்க்ஸ் என்றாலே, அவர் ஓர் ஓயாத போராட்டக் காரர் என்று மக்களால் மதிக்கப்பட்டவர் மார்க்ஸ்! உற்சாகத்தோடும், உறுதியோடும், உணர்வோடும் ஒன்றை எதிர்த்துப் போராடி, வெற்றி தோல்வி காண்பதே அவரது பிறப்பின் பண்பு!

பத்திரிகைத் துறைதான் அவரது உயிர் நாடி அவர், எழுத்தின் மீது பகை படையெனத் திரண்டாலும் அதை எதிர்த்து நின்று பகலோன்போல பகையைத் தீய்த்துக் கருக்கிச் சாம்பலாக்குவார்!

அவரைத்தேடி அரசு தடைகள் வரும்! மீறுவார்! அதிகாரிகள் நாடு கடத்துவார்கள்—ஓடுவார்! எல்லை விட்டு எல்லை தேடி ஓடிக்கொண்டே பத்திரிகை சுதந்திர திற்காக உழைப்பார்!

பொருளாதார முடை கடை விரிக்கும்! பொதுமக்கள் இடையிலும், தொழிலாளர் மத்தியிலும் நீதி கேட்பார் மீண்டும் பத்திரிகை நடத்துவார்! மீண்டும் நாடு விட்டு நாடு ஓடுவார்.

நண்பர்கள் நய வஞ்சக வலை விரிப்புக் கண்டு நகைப் பார்! தொழிலாளர்கள் மீது எதேச்சாதிகார அரசு தொடுக்கும் பொய் வழக்கை எதிர்த்து நீதிமன்றத்தின் நெடிய படிக்கட்டுகளை ஏறி ஏறி இறங்குவார்!

சிறை, அபராதத் தொகை, பொய் வழக்கு விசாரணைகள் எல்லாம் அவரது கொள்கைக்கு முன்பு ஒரு பொழுது போக்காகவே இருந்தன.

தனது அன்பான மனைவி ஜென்னி மீது பொய் வழக்குப் போட்டது அரசு, அந்த மாதர்குல ராணியை விபச்சாரிகள் அறையிலே இரவெல்லாம் பூட்டி வைத்தது! மார்க்ஸ் அதைத் தனது லட்சிய வெறி முன்பு பறந்தோடிய தூசு துரும்பாக மதித்தார்!

இமயம் போன்ற இவ்வளவு தொல்லைகளையும் துயரங்களையும், வேதனைகளையும், சோதனைகளையும் மார்க்ஸ் ஏன் ஏற்றார்?

சுயேச்சாதிகார அரசுகளின், முதலாளித்துவக் கோட்பாடுகளைச் சிங்கம் போல் நின்று பத்திரிகை எழுத்துக்கள் மூலமாக கர்ஜித்தார் என்றார்!

ஏகாதிபத்திய ஆட்சியின் கொடுமைகளைக் கண்டித்து மேடைகளிலே முழக்கமிட்டார் என்ற கருத்துக்களுக்காகத் தான்!

தர்க்கரீதியான சோசலிச வாதங்களை, கருத்துக்களைத் தொழிலாளர் சங்கங்களுக்குப் பயிற்சிக் கொடுத்து போதித்தார் என்பதற்காகவேதான்!

இவ்வளவு கொடுமைகளையும் தனி ஒரு மனிதனாக நின்றே போராடி எதிர்த்தார்! ஏற்றார் தண்டனைகளை!

இவை போன்ற அக்ரமங்களை மீறித்தான், ஜெர்மன், ஃபிரான்ஸ், ஃபிரஸ்ஸெல்ஸ், லண்டன், கோலோன் போன்ற நகர்களிலே எல்லாம் தொழிற்சங்கங்களை அமைத்தான்!

சர்வ தேசத் தொழிலாளர் சங்கம் அமைத்தான்

இவை அனைத்துக்கும் மேலாக, அன்றுவரை இந்த உலகமே கண்டும் கேட்டுமிராத, செயற்கரியதோர்

செயலாக, சர்வதேசத் தொழிலாளர்கள் சங்கம் என்ற ஓர் அமைப்பை உருவாக்கிக் காட்டினவர்தான் — இதோ இந்த மார்க்ஸ்!

இந்த ஓர் அரிய சாதனையையே, அவர் தனது வாணாளில் தொழிலாளர்களுக்காக சாதித்துக் காட்டிய மகத்தானதோர் பணி என்று மார்க்ஸ் கூறிப் பெருமை பட்டுக் கொண்டு இருக்கலாம்!

செய்தாரா மார்க்ஸ்? இல்லையே! ஏன்? எதையும் எண்ணியெண்ணிச் செயல்படும் மக்கள் இதனையும் சிந்தித்துப்பார்க்க வேண்டாமா? இந்த நெஞ்சுரமிக்க செயலுக்காக, இந்த உலகம் அவரை எவ்வளவு பாராட்டி னாலும் தகுமா? தகாதா?

தொழிலாளர் உலகுக்காக, சோசலிச சமுதாயம் அமைப்பதற்காக, கம்யூனிசத் தத்துவப் பாதையிலே உலக மக்கள் சமுதாயம்! ஏறுநடை போட்டு தொழிலா ளர்கள் சுயமரியாதை, தன்மான வளவாழ்வு வாழ வேண்டும் என்ற பேராசைக்காக, மார்க்ஸ் பெற்ற பரிசு என்ன?

பலர் முன்பு பரிகாசம் செய்யப் பட்டார்! கேலிப் பொருளானார்! கேவலமாகப் பேசப் பட்டார்! ஊர் ஊராகத் துரத்தப்பட்டார்! அவர் ஓடும் இடங்களிலே எல்லாம் கிண்டலுக்குப் பலியானார்! அவருக்கென்று இருந்த தன்மானம், கௌரவம், சுயமரியாதை, படிப்பு, அறிவு, புகழ், உழைப்பு, சாதனைகள், அனைத்துமே பலரிடம் அவமானப்பட்டன! பொதுச் சேவை புரிபவனுக்கு இவற்றை விடவா கொடுமைகள் வேண்டும்?

அந்தந்த நாட்டு வசைகளை வசவாளர்களை, நய வஞ்சக ஆள்காட்டிகளை, அவர்களது சதிகளை எல்லாம் பெரிதாக மதியாமல் வீட்டுக்குள்ளே ஒதுக்கப்படும் ஒட்ட டைகளைப் போல ஒதுக்கித் தள்ளி விட்டு, தனது பணி களிலே மேல் நோக்கி நடந்தான்!

**சுட்டெரிக்கும் சூரியன்; கார்ல் மார்க்ஸ்!**

இவ்வளவு கொடுமைகளையும் இழைத்த சுயேட்சாதிகார அரசுக்கு சூரியனாக நடமாடி, அதன் தொழிலாளர் விரோத அக்கிரம நடவடிக்கைகளை எதிர்த்துக் கோடை வெப்பமாகச் சுட்டெரித்தான்.

குடியரசு ஆட்சி என்ற பெயரில் வரம்பு மீறி அரசு அதிகாரிகள் செய்த கொடுங் கோன்மைகளை மேடையிலே வலம் வந்து வந்து தினகரனைப் போல தீய்த்தான்!

முதலாளிகள், தீவிரவாதிகள், மிதவாதிகள் எல்லோரும் ஒன்று கூடி போட்டிப் போட்டுக் கொண்டு மார்க்சை எதிர்த்த போது, சித்திரைமாதக் கோடையின் கோபாவேச அக்னிபோல காய்ந்து, அவர்களது தொழிலாளர் விரோத ஆணவ உணர்வுகளைச் கருண்டு விழ வைத்தார்.

**மறைந்தார் மார்க்ஸ்!**

எந்த தொழிலாளர் உலகுக்காக தன்னையே தியாகம் செய்து போராடினாரோ- அந்த உண்மையான உணர்வுகளே, ஐரோப்பாவின் கிழக்குக் கோடியில், சைபீரியப் பகுதியிலே பணியாற்றும் சுரங்கத் தொழிலாளர்கள் மார்க்சை மதித்தார்கள்! பின்பற்றினார்கள்! அவர்களை எல்லாம் இன்று துயரக் கண்ணீர் விடவைத்து விட்டு மறைந்து போனார் மார்க்ஸ்!

இரவு-பகல், ஊன் உறக்கம்; வேதனை சோதனை; துன்பம் துயரம், அமைதி அலைச்சல் என்ற பேதங்களை எல்லாம் பாராமல், தன்னையே நம்பி உழைத்து, உடல், பொருள், ஆவிகளை யாருக்காகத் தியாகம் செய் தாரோ, அவற்றின் அருமைகளை மனசாட்சியோடு அனுபவித்துப் பெருமையோடு மார்க்சை பின்பற்றிய அமெரிக்கா, கலி போர்னியா, கடலோரத் தொழிலாளர்கள் இன்று கதறிக் கண்ணீர் விட்டு அழுது கொண்டிருப்பதைப் பார்க்கிறோம்.

இதோ அவர்களது இரங்கல் உணர்வுள்ள மாலை, மரியா தைகளின் சோகச் சின்னங்கள்!

**கம்யூனிசத்தின் தந்தை மார்க்ஸ்**

தொழிலாளர் உலகுக்கு நன்று ஆற்றப் புறப்பட்ட இந்த அறிவு நாயகருக்கு, மனித நேய மாண்பாளர்க்கு சோசலிச, கம்யூனிச விரோதிகள் ஏராளமாக இருக்கிறார் கள். கல்லறையாகப் போகும் ஒரு கண்ணியவானைக் காரித் துப்புவதோ, களங்கப் படுத்துவதோ, அவர் கல்லறை மீது விழும் எச்சிலாகும் என்பதை இனிகல்லறையாகப் போகும் ஆன்மாக்களுக்கு; அழகாகாது மனிதனுக்கு அருமை மனி தன் தான் என்ற பண்பாட்டின்படி இன்று அவருக்கு விரோதி எவரும் இருக்கமாட்டார்.

சுருக்கமாகச் சொல்வதானால்; மார்க்ஸ் ஒரு மனிதாபி மானி! தொழிலாளர்தோழன்! சோசலிசச் சமுதாயச்சிற்பி! கம்யூனிசத்தின் தந்தை! ஏழைகளின் ஏக்கக்குரல்! சமதர்மம் தத்துவத்தின் ஆசான்! நான் அந்த சூரியனிடத்திலே ஒளி பெற்றச் சந்திரனைப் போல வாழ்ந்து கொண்டிருப்பவனா வேன்!

எனது அரிய நண்பனே! மார்க்ஸ் என்ற மனிதநேயமே நீ எனக்கு 1867-ம் ஆண்டு எழுதிய நட்புநேய நன்றி நய உணர்வை எனது கண்ணீ உரையாக உனது காலடியிலே காணிக்கையாக்குகிறேன்.

**மார்க்ஸ் கடிதமே எனக்குப் புகழுரை!**

எனது அரிய நண்பா! எங்கல்சே! காபிடல் புத்தகத்தின் முதல் பாகம் அச்சாகி முடிந்தது; இதற்கு நீ ஒருவனே கார ணம். எனது நன்றியை ஏற்றுக் கொள் நண்பா.

எனக்காக நீ தியாகம் செய்திரா விட்டால் காபிடலின் மூன்று பாகங்களையும் நான் தயாரிக்க முடியாது.

வணக்கத்தோடு நெஞ்சார உன்னைக் கட்டிப்பிடித்துத் தழுவி உன்மீது அன்பு மலரைத் தூவுகின்றேன். என் உயிருக்கு உயிரான நண்பனே! உண்மையான பாசத்தின் ஊற்றுக் கண்ணே! உன்னை வாழ்த்துகிறேன்; வாழ்க எங்கல்ஸ்"

உனது அன்பன்
கார்ல் மார்க்ஸ்

—என்று அன்று என்னை மனமார வாழ்த்திய மார்க்ஸ் என்ற தத்துவப் பெட்டகமே! ஆய்வுச் சுரங்கமே! சோசலிச அறிவுப் புதையலே! என்று இனி காண்போம் நாங்கள் உன்னை!

நெஞ்சாரப் போற்றி உன்னை வணங்குகிறேன் நண்பா! நீ விட்டுச் சென்ற பணியை நான் தொடர்ந்து ஆற்றுவேன்! உனது புகழுக்கும் பெயருக்கும், தொழிலாளர் உலகத்துத் தொண்டுக்கும் நான் என்றும் நன்றியுடையவனாக நடமாடுவேன்!

**பன்னூறாண்டு தாண்டியும் மார்க்ஸ் வாழ்வார்**

நண்பர்களே!

கார்ல் மார்க்ஸ் வாழ்ந்த வாழ்க்கையும், தொழிலாளர் உலகுத் தொண்டுகளும், அதற்காக அவர் ஆற்றிய அரிய சேவைகளும், வரப்போகும் பல நூறு ஆண்டுகளைத் தாண்டியும் உயிரோடு உலாவரும், வாழும்.

வெல்க மார்க்ஸ் தொண்டு! வளர்க 'சோசலிசம்' சமுதாயம் வாழ்க மார்க்சிய மாண்பு!

—என்று மார்க்சின் உயிரனைய நண்பன் எங்கல்ஸ், சமதர்மச் சிற்பியாக, மனித நேய ஞானியாக வாழ்ந்து—இறந்து, பூத உடலாக லண்டன் ஐகேட் இடுகாட்டில் அடக்கம் செய்யப்பட்ட போது ஓர் இரங்கலுரை ஆற்றினார்!

மயான மக்கள் கண்ணீர்த் துளிகள்

அந்த சோக உரை, விளக்கஉரை, புகழுரை, நன்றி யுரை, நட்புரையைக் கேட்ட, மார்க்ஸ் கோட்பாடுகளைப் பின் பற்றும் மார்க்சிய வாதிகள் அனைவரும் கண்ணீர்த் துளிகளைச் சிந்தி ஆற்றொணா சோக வேதனையுடன் திரும்பிச் சென்றார்கள்.

## 2 மார்க்ஸ் தலைவரா? வழிகாட்டியா?

உலக வரலாற்றில் உதித்த உன்னதமான அரசியல் தலைவர்கள், சிந்தனையாளர்கள், அறிவியல் அற்புதர்கள், வானியல் வித்தகர்கள், சமுதாயச் சிற்பிகள், பொருளா தாரப் பேரறிஞர்கள், மருத்துவ விற்பன்னர்கள், தத்துவ ஞானிகள் ஆன்மவியல் வழிகாட்டிகள், மதபோதகர்கள் எல்லாம், அவரவர் தகுதி திறமைகளுக்குரிய அறிவன் திருவிளையாடல்களுக்கு ஏற்ப மக்கள் இடையே மதிப்பும்-மரியாதையும் பெறுகிறார்கள்.

மக்களது மாண்பு மிகுவாழ்க்கைக்கும்,—சமுதாயத்தின் வளர்ச்சிக்கும், மனித குல வளமேம்பாட்டுத் திட்டங் களுக்கும் எந்த அளவு அந்த மேதைகளின் அறிவாற்றல் பயன்படுகின்றதோ அந்த அளவு அவர்கள் மக்கள் மனதிலே இடம் வகிக்கிறார்கள்! செல்வாக்கும் சொல் வாக்கும் பெற்று வரலாற்றில் இடம் பிடித்து விடுவதையும் பார்க்கின்றோம்!

காந்தியடிகள் வழிகாட்டியே

எடுத்துக்காட்டாகக் கூறுவதானால், இந்திய! விடுதலைக்கு அகிம்சை தத்துவத்தை அறப்போர் ஆயுத மாக்கி, கத்தியின்றி, ரத்தமின்றியுத்தம் தொடுத்து, தனது உடலையும்— உயிரையும்— உள்ளத்தையும் வருத்தி, இந்தியாவுக்கு விடுதலை பெற்றுத்தந்தவர் காந்தியடிகள்

காந்தியடிகளை வழிகாட்டியாக ஏற்ற அயல்நாட்டுத் தலைவர்கள் ஈழத்துக் காந்தி செல்வநாயகம், அமெரிக்கக் காந்தியாக வாழ்ந்த மார்ட்டின் லூதர்கிங், ஆப்ரிக்கக் காந்தியாக நடமாடும் நெல்சன் மண்டேலா. ஆகியோர் ஆவர்.

எனவே, அகிம்சை என்ற கொள்கைக்கும், கோட்பாடுகளுக்கும் அருவாய், கருவாய், உருவாய் வாழ்ந்துகாட்டிய மேதை காந்தியடிகள்! அதனால் அவர் உலகின் அசிம்சா தத்துவ ஒழுக்கங்களுக்குரிய வழிகாட்டியாய் இன்றும் வாழ்கின்றார்—அரசியல் உள்ளவரை வாழ்ந்து கொண்டே இருப்பார்.

காந்தியண்ணல் வாழ்ந்து காட்டிய அந்த வெற்றித் தத்துவத்தைப் பின்பற்றிய தலைவர்கள், அவரவர் நாடுகளில் தாம் ஏற்றுக் கொண்ட ஒரு கொள்கையை மக்களிடம் பரப்பிட உழைக்கும் உழைப்பாளிகள் போன்ற உத்தமத் தலைவர்கள் ஆவர்!

பெரியார்வழி காட்டி, அண்ணா தலைவர்

தந்தை பெரியார் Rationalism என்ற பகுத்தறிவுக் கோட்பாடுகளுக்குரிய வழிகாட்டி! அந்தக்குறிக்கோள்களை அரசியலில் நிறைவேற்றும் பணியாளர் தலைவர் பேரறிஞர் அண்ணா.

கிரேக்க நாட்டு சாக்ரட்டீஸ் இல்லையேல் பகுத்தறிவு வாதம் இல்லை! அதைநிலை நாட்ட அவர் நச்சுக் கோப்பையைப் பரிசாகப் பெற்றார்.

சாக்ரட்டீஸ் அறிவுக்கு இலக்கணமாக இயங்கியவர் ஞானி பிளேட்டோ பிளேட்டோவுக்கு இலக்கியமாக விளங்கியவர் அரிஸ்டாட்டில் என்ற பல்துறை வித்தக மேதை.

சீன நாட்டுக் கன்ஃபியூசியஸின் தத்துவ இலக்கணத்திற்குரிய இலக்கியத் தலைவர் சந்யாட்சென்.

இத்தாலியில் மாஜினி என்ற விடுதலை வித்தகர் இல்லையேல், கரிபால்டி என்ற அரசியல் தலைவர் சுதந்திர போராளியாக, உருவாக முடியாது.

காந்தியடிகள் இல்லையேல் பண்டிதநேரு என்ற தலைவர் இல்லை. நேரு இல்லையென்றால் இந்திரா காந்தி என்ற புரட்சித் தலைவி அரசியலில் தோன்றிட முடியாது.

இப்படியே ஒவ்வொரு துறைக்கும், ஒவ்வொரு நாட்டுக்கும் எடுத்துக்காட்டுக்கள் கூறி, அந்தந்த நாடு களுக்கும் அவரவர்கள் வெற்றி பெற்ற துறைகளுக்கும் ஏராளமான சான்றுகளை வாரி வழங்கலாம்; புத்தகம் இடம் இடம் தராதே!

**மார்க்ஸ் வழிகாட்டிய லெனின் ஸ்டாலின் தலைவர்கள்**

ஜெர்மன் நாட்டிலே தோன்றிய கார்ல் மார்க்ஸ் வழி காட்டி! அதே நாட்டில் பிறந்த ஃபிரடிரிக் எங்கல் தலைவர் இவர்கள் இருவரும் இல்லாவிட்டால், சோசலிசம். கம்யூ னிசம், சமதர்மம் போன்ற தத்துவ இயக்கங்களும், 'கேபிடல், என்ற 'மூலதனம்' நூலும் தோன்றி இராது.

ருஷ்ய நாட்டிலே மாவீரர் லெனின் தலைவர். அவர் இல்லையென்றால் மார்க்சீயம் அங்கே சென்று ஆட்சி புரிந்திருக்காது. லெனினுக்குப் பிறகு ஸ்டாலின் என்ற தலைவர் உருவாகியிராவிட்டால், மார்க்சிசம் அங்கே கோட்டை கட்டி நீண்ட நாள் நீடித்திருக்க முடியாது.

**மகாவீரர், புத்தர், ஏசு நம் வழிகாட்டிகளே!**

இயேசு நாதர் தோன்றி இரண்டாயிரம் ஆண்டுகளா னாலும், புத்தர் பிறந்து இரண்டாயிரத்து ஐந்நூறு ஆண்டு களானாலும், மகாவீரர் அவதரித்து ஏறத்தாழ அதே ஆண்டுகளானாலும், இந்த முப்பெரும் மதங்களுக்கும் கருவாக விளங்கிய புத்தர், மகாவீரர், இயேசு ஆகிய மூவருமே மதவியல் வழிகாட்டிகளே ஆவர்!

இம்மூன்று மதங்களுக்குப் பிறகு ஆயிரத்து முன்னூறு ஆண்டுகளுக்கு முன்பு தோன்றிய இஸ்லாம் மதத்திற்கு வழிகாட்டியாக வாழ்ந்தவர் நபிகள் நாயகம்.

இந்த நான்கு மதங்களும் உலகப் பெரும் பகுதிகளில் வாழ்கின்றன! தங்களது வழிகாட்டிகள் கூறிச் சென்ற நெறிகளை அந்தந்த நாடுகளிலே உள்ள பாதிரிமார்கள், ஹாஜிக்கள், லாமாக்கள், ஜெயின் குருக்கள் அனைவரும் தலைவர்களாக நின்றுப் பணியாற்றி, தத்தமது குறிக்கோள்களோடு அந்த நெறிகளை இன்றும் வளர்த்து வருவதைப் பார்க்கின்றோம்.

**தீர்க்கதரிசிகள் கர்ம வீரர்களல்ல**

இந்த வரலாற்றுக்குறிப்புகளை நாம் ஆழ்ந்து நோக்கும் போது, தீர்க்கத்தரிசிகள் எல்லோரும் கர்மவீரர்களாக இருக்க வேண்டும் என்பதில்லை! மக்களுக்கும் கூறவேண்டியதைக் கூறிவிட்டு அவர்களும் மறைந்து விடுகிறார்கள்.

மக்களுக்குரிய நெறிகளைச் சொல்லிவிட்டு, அவற்றை எந்தெந்த குறிக்கோள்களோடு வளர்க்க வேண்டும் என்ற வழிகளையும் காட்டி விட்டாலே போதுமானது. அதற்காக வேறு வேறு தலைவர்கள் தேர்வு செய்யப்பட்டு அவர்கள் அந்தந்த மக்களை அன்றாடம் வழி நடத்துகிறார்கள்.

இவர்களைப் போலவே, காரல் மார்க்சும் ஒரு வழிகாட்டியாகவே வாழ்ந்தார்! புதுப்புதுக் கருத்துக்களின் பிரிவுகளோடு அந்தந்த மதங்களும் கருவாக உயிர்த்தது போல், மார்க்சினுடைய மார்க்சியம் அன்றுவரை உலகு உணராத புதுக்கருத்தாகவே தோற்றுவித்தார்! அவர் அதற்கு வழிகாட்டியாக வாழ்ந்ததோடு தனது கருத்தை மக்கள் இடையே வழி நடத்தியும் சென்றவர் மார்க்ஸ்.

எனவே, கி.பி. பத்தொன்பதாம் நூற்றாண்டை சிந்தனையாளர்கள் தோன்றிய சிந்தனையாளர் நூற்றாண்டு என்று பெருமையோடு பெயரிட்டு அழைக்கலாம்.

அந்த நூற்றாண்டில் தோன்றிய மிகப் பெரிய சிந்தனையாளர்களுள் ஒருவன் காரல் மார்க்ஸ்! இவன் ஜெர்மன் நாட்டு எல்லை, ஃபிரான்ஸ நாட்டு எல்லைகள் சந்திக்கும் ரைன் லாந்து என்ற இடத்திலே உள்ள டிரியர் என்ற கிராமத்திலே பிறந்தார்.

மார்க்ஸ் இனத்தால் யூதர்; அதுவும் புரோகிதர் பரம்பரையைச் சேர்ந்தவர்! மதத்தால் அவர் கிறித்துவர்! தந்தையின் பெயர் ஹீர்ஷெல் மார்க்ஸ்! அவர் வழக்குரைஞராகப் பணியாற்றிவந்தார்! தாயார் டச்சு நாட்டைச் சேர்ந்த பெண்; பெயர் ஹென்ரிட்டே!

ஹீர்ஷெல் மார்க்ஸ் 1824-ம் ஆண்டு தனது மனைவியுடனும்-எட்டு குழந்தைகளுடனும் கத்தோலிக்கக் கிறித்துவ மதப்பிரிவில் அவர்கள் சேர்ந்தார். குடும்பம் நடத்தப் போதிய வருவாய் இல்லாததால் ஹிர்ஷெல் மார்க்ஸ் ஹைறின் மார்க்ஸ் என்ற பெயரோடு மதம் மாறினார்! மதம் மாறியதற்குப் பிறகு அவரது குடும்பம் நல்ல வருவாயுடன் வளமாக வாழ ஆரம்பித்தது.

யூத, கிறித்துவ இனக்கலப்பே மார்க்ஸ்!

இந்த யூத, கிறித்துவக் கலப்பு மதத் தம்பதிகளுக்கு 1818-ம் ஆண்டு, மே மாதம், 5-ம் நாள் இரவு ஒன்றரை மணிக்கு பிறந்தார் கார்ல் மார்க்ஸ்என்ற மனிதகுல ஞானி! மார்க்சுக்கு ஐந்து சகோதரிகள், இரண்டு சகோதரர்கள் அவருடன் பிறந்தார்கள்.

இந்த எண்வரிலே நான்கு பேர் சிறுவயதிலேயே, அவர்களது குடும்ப நோயான காச நோய்க்குப் பலியா

னார்கள். மீதியுள்ள மூன்று பெண்களுக்கும் திருமணமாகி அவர்கள், வெவ்வேறு, ஊர்களில் வாழ்ந்து வந்தார்கள்.

மார்க்ஸ்—தந்தை விசுவாசி; காரணம், தகப்பன் மகன் என்ற குடும்ப உறவாக இல்லாமல், நல்லதொரு நண்பனை போல அவர் தனது மகனை வளர்த்து வந்ததால் தான்.

ஆரம்பப் பள்ளியில் மார்க்சைச் சேர்த்தார் தந்தை! அந்த படிப்பு முடிந்ததும்-அதே ஊரில் உள்ள உயர்நிலை பள்ளியிலும் சேர்த்தார்கள். அந்த பள்ளியிலே கல்வி பயிலும் போதே லத்தீன், கிரீக், ஜெர்மன், பிரெஞ்சு போன்ற மொழிகளிலே வல்லவனானார்!

**சிறுவயதிலே கவி பாடும் ஆற்றலர்!**

சிறுவயதிலே கவிபாடும் திறமை மார்ச்சுக்கு இருந்தது யாரையாவது பாராட்டுவதானாலும்—வசை பாடுவதானா லும் பாட்டாகவே பாடி கேலி செய்து விடுவார். இந்த கவிபாடும் ஆற்றலிலே எப்படியோ தனது திறமையை வளர்த்துக் கொண்டார்.

உயர்நிலைப் பள்ளிக் கல்வி முடிந்ததும் மார்க்ஸ் பான் என்ற பல்கலைக்கழகத்திலே 1835ல் சேர்ந்தார்.

பான் பல்கலைக் கழகம் அருகே ஓர் அறையை வாட கைக்கு எடுத்துத் தங்கிக் கொண்டு மாக்ர்ஸ் படித்து வந்தார். பிறமாணவர்கள்—நல்ல மாணவனைச் சும்மாவா விடுவார்கள்? தங்களுடைய மாணவர் சங்கத்திற்கே அவரைத் தலைவராகவும் உருவாக்கி விட்டார்கள்.

மாணவர் சங்கத் தலைவராக மாறியதும் மார்க்ஸ் கல்வி மீது முன்பு போல் கவனம் செலுத்துவது இல்லை. இந்த லட்சணத்தில் அந்த சங்கமே குடிகாரர்கள் சங்கமாக மாறிவிட்டது? தலைவர் மட்டும் குடிக்காமல் இருக்க முடியுமா.

மார்க்சும் குடித்தார்! அதனால் ஒருநாள் சிறைவாசம் கூட அனுபவித்தார்! இந்தச் செலவுகள் அதிகமானதால் அவருக்கு வழக்கமாகத் தந்தை அனுப்பிய பணம் போத வில்லை. அதனால், கண்டவர்களிடமும் கடன் வாங்கிச் செலவு செய்யும் பழக்கம் அவருக்கு ஏற்பட்டது-கடனாளி யானார்!

இந்தச் சீர்கேடுகளைக் கேள்விப் பட்ட மார்க்ஸ் தந்தை, தனது மகனை வேறிடத்திற்கு, மேற்படிப்புக்கு அனுப்பப் போவதாக பல்கலைக்கழக மேலாளர்களுக்கு கடிதம் எழுதி, மார்க்சைப் பல்கலைக்கழகத்திலே இருந்து விலக்கிக் கொண்டார்.

## 3. ஹெகல் தத்துவமும் காதல் வாழ்க்கையும்!

பான் பல்கலைக் கழகக் கல்வியை விட்டு விலகிய மார்க்ஸ், தனது சொந்த ஊரான டிரியரில் தங்கி இருந்த போது, தனது பக்கத்து வீட்டுப் பெண்ணான ஜென்னி என்பவளுடன் காதல் ஏற்பட்டது. அவள் செல்வச் செழிப் புள்ள பணக்காரர் வீட்டுப் பெண்!

ஜென்னியின் தகப்பனார் பெயர், லட்விக்வான் வெஸ்ட் பாலன். இவர் ஜெர்மன் நாட்டு அரசியலில் பணி புரியும் ஒரு பணியாளர். இவருக்கு நிரந்தரமான வருமா னமும், முன்னோர்கள் சேர்த்து வைத்துள்ள செல்வமும், அதற்குரிய மதிப்பும் மரியாதையும் இருந்தது. இவருடைய பெண் ஜென்னி, மார்க்சைவிட நான்கு வயது பெரியவள்.

**மார்க்ஸ்-ஜென்னி காதல் பாசம்!**

மார்க்ஸ் குடும்பமும்-ஜென்னி குடும்பமும் பக்கத்து பக்கத்து வீடுகளிலே வாழ்ந்து வந்ததால்; இரண்டு குடும் பங்களும்-இணைபிரியா, பழக்க வழக்கங்களோடு பழகி

வந்தார்கள். அதனால் ஜென்னியுடன் மார்க்சுக்குத் தொடர்பும், காதல் அரும்பும் வாய்ப்பும் ஏற்பட்டு விட்டது.

ஜென்னியின் தந்தை கிரேக்க இலக்கியப் பித்தர்; சேக்ஷ்பியர் எழுதிய நூல்களின் அபிமானி! மார்க்சோ இளமையிலே கவி பாடும் கவிதைப் பிரியன். அதனால் இருவருக்கும் அதிகமான பற்றும் பாசமும் உருவாயிற்று.

இலக்கிய சர்சைகளிலும், தத்துவ விவாதங்களிலும் ஜென்னியின் தந்தையும் மார்க்சும் ஈடுபட்டு வாதப் பிரதி வாதங்கள் சூடாக எழுகின்ற நேரங்களிலே எல்லாம், ஜென்னி குளிர்நிலவாக இடையிலே நுழைந்து அந்த இரு வரின் வெப்பத்தைத் தணிப்பாள்.

ஜென்னி அழகே உருவான் அமைதியான பெண்; கல்வி அறிவு நிரம்பப் பெற்றவள்: பண்புள்ள பாவை; பார்ப்பதற்கு கவர்ச்சியானத் தோற்றம், வாதம் புரிபவர் களை அடக்கும் வல்லமை பெற்ற அறிவும் உடையவள். அதனால், இவர்களது வாக்குவாதங்களைத் தணித்து அடக்கும் போது, மார்க்ஸ், அவள் மகுடிமுன் அடங்கும் நாகம் போலாகி விடுவார். இந்த வகையிலும் மார்க்சும்-ஜென்னியும் ஒருவரை ஒருவர் நேசித்துப் புரிந்து கொண்ட அன்பரானார்கள்.

இந்த அன்பு நாளொருமேனியும் பொழுதொரு வண்ணமுமாக வளர்ந்து கொண்டே வந்ததை மார்க்சின் தந்தை புரிந்து கொண்டார். இருந்தாலும், ஜென்னிக்கும் மார்க்சுக்கும் உள்ள எல்லா சுபாவங்களும், குடும்பத் தகுதிகளும் மலைக்கும் மடுவும் போல் உள்ளதை எண்ணி. இவர்களுக்குத் திருமணம் நடந்தால் வளமாக, எவ்விதக் குறைவுமின்றி வாழ்க்கையை நடத்துவார்களா என்ற மனப் போராட்டம் மார்க்சின் தந்தைக்கு ஏற்பட்டது!

## கலப்பு மதம் ஏகசிய திருமணம்

இளம் வயதினர் அல்லவா ஜென்னியும்-மார்க்சும்? எப்படியும் திருமணம் செய்து கொள்வது என்ற முடிவுக்கும் அவர்கள் இருவரும் ஓர் ஒப்பந்தத்தை அவர்களே செய்து கொண்டார்கள்!

தந்தையின் மனக்குழப்பத்தைப் புரிந்து கொண்ட மார்க்ஸ், தானே சம்பாதித்துக் குடும்பத்தை நடத்துகின்ற நல்ல நிலை உருவாகும் வரை, ஜென்னியைப் பலர் அறியத் திருமணம் செய்து கொள்ளக் கூடாது என்ற முடிவுக்கு வந்தார்.

அந்த ஏக்கத்தோடு பெர்லின் பல்கலைக் கழகத்திலே படிக்கச் சென்றுவிட்டார் மார்க்ஸ். அவர் கல்வி முடிய ஏழு ஆண்டுகள் ஆயிற்று. அதுவரை ஜென்னி காலத்தையும் கணக்கிட்டவாறே அவள் காத்திருந்தாள். ஆனாலும் மார்க்ஸ் அடிக்கடி ஊர் திரும்புவதும், ஜென்னியோடு அள வளாவுவதையும் கண்ட டிரியர் ஊர் குரல் எழுப்பியது! உலைவாயை மூடலாம். ஊர் வாயை மூட முடியுமா? காதலர் இருவரும் இந்த ஊராரின் முணுமுணுப்புப் பேச்சுக்களைப் பொருட்படுத்தவில்லை. மார்க்ஸ் முன்பை விடமிக அக்கறையோடு இரவு பகலாக முயன்று படித்து முடித்தார்!

தத்துவம், சட்டம், வரலாறு, புவியியல், இலக்கியம்' போன்ற துறையிலே உள்ள பாடங்களை அவர் கற்ற போது, அவன் மனம் தத்துவப் படிப்பிலே மட்டும் தனியொரு ஆர்வத்தை எழுப்பியது! அதனால், அக்காலத்திலே புகழ் பெற்று விளங்கிய ஹெகல் என்ற தத்துவ ஞானியின் தத்துவங்களை ஆழ்ந்து கற்றார்.

## மார்க்ஸ் ஹெகலின் மாணவர்

சட்டம் படித்துத் தன்னைப் போல் ஒரு புகழ் பெற்ற வழக்குரைஞராக வருவார் மார்க்ஸ் என்ற தந்தை நம்பினார்

மார்க்ஸ் ஹெகல் தத்துவத்தைப் படித்து நிபுணரானது அவர் தந்தைக்குப் பெரும் மன வருத்தத்தையே அளித்தது தனது கருத்தை அடிக்கடி கடிதங்கள் மூலமாக எழுதிய மார்க்ஸை மனம் திருந்த எண்ணினார். அந்த முயற்சியிலே அவரது தந்தை தோல்வியே கண்டார்.

மார்க்ஸ் ஏன் ஹெகல் தத்துவத்தை விரும்பிப் படித்தார்? அக்காலகட்டத்தில் கல்வி அறிவு பெற்ற சான்றோர்கள் எல்லாம் அவர்களுக்கு எந்தப் பிரச்னைகளானாலும் ஹெகல் தத்துவத்தையே எடுத்துக் காட்டிப் பேசுமளவுக்கு ஹெகல் தத்துவம் மிகப்புகழ் பெற்றிருந்தது.

ஹெகல் தத்துவங்கள், மனிதன், அவனுடைய மனம், கடவுள், நாடுகளின் ஆட்சிகள், எண்ண வளர்ச்சி, பொருளாதார மேம்பாடு, அதற்கான காரண காரியத் தொடர்பு பற்றியே அதிகம் சிந்திக்க வைத்தன! அதனால் அவருடைய தத்துவ ஆய்வுகள் அனைவரிடமும் செல்வாக்குப் பெற்றிருந்ததை மார்க்ஸ் உணர்ந்தார்; படித்தார்; சிறந்த தத்துவ விளக்கப் போதகரானார்!

'மக்கட் சக்தியிலே இருந்து ஓர் அரசு உருவெடுத்தாலும், அந்த சக்தி தெய்வீகத் தன்மை உடையது' "என்றார் ஹெகல்".

'அந்த சக்திக்குக் கீழ்படிந்து நடக்க வேண்டியது மக்களது கடமை" என்றான் அந்த தத்துவஞானி!

'ஏனென்றால், அந்த தெய்வீகச் சக்தியுடைய அரசு செய்கின்ற செயல்கள் எதிலும் தவறு இருக்காது. என்றான் ஹெகல்.

**ஹெகலின் இரண்டு தத்துவ அணிகள்**

இந்த தத்துவ வாதத்தால் ஜெர்மன் நாட்டின் இளைஞர்களுக்கும்— முதியவர்களுக்கும் இடையே பெருத்தக்

குழப்பங்களே ஏற்பட்டன. வாதமேடைகள் மக்கள் இடையே பொறிபறக்க வெளிவந்தன.

'மனிதர்கள் அனைவரும் சம உரிமை உடைய சகோதரர்கள். நாடு, இனம், ஜாதி சம்பந்தமாக உருவா. கின்ற வேற்றுமைகள், கல்வி அறிவு இல்லாமையால் ஏற் படுகின்றன' என்ற எழுச்சி மிக்க எண்ணங்கள் இளைஞர் களிடையே வீறு பெற்று எழுந்திருந்தன.

இளைஞர்களது இந்த புதிய சிந்தனைகளுக்கும் ஹெகல் தத்துவ ஆராய்ச்சியில் போதிய ஆதரவு இருந்தது. 'அரச சக்தி, மக்கட் சக்தியிலே இருந்து தோன்றுவ தனால், அது மக்கட் சக்திக்கு விரோதமாக இருக்க முடியாது' என்று முழக்கமிட்ட இளைஞர் சக்திக்கு எதிராக, முதியவர்கள் திரண்ட சக்தி பெரும் எதிர்ப்பையே எழுப்பியது.

"எந்த அரசு, எப்போது ஆட்சி புரிகின்றதோ அந்த சக்தி மக்களுக்குத் தேவைப்படுவதனால்தான் இயங்கு கிறது. எனவே அந்த மக்கள் சக்தி தேவையானது. மட்டு மல்ல—நியாயமானது" என்று, மேற்கூறிய இளைஞர் சக்தியை எதிர்த்து முதியவர்கள் அணிசக்தி கூறியது.

இந்த இருபெரும் சக்திகளுக்கு இடையே உள்ள பேதங்கள் என்ன வென்றால், முதியவர்கள் அணி சக்தி, 'தற்போது உள்ள அரச சக்தியை மாற்றக் கூடாது; அதுவே இயங்க வேண்டும்" என்றார்கள்.

இளைஞர் அணி சக்தி, அந்த அரச சக்தி கூடாது; அந்த சக்தியிலே சில மாற்றங்கள் செய்தாக வேண்டும், என்று மூர்க்கத் தனமாக முழக்கம் செய்தது.

முதியவர்கள் சக்திக்கு 'முதிய ஹெகலியர்' என்றும்" இளைஞர்கள் சக்திக்கு, 'இளைய ஹெகலியர்' என்றும், இரு அணிகளாகப் பிரிந்து நாட்டில் குழப்ப வாதம் செய்து கொண்டிருந்தார்கள்.

இளைஞர் தத்துவ அணியில் மார்க்ஸ்

ஆனால், அந்த இரண்டு சக்திகளுக்கும் ஹெகல் தத்துவத்தையே எடுத்துக்காட்டி, எதிர்ப்பும்—மறுப்பும் செய்து வந்தார்கள்! இதுவே, ஹெகல் தத்துவ ஆராய்ச்சி அக்கால மக்கள் இடையே பெரும் செல்வாக்குப் பெற்றதற்குரிய காரண, காரியமாகும்.

இந்த இளைஞர் அணிக்கு ரூட்டென் பர்க், கோப்பன், பாவர் என்ற மூவர் தலைவர்களாக இருந்தார்கள்.

ரூட்டன் பெர்க் ஒரு பத்திரிகையாளன், கோப்பன் வரலாற்றாசிரியன், பாவர் ஆன்மிக வாதி. இந்த மூவர்களோடு, கார்ல் மார்க்சும் சேர்ந்து கொண்டான். தர்க்க வாதங்களை அடிச்சடி செய்து உண்மை என்ன என்பதைப் புரிந்து கொண்டான்.

இந்த காலக் கட்டத்தில், மார்க்ஸ் தந்தை ஹென்ரி மார்க்ஸ் 1838-ம் ஆண்டு காலமானார். அதனால், மார்க்சுக்கு பணக்கஷ்டம் நெருக்கியது! அன்புக் காதலி ஜென்னியும் தன் காதலனையே எண்ணி வருந்திக் கொண்டிருந்தாள்.

பல்கலைக் கழகப் படிப்பை முடித்துக் கொண்டு ஜீனா என்ற நகரிலே இருந்த ஒரு பல்கலைக் கழகத்திலே டாக்டர் பட்டமும் பெற்றார் மார்க்ஸ் தனது குடும்பத்தை நடத்த ஏதாவது ஒரு வேலை தேவை என்பதை உணர்ந்தார்! பணிதேடப் புறப்பட்டார்.

## 4. பத்திரிகைத் துறை போராட்டமும்-வாழ்வும்!

ஆசிரியர் துறையிலே இரண்டு வகைகள் உண்டு; ஒன்று, ஏட்டைக்காட்டும் ஆசிரியர் பணி! மற்றொன்று நாட்டை உருவாக்கும் அல்லது காட்டும் ஆசிரியர் பணி!

### ஏட்டைக்காட்டும் ஆசிரியர் பணி

ஏட்டைக் காட்டும் ஆசிரியர் பணிக்குப் போவது என்றால், படித்துப் பட்டம் பெற்றோ-அல்லது பெறாமல் நடுத்தரக் கல்வியோடு கல்வித் துறையில் சேர்ந்து, ஆரம்பப் பள்ளி முதல் பல்கலைக் கழகம் வரையுள்ள மாணவர் களுக்குக் கல்வி போதிக்கும் ஆசான் பணி அல்லது ஆசிரியர் வேலை.

### நாட்டைக் காட்டும் ஆசிரியர் பணி

மற்றொன்று, பத்திரிகைத் துறையிலே சேர்ந்து, பண்புள்ள மக்களை உருவாக்கி, நாட்டின் நலிவுகளை எடுத்துக்காட்டி அதைப் பொலிவுள்ள நாடாக மாற்றிக் காட்டிடும் நாட்டுப்பணி! அதாவது பத்திரிகை ஆசிரியர் பணி! இந்த, இரு வேறு துருவப் பணிகளிலே தன்னை எத்துறையில் ஈடுபடுத்திக் கொள்வது என்ற சிக்கலிலே மார்க்ஸ் சிந்தித்தான்!

பான் பல்கலைக் கழகத்திலே படிக்கும். போது, இதே கல்விக் கழகத்தில் தத்துவப் பேராசிரியராகச் சேர்ந்து பணியாற்றிட வேண்டும் என்று மார்க்ஸ் தனது கல்வி வாழ்க்கையின் போதே சிந்தித்தார்.

அந்தச் சிந்தனையின் எதிரொலியாகத்தான் அவர் தந்தை சட்டத் துறையைப் படி என்று வற்புறுத்தி வலி யுறுத்திக் கடிதங்கள் எழுதியபோதெல்லாம், அந்தத் துறையிலே மார்க்ஸ் அக்கறை காட்டாமல், தத்துவத் துறையிலே அதிகக் கவனம் செலுத்திப் படித்து வந்த தற்கும் ஒரு காரணமாகும்.

ஆன்மிகத் துறையிலே வித்தகனாக விளங்கிய பாவர் என்ற மார்க்சின் பல்கலைக் கழகத் தோழனும், மார்க்ஸ் தத்துவத்துறையிலே சேர்ந்து படிப்பதே நல்லது என்று அவனை திருப்தப்படுத்தினான்!

பான் பல்கலைக் கழகத்தில், பாவருக்கு ஓர் உதவித் தத்துவப் பேராசிரியர் பணி கிடைக்கும் என்றும், அந்த வேலையை மார்க்சுக்கு வழங்கிட விட்டுக் கொடுத்து விடுவதாகவும்; மார்க்சுக்கு நம்பிக்கை வாக்கைக் கொடுத்தான். அதனால் மார்க்ஸ், தத்துவத்துறையைத் தனது பாடமாக எடுத்துப் படித்துத் தேர்வு பெற்று நிபுணரானார் மற்றப்பாடங்களில், குறிப்பாக, சட்டத்துறையில் அக்கறை செலுத்தவில்லை.

சிந்திப்பவனுக்கு வேலை இல்லை

அப்போதைய ஜெர்மன். நாட்டில் கொடுங்கோல் ஆட்சி நடைபெற்றுக் கொண்டிருந்தது. ஹெகல் தத்துவ ஞானியைச் சேர்ந்த முதியவர்கள் சக்தி அணி ஆட்சி பீடத்தை ஆக்ரமித்துக் கொண்டிருந்தது. அவர்கள், அரசு பீடத்தையும், மதத்துறையினையும் சேர்ந்த தெய்வீக சக்திகளாகத் திகழ்ந்து கொண்டிருந்தவர்கள்.

மக்கள் சக்தியின் மீதும், அதனைச் சார்ந்த எண்ணங்கள் மீதும் தங்களது ஆதிக்கத்தைச் செலுத்தி ஆணவ—ஆர்ப்பாட்ட ஆட்சியை நடத்தி வந்தார்கள்.

இத்தகைய ஒரு கொடுமையான அரசியல் சுயமாகச் சிந்திக்கும் சிந்தனையாளர்களுக்கு எப்படி ஆசிரியர் வேலை கிடைக்கும்? இவர்களை நிலச்சுவான் தாரர்களும், செல்வச் சீமான்களும் வேறு ஆட்டிப்படைத்து அரசாட்சி புரிகிறார்களே!

முதியவர்கள் நடத்தும் இந்தக் கொடுங்கோல் ஆட்சியில் தெய்வீக சக்திகள் திரண்டிருக்கின்றன என்றும், இந்த ஆட்சிக்கு அடங்கி ஒடுங்கி நடப்பதுதான் மக்கள் கடமை என்றும் கொடுங்கோலர் மக்கள் இடையே பிரசாரம் வேறு செய்கிறார்கள்!

இவ்வாறு பிரச்சாரம் செய்வது வெறும் பித்தலாட்டம். பதவி வெறி; ஆணவப்போக்கு என்று ஹெகல் தத்துவ

ஞானிப் பிரிவைச் சேர்ந்த இளைஞர்கள் சக்தி எதிர்த்துக் கேட்டால், அவர்கள் மீது பொய் வழக்கும், நாடு கடத்தலும், அதிகார ஆர்ப்பாட்டமும் நடக்கின்றன. எனவே, இப்படிப்பட்ட ஓர் ஆட்சியிலே மார்க்சுக்கு எங்கே ஆசிரியர் பணி கிடைக்கும்? அதிலும், அவர் இளைஞர் அணி சாதியைச் சேர்ந்தவர் என்று விளம்பரமாகி விட்டவர் அல்லவா? அதனால், பான் பல்கலைக் கழகத்தில் தனக்கு ஆசிரியர் பணி கிடைக்காது என்று மார்க்ஸ் தீர்மானித்து, வேறு வேலை ஏதாவது தேடலாம் என்ற முயற்சியில் அலைந்தார்.

### பத்திரிகை ஆசிரியரானார்

இந்த அலைச்சலின் முடிவுதான்; பத்திரிகை ஒன்று ஆரம்பிக்கலாம் என்ற அவரது திட்டமாகும். அந்த திட்டத்தின் படி 1842-ம் ஆண்டு ஜனவரி மாதத்தில் 'ரைன் லாந்து கெசட்' என்ற பத்திரிகையிலே கட்டுரைகளை எழுதி வந்தார். சில மாதங்களுக்குப் பிறகு அப்பத்திரிகையின் ஆசிரியரானார். பத்திரிகையில் வரும் கட்டுரைகள் ஒவ்வொன்றையும், குறிப்பிட்ட அந்தந்த சம்பவங்களை நேரில் பார்த்து விட்டு வந்தே எழுதினார். அதன் முழுக்கருத்துக்களும் அவரது பார்வைக்குப் பிறகே அச்சேறின.

அரச அதிகாரிகள், சீமான்கள், பணக்காரர்கள், அரசியல் தீவிரவாதிகள் என்று பல தரப்பினரும் மார்க்ஸ் பத்திரிகையை ஓர் எழுத்து விடாமல் படிக்கும் அவசியம் ஏற்பட்டு விட்டதால், அதன் செல்வாக்கு அவர்களிடையே அதிகமாயின! பத்திரிகையும் நன்றாக விற்பனையாயிற்று.

### ஆட்சிக் கல்ல மக்கள்; மக்களுக்காக ஆட்சி

'ஆட்சிக்காகவே மக்கள் இருக்கிறார்கள் என்ற போக்கை மாற்றி, மக்களுக்காகவே ஆட்சி இருக்கிறது' என்ற கருத்தை வலியுறுத்தி மார்க்ஸ் அந்த பத்திரிகையை நடத்தி வந்தார்.

இதனால் அரசு கண் காணிப்பும், அதிகாரிகள் வேவு பார்க்கும் வேலையும் - நாளுக்கு நாள் அதிகமாகி, கண் காணிப்பு அதிகாரி ஒருவரையும் அரசு நியமித் தது. அவரு டைய மேற்பார்வை இல்லாமல் பத்திரிகையை வெளியிடக் கூடாது என்ற உத்தரவும் பிறப்பிக்கப்பட்டது.

ருஷ்யாவில் நடை பெறும் சுயேச்சாதிராக ஆட்சி முறையைக் கண்டனம் செய்து மார்க்ஸ் பத்திரிகையை வெளியிட்டார். அப்போது ஜெர்மன் அரசுக்கும் ருஷ்ய அரசுக்கும்நட்புக் கூட்டணி இருந்ததால், ருஷ்யா வைக் கண்டித்து எழுதக் கூடாது என்று உத்தரவிட்டது.

அரசு நிர்ப்பந்தங்களுக்கு உட்பட்டுத்தான் பத்திரிகை வெளிவர வேண்டும் என்று ஜெர்மன் அரசு பத்திரிகைச் சுதந்திரத்தைப் பறித்தது.

இந்த அரசு நிபந்தனையைத் தூக்கிஎறிந்தார் மார்க்ஸ்! பத்திரிகை ஆசிரியர் பதவியிலே இருந்தும் விலகி விட்டார். இதைக் கண்ட பத்திரிகை பங்குதாரரர்கள் மார்க்ஸ் ஏன் விலகினார் என்ற காரணத்தை அவரிடம் நேரிலேயே கேட் டார்கள். 'மக்கள் பிரதிநிதிகள் என்று கூறிக் கொண்டு சட்ட சபைக்குச் செல்பவர்களின் கடமைகள் என்ன? என்பதை விளக்கி எழுதினேன்.

ஜெர்மன் அரசின் சுயேச்சாதிகார அக்ரமத்தையும், அதன் சுயரூபத்தையும்' மக்களுக்குப் புரியுமாறு விளக்கி இருந்தேன். ஒரு பத்திரிகையின் நியாயமான கடமை எதுவோ அதைத்தான் எனது பத்திரிகையும் செய்தது.

அதற்காக ஓர் அரசு பத்திரிகையும் சுதந்திரத்தைப் பறிக்க; அதன் குரல் வளையை தனது அதிகாரத்தால் நெறிக்கும் போது என்னால் பார்த்துக் கொண்டிருக்கமுடிய வில்லை. அப்படிப்பட்ட பத்திரிகைக்கு ஆசிரியனாக இருப் பதை சும்மா இருப்பதே சுகம்'' என்று கூறினான் மார்க்ஸ்!

பத்திரிகை பணம் பறிக்கும் கருவியா?

பத்திரிகையைப் பணம் சம்பாதிப்பதற்கான ஒரு கருவியாக, வேறொரு வியாபாரத்தை விரிவு படுத்திக் கொள்வதற்கான ஒரு துணையாகப் பயன்படுத்தக் கூடாது என்பது மார்க்ஸ் கருத்து.

எந்த ஒரு பத்திரிகையும் தனது லட்சியத்தைக் கை விடக் கூடாது. வியாபாரத்தில் இறங்கி விடுகிற எந்தப் பத்திரிகையும் சுதந்திரமாக இருக்க முடியாது. பத்திரிகை ஆசிரியன் பணம் சம்பாதிக்க வேண்டியதுதான். எதற்காக சம்பாதிக்க வேண்டும்? உயிர் வாழ்வதற்காக சம்பாதிக்கலாம். தொடர்ந்து எழுதுவதற்காக பத்திரிகை இருக்க வேண்டுமே; அதற்காகவும் பணம் சம்பாதிக்கலாம். ஆனால், பணம் கொள்ளையடிக்கவும், சுயநல வாழ்க்கையை விருத்தி செய்து கொள்வதற்காகவும்—பத்திரிகையை ஒரு கருவியாகப் பயன்படுத்தக் கூடாது.

எவன் ஒருவன் பணம் கொள்ளையடிக்கப் பத்திரிகையைப் பயன்படுத்துகிறானோ, அவன் தண்டிக்கப்பட வேண்டியவன். ஏனென்றால் அவன் வியாபார நோக்கங்களுக்கு அடிமையாகி விடுகிறான்" என்ற கொள்கைகளை உடையவர் மார்க்ஸ். மார்க்ஸ் ஆசிரியர் பதவியிலே இருந்து விலகிக் கொண்டதும், அந்தப் பத்திரிகை தனது செல்வாக்கை இழந்தது! பிறகு நிறுத்தப்பட்டு விட்டது.

பத்திரிகைச் சுதந்திரம் பறிப்பு!

மார்க்ஸ் பணியாற்றிய பத்திரிகை நிறுத்தப்பட்டதும், அவன் ஒரு மேடையில் இதுபற்றி ஒரு விளக்கம் கொடுத்துப் பேசும்போது:

'ஒரு பத்திரிகை நின்றுவிட்டது என்றால் என்ன? பொருள்? சுயமாகச் சிந்திப்பவர்களுக்கும், மக்களுக்காகப் போராடுகிறவர்களுக்கும்-இனி ஜெர்மனியில் இடம் கிடையாது என்பது தானே?

மக்களுக்கு அவர்களுடைய நிலைமைகளை எடுத்துக் கூற வேண்டும் என்றால், மக்களோடு பத்திரிகை தாராளமாகப் பேச வேண்டாமா? அவ்வாறு பேசிட உரிமை வேண்டாமா?

அந்த உரிமை இல்லையென்றால், மக்களுக்காகப் போராடுகிறோம் என்று கூறிக்கொள்வதிலே என்ன பயன்? ஓர் அரசின் தயவில் இருந்து கொண்டு, மக்களுக்காக உழைக்கிறோம் என்பதெல்லாம் வெறும் பாசாங்கு! ஏமாற்றுவித்தை! என்று மார்க்ஸ் பத்திரிகைச் சுதந்திரம் பற்றி பேசினார். வேறொரு மேடையிலே பத்திரிகைச் சுதந்திரம் பற்றி மார்க்ஸ் பேசும் போது:

பத்திரிகைக்கு சுதந்திரம் வழங்குகிறோம் என்று ஓர் அரசு கூறிக்கொண்டு, கீழறுப்பான் வேலைகளைச் செய்வது மகா கேவலம்! வெளிவேஷம், முட்டாள் தனம்! மிருக பலத்தைக் கையாளுதல், தலை வணங்க வைத்தல், பல் இளிக்கச் செய்தல், முதுகை வளைத்துக் கொடுக்கச் செய்தல், குதர்க்கமாகப் பேச வைத்தல், முதலியவற்றுக்காக ஒரு பத்திரிகை அஞ்சக்கூடாது.

அதையெல்லாம் கண்டு நான் சலித்துப் போய் விட்டேன். ஜெர்மன் அரசு என்னை ஆசிரியர் பொறுப்பிலே இருந்து விடுதலை செய்து விட்டது. இனி நான் ஜெர்மனியிலோ செய்யக் கூடியது ஒன்றும் இல்லை. அப்படி ஒருவன் ஜெர்மனியிலே இருக்க வேண்டுமானால், அவன் தனக்குத் தானே பொய்யனாக நடந்து கொள்ள வேண்டும்" என்று கர்ஜனை செய்தார்.

இளம் வயதிலேயே தத்துவம் விரும்பியாக இருந்த மார்க்ஸ், பிறகு பத்திரிகையாளனாக மாறி, அதற்கும் அரசு தடைகள் குறுக்கிட்ட போது—தன்மானத்தையும், பத்திரிகை சுதந்திரத்தையும் இழக்க விரும்பாத மார்க்ஸ்

பிறகு என்ன செய்வது என்று சில நண்பர்களுடன் கலந்து பேசினார். அதனால், மார்க்ஸ் ஒரு முடிவுக்கு வந்து, இனி வெறும் அரசியல் தத்துவங்களைப் பேசுவதால் எந்தப் பயனும் ஏற்படாது.

கீழ்மட்டத்தில் நலிந்து கிடக்கும் ஏழை மக்கள், தொழிலாளர்கள்— பொருளாதாரத்தின் மீதுதான் அரசியல் வாழ்வுகணிக்கப்படுகிறது என்பதைத் திட்டவட்டமாக இப்போதுதான் மார்க்ஸ் புரிந்து கொண்டார்.

எந்த ஒரு தத்துவமும், மக்களுடைய தொடர்பு பெறாவிட்டால், அதனால் எந்தவித பயனும் இல்லை என்பதையும் உணர்ந்து கொண்டான் மார்க்ஸ்.

எனவே, இதற்கு மேல், இன்று முதல் ஏழை மக்கள் பொருளாதாரத்தைச் சீரழிப்பது எது என்று ஆராய்வதிலே மார்க்ஸ் தீவிர மடைந்தார்!

**மறுபடியும் வேறு ஓர் பத்திரிகை!**

ஆனால், ஹெகலின் இளைஞர் கட்சியைச் சேர்ந்தவனும், மார்க்சின் நெருங்கிய நண்பனுமான அர்னால்டு ரூஜ் என்பவன் மீண்டும் வேறு ஒரு பத்திரிகையை ஆரம்பிக்கத்தான் வேண்டும் என்று மார்க்சிடம் போராடினான்.

இந்த ரூஜ் சுபாவம் என்ன? என்பது மார்க்சுக்கும் தெரியும். 'இந்த உலகமே அறியாமையில் அழுந்திக் கிடந்தால்தான்—ஓர் அறிஞனாக முடியும்' என்ற குணம் உடையவனாயிற்றே; நாமோ சிந்தனைக் கடலிலே மூழ்கி மூழ்கி மூச்சுத் திணறுபவனாயிற்றே; இந்த நிலையில் ரூஜ் நமக்கு செய்யும் உதவி நடைபெறுமா? அது நீடிக்குமா?' என்று சிந்தித்தான் மார்க்ஸ்.

இறுதியில் இருவருமாக இணைந்து, பாரீஸ் நகரிலே இருந்து பத்திரிகை நடத்துவது என்றும், அந்தப் பத்திரிகைக்கு 'பிரெஞ்சு மலர்' என்றும் பெயரிட்டார்கள்.

பத்திரிகைப் பணியை ரூஜ் மாரிசுக்குச் சென்று செய்து கொண்டிருந்த போது, மார்க்ஸ் தனது எதிர்காலக் குடும்ப வேலைகளைப்பற்றிச் சிந்திக்கலானார்!

மார்க்ஸ் தந்தை ஹைறின் மார்க்ஸ் இறந்தபிறகு, மார்க்சுக்கு குடும்பம் பற்றிய எண்ணமே வரவில்லை. பத்திரிகைக்காக உழைத்த உழைப்பே இதற்குக் காரண மாகும்.

இதனால், தாயாருக்கும் மார்க்ஸ் மீது மன வருத்தம் அதிகரித்தது. அதனால், மார்க்சின் புதுப்புது முயற்சி களுக்கு அவ்வப்போது ஊக்கம் தர மறுத்தாள். எந்த உதவியும் செய்யவில்லை.

ஜென்னியும், மார்க்ஸ் நினைவிலேயே நாளுக்கு நாள் உருகி இளைக்க ஆரம்பித்தாள். ஏழு வருட காலமாகவே அவளுக்கு இந்த வேதனையும், சோதனையும் தொடர்ந்து ஏற்பட்டது.

பாரிஸ் நகரிலே துவங்கப்பட்ட இருந்த பிரெஞ்சு மலர் என்ற ஏடு மார்க்சுக்கு ஒரு குடும்ப வருமானத்தை வழங்க உறுதி செய்தது.

அந்த தைரியத்தைக் கொண்டு ஜென்னியை மணம் முடித்துக் கொள்ள வேண்டும் என்று மார்க்ஸ் இப்போது முடிவு செய்தார்.

1843-ம் ஆண்டு ஜூன் மாதம், 13-ம் நாள், டாக்டர் கார்ல் மார்க்சுக்கும், பெர்த்தா ஜூலியா ஜென்னிக்கும் க்ராயிஷ்னாக் என்ற ஊரில் திருமணம் நடந்தது. சில மாதங்கள் இருவரும் அதே ஊரிலேயே இன்ப வாழ்க்கை வாழ்ந்தார்கள்.

## பத்திரிகைத் தடை

ஜென்னியும், மார்க்சும் பாரீஸ் நகரம் வந்து குடியேறி னார்கள். 'பிரெஞ்சுமலர்' 1844-ம்ஆண்டு வெளிவந்தது ஜெர்மன் அரசு பற்றிய கட்டுரை ஒன்று அந்த மாதப் பத்திரிகையில் வெளி வந்ததைக் கண்ட அரசு, ஜெர்மன் நாட்டுக்குள்ளேயே அந்தப் பத்திரிகை நுழையாதவாறு தடை செய்து விட்டது.

பத்திரிகை நடத்திய மார்க்ஸ், ரூஜ், ஹைன் என்ற மூன்று பேரையும் ஜெர்மனிக்குள்ளே நுழையக் கூடாது என்றும் தடைபோட்டது. ரூஜ்க்கும் மார்க்ஸ் எழுதிய கட்டுரைகள் அவ்வளவாகத் மனத்திருப்தி அளிக்கவில்லை. அதனால் மார்க்சுக்கும் ரூஜுக்கும் வருத்தம் மூண்டது.

நிரந்தர வருமானமும் ஒன்றைத் தருவதாக முன்பு ரூஜ் அளித்த வாக்குறுதியைக் கைவிட்டு விட்டான். பத்திரிகையிலே நூறு பிரதிகளைக் கொடுத்து, இதை விற்றுப் பணம் எடுத்துக் கொள் என்று கூறவிட்டான்.

பத்திரிகையும் முதல் இதழோடு நின்றது. மார்க்ஸ் தம்பதிகளுக்குரிய வருவாயும் தடைபட்டு நின்று விட்டது என்ன செய்வார்? மார்க்ஸ்? இருந்தாலும் அவர் மனமு டைந்து உட்கார்ந்து விடவில்லை.

அந்த இடைக்காலத்தில் பொருளாதார நூல்கள் பல வற்றைப் படித்தார். வேண்டிய குறிப்புக்களைச் சேகரித் தார். இவ்வாறு இவர் அரும்பாடு பட்டுச் சேகரித்த குறிப்புகளும் பெற்ற திரண்ட அறிவும் தான் பிற்காலத்தில் சமதர்மம் என்ற சித்தாந்தத்தை உருவாக்க உதவிற்று எனலாம்.

## பொது வாழ்க்கை தீவிரமானது

மார்க்ஸ் தம்பதிகளுக்கு 1844-ம் ஆண்டு ஒரு பெண் குழந்தை பிறந்தது. இந்தக் குழந்தை பிறந்ததற்குப் பிறகு

தான், பொது வாழ்க்கையிலே அவர் தீவிரமாக நுழைந்தார். பாரீஸ் நகரத்தில் ஆயிரக்கணக்கான ஜெர்மானியர் ஒரே இடத்தில் வாழ்ந்து வந்தார்கள். ஆனால் அவர்களிடையே ஒற்றுமை கிடையாது. இருபெரும் பிரிவினர்களாகவே வாழ்ந்தார்கள்.

இவர்களுள் ஒரு பிரிவினர் தங்களை 'அறிஞர்' கூட்டம் என்று தங்களைக் கூறிக் கொண்டனர். மற்றொரு பிரிவினர் 'தொழிலாளர்கள்' என்று தங்களைக் குறிப்பிட்டுக் கொண்டனர்.

அறிஞர் பிரிவினர் யார் தெரியுமா? ஆசிரியர்கள், வணிகர்கள், நாட்டியம், சிற்பம் போன்ற தொழிலில் ஈடுபட்ட கலைஞர்கள்! இவர்கள் அறிஞர் கூட்டம்!

உழைத்துப் பிழைக்கும் பிரிவினர்கள் தொழிலாளர்கள். இவ்வாறு வேற்றுமை பாராட்டியே இவர்கள் பாரிசில் வாழ்ந்தனர். பிரெஞ்சுக்காரர்கள் இவர்கள் அனைவரையும் வந்தேதிகள் என்று வகைப்படுத்திக் கேவலமாகவே மதித்தார்கள்; நடத்தி வந்தார்கள்!

இந்த வந்தேறிகள் கூட்டம், தாங்கள் செய்யும் எந்த வேலையிலும் இவர்களுக்குள்ளேயே போட்டியிட்டுக் கொண்டு உழைப்புக் கேற்ற கூலிகளைப் பெறாமல், கிடைத்தால் போதும் என்ற கீழ்புத்தியோடு தங்களது கூலிகளைக் குறைத்துக் கொண்டார்கள்.

அதிக நேரம் உழைப்பார்கள்! குறைந்த கூலியே பெறுவார்கள். செய்யும் பணிகளைச் செவ்வனே செய்யும் திறமை உடையவர்கள் என்பதால், பிரெஞ்சுக்காரர்கள் ஜெர்மானியர்களையே பெரிதும் விரும்பி கூலியாட்களாக வைத்துக் கொண்டார்கள்.

### தொழிலாளர்; சங்கம் அமைப்பு

இவ்வாறு குறைவான கூலிகளுக்குப் பணிபுரிய ஜெர்மானியர் உள்ளபோது, பிரெஞ்சு தொழிலாளர் களுக்கு

வேலை கிடைக்குமா. சொந்த நாட்டிலே வேலை கிடைக்காமையால் அவர்கள் வாழ்விலே சோகம் கப்பியது. அதனால், ஜெர்மானியர்கள் மீது பகை மூண்டது.

இதனால் அடிதடி! குழப்பம்! சண்டை சச்சரவு! கலகங்கள் எழுந்தன! பிறகு, இவர்கள் தங்களைக் காத்துக் கொள்ள தனித்தனியே சங்கங்களை அமைத்துக் கொண்டார்கள்!

நெப்போலியன் வீழ்ச்சிக்குப் பிறகு உருவான சுயேச்சாதிகாரிகள் ஆதிக்கத்தை எதிர்த்து ஆங்காங்கே ரகசியச் சங்கங்கள் தோன்றின. அந்தச் சங்கத்தினர்கள் மீண்டும் தங்களது அழியாத சுதந்திர சக்தியை வளர்த்துக் கொள்ள அவ்வப்போது பேரறிஞர்கள் தோன்றி ஊக்கமளித்தார்கள். புனிதமான அந்தச் சுதந்திர சக்தியை புதைகுழிக்குள் புக விடாமல், மக்கள் தங்களது இதயக் கோவிலிலே அதை வைத்து சுதந்திர சக்திக்கு உயிரூட்ட வேண்டும்.

இந்த சுதந்திரக் கொள்கைக்காகவே மாண்டெஸ்க்யூ, வால்டேர், ரூசோ, சான்சீமன், பூரியே போன்ற பெரும் மேதைகள் தோன்றினார்கள்.

அவரவர் சிந்தனைக் கருவூலங்களை வழிகாட்டிடும் புரட்சி தூண்களாக எழுதி ரகசியச் சங்கங்களை வளர்க்க அறிவுரை கூறினார்கள். இதனால் ரகசியச் சங்கங்கள் அங்கே நன்கு வளர்ந்திருந்தன.!

பாரிசில் பிரெஞ்சுத் தொழிலாளர் களாலும் ஜெர்மன் தொழிலாளர் களாலும் உருவாக்கப்பட்ட ரகசியச் சங்கங்கள், ஒரு கால கட்டத்தில் ஒன்றிணைந்தன.

அதனால், அவர்கள் இடையே ஒற்றுமை வளர்ந்தது. அதே நேரத்தில் அறிஞர் கூட்டத்தின் இடையிலும் சமரசம் ஏற்பட்டது. சுருங்கக் கூறுவதானால், சுயேச் சாதிகாரத்திற்கு எதிராக புரட்சிச் சக்திகள் ஒன்று கூடி பணியாற்றின

**கிடைத்தற்கரிய எங்கல்ஸ் நட்பு**

மார்க்ஸ் இந்த கூட்டத்திற்கு அடிக்கடி சென்று. அங்கே என்ன நடக்கிறது, பேசப்படுகிறது, என்பதைக் கவனித்து வந்தார்! எந்த ஒரு தத்துவமானாலும், அது அனுபவ, நாகரீக வாழ்க்கைக்குப் பொருந்த வேண்டும் என்ற தனது குறிக்கோளுக்காக, சிலர் பகையினையும், சிலர் நட்பையும் மார்க்ஸ் பெற்றான்.

இவ்வாறு நட்பு கிடைத்த அறிஞர்களில் ப்ரூதோன், ப்ளான், எங்கல்ஸ் என்பவர்கள் குறிப்பிடத் தக்கவராவர் ஆனால் எங்கல்ஸ் ஒருவன் தான் மார்க்ஸ் சாகும் வரை மட்டுமல்ல; செத்த பிறகும் கூட அவனது மூலதனம் என்ற நூலின் இரண்டாம், மூன்றாம் பாகங்களையும் அவனது உழைப்பாலும் முயற்சியாலும் வெளியிட்டு மார்க்சிசத்தின் தளபதியாக நின்றான்.!

பாரிசில் இருந்து முன்னேற்றம் என்ற ஒரு பத்திரிகை வெளிவந்து கொண்டிருந்தது. மார்க்ஸ் அந்தப் பத்திரிகையில் கட்டுரைகளை எழுதினார். அவனது ஒவ்வொரு கட்டுரைகளும் களம் நோக்கி வீசப்பட்ட அணுகுண்டைப் போன்று காட்சி தந்தன.

**ஜெர்மன் ஆணை! நாடு கடத்தல்**

'முன்னேற்றம்' ஏடு மார்க்சுக்கு ஒரு முன்னேற்றமாக விளங்கியது. அரசர்கள், கடவுளின் பிரதி நிதிகள் என்ற பாமர மக்களின் நம்பிக்கையைத் தகர்த்தெறிந்தான்! ஜெர்மன் மன்னன் நான்காம் ப்ரடெரிக் வில்லியம் என்பவனை ஒரு பிற்போக்கு வாதியின் தலைவன் என்றெல்லாம் அந்த பத்திரிகையில் மார்க்ஸ் தீட்டினான்!

அரசு அதிகார அம்புகள் உடனே மார்க்ஸ் மீது பாய்ந்தன! ரூஜ், போர்ன்ஸ்டைன், பெர்னேஸ் உட்பட நால்வரும் பாரீஸ் நகரத்தை விட்டே ஓட வேண்டும் என்று பிரெஞ்சு அரசு உத்தரவிட்டது.

அந்த ஆணையை தூக்கிஎறியும் உணர்ச்சியில் மார்க்ஸ் தனது மனைவி மக்களை பிறகு வருமாறு கூறிவிட்டு முகத்திலறைந்தார்ப்போல பெல்ஜியம் நாட்டிலுள்ள ப்ரஸ் செல்ஸ் நகருக்கு வெளியேறி விட்டார். ஜென்னியும் குழந்தைகளும் பிறகுதான் பாரீஸ் நகரை விட்டு வெளியே றினார்கள்.

## 5. மார்க்ஸ் தத்துவங்களின் கம்யூனிஸ்ட் அறிக்கை!

பிரிட்டீஷ் ஏகாதிபத்திய ஆட்சியில் இந்தியாவுக்குரிய விடுதலைப் போராட்டம் நடைபெற்ற போது, இந்தியதேச பக்த வீரர்கள் மீது கொடுமையான சட்ட நடவடிக்கை களை அந்த அரசு எடுத்தது.

**போராளிகளுக்கு அடைக்கலம்!**

அந்த அடக்கு முறை கொடுங்கோலாட்சியின் கோரப் பிடிகளிலே இருந்து தப்பிப்பவர்களுக்கு, அப்போது பிரெஞ்சு ஆட்சியின் கீழிருந்த புதுச்சேரி நகரமும், அதன் பகுதிகளும் இந்தியாவிலே இருந்து வந்த சுதந்திரப் போராட்டப் போராளிகளுக்கு அடைக்கலம் கொடுத்துக் காத்ததை நாம் அறிவோம்.

அதனைப் போலவே, ஐரோப்பா கண்டத்திலே உள்ள பெல்ஜியம் நாடு ஒன்றுதான், பத்தொன்பதாம் நூற்றாண் டின் இடைக்காலத்திலே, பிற நாட்டு அரசுகளால் நாடு கடத்தப்பட்ட லட்சியவாதிகளுக்கும் அடைக்கலம் வழங் கிய நாடாக இருந்தது.

ஜெர்மன் அரசு தூண்டுதலை ஏற்று, பிரெஞ்சு ஆட்சி மார்க்சைப் பாரிசிலே இருந்து நாடு கடத்திய போது, அவன் பெல்ஜியம் நாட்டிலே உள்ள பிரஸ் செல்ஸ் நகருக்கு

வந்து சேர்ந்தான். இந்த ஒரு காரணத்தை வைத்து மார்க்ஸ் ஜெர்மனியால் நாடு கடத்தப் பட்டவர்களுடன் நெருக்கமாகப் பழகினான்.

மார்க்ஸ் எங்கல்ஸ் சந்திப்பு! அலோசனை!

மார்க்ஸ் நண்பர் எங்கல்சும் அப்போது அங்கே வந்தார். இருவரும் சேர்ந்து எதிர்காலத் திட்டம் என்ன என்பது பற்றிச் சிந்தித்தார்கள். அப்போதைய அரசியல், பொருளா தார நிலைகளை ஆழமாக ஆய்ந்து ஒரு நூல் எழுதலாம் என்று இருவரும் முடிவு செய்தார்கள்.

நூல் நிலயங்களின் புத்தகப் புழுவாக மீண்டும் மார்க்ஸ் நெளிந்து நகர்ந்து கொண்டிருந்தார். படித்த புத்தகங்களி லிருந்து குறிப்புச் சேர்க்கும் நிலைமை, அதற்காக மார்க்ஸ் அலையும் அலைச்சல், அயராது அல்லும் பகலும் அவர் படிக்கும் அருமைகளை எங்கல்ஸ் அப்போது தான் உணர்ந் தான்! இருவரும் நூலை வெளியிடப் போட்டத் திட்டம் தோல்வி கண்டது. ஆனால், மார்க்சும் எங்கல்சும் அதற்காக உழைத்த உழைப்பு உருக்குலையாத உருவம் எடுத்தது.

'வறுமையின் தத்துவம்' என்ற ஒருநூலை 'ப்ருதோன்' PROUDHON என்ற பிரெஞ்சு அபேத வாதி எழுதினான். இந்த புத்தகம் முழுக்க முழுக்க பொருளாதாரப் பிரச்னை களை அடிப்படையாகக் கொண்ட ஓர் 'அபேதவாதம் ஆகும். இந்த ஆராய்ச்சி நூலை எதிர்த்து மார்க்ஸ், அந்த அபேத வாதி புத்தகப் பெயரைத் தலைப்பையே மாற்றித் 'தத்துவத்தின் வறுமை' என்ற பெயரால் மற்றோர் ஆய்வு நூலை அதற்கு மறுப்பாக வெளியிட்டார்.

மார்க்சும், எங்கெல்சும் ப்ரஸ் செல்ஸ் நகரத்தில் நூலாய்வு செய்து கொண்டிருந்த போது தான், பொது வுடைமைச் சங்கம் என்ற ஒரு சங்கம் அங்கே உருவாயிற்று

ஜெர்மன் நாட்டிலே இருந்து வெளியேறி பிரெஞ்சு நாட்டில் குடியேறி இருந்த அறிஞர் கூட்டம், 'தொழிலாளர் கூட்டம்' என்பவைப்பற்றி முன்பே நாம் குறிப்பிட்டிருந்தோம். இந்த வந்தேறிகள் அங்கே தனித்தனி சங்கங்களை உருவாக்கிக் கொண்டு, 'நியாயம் கோருவோர் சங்கம்' என்ற பெயரிலே தங்கள் நலன்களுக்காகப் போராடிக் கொண்டு இருந்தார்கள்.

1840-ஆம் ஆண்டில் அந்த சங்கத்தினர் தங்கள் பகைகளைமறந்து ஒன்று பட்டார்கள்: பிரஸ் செல்சிலிருந்து இந்த சங்கத்திலே மார்க்ஸ் இணைந்து அபேத வாதங்களைப் பற்றிக் கடிதங்கள் மூலமாக அவர்களுக்கு எடுத்துக் கூறிப் புரிய வைத்தான். இதனால், பல ஊர்களிலே இருந்த சங்கப் பிரதி நிதிகள், 1847-ம் ஆண்டு ஜூன் மாதம் முதல்நாள், ஒன்று கூடி, ஒரு மாநாட்டை நடத்தினார்கள். எங்கல்ஸ் மட்டும் இந்த மாநாட்டில் பாரிஸ் சங்கத்தின் பிரதி நிதியாகச் சென்று கலந்து கொண்டான்.

## பொதுவுடைமை சங்கம் பிறந்தது!

இந்த மாநாட்டில் நியாயத்தைக் கோருவோர் சங்கம் என்ற தங்களது சங்கப் பெயரை, 'பொதுவுடைமைச் சங்கம்' என்று மாற்றி; அதற்கான சட்ட திட்டங்களை வகுத்துக் கொண்டார்கள்.

இந்தச் சங்கத்தின் நோக்கங்கள் பின் வருமாறு திருத்தி அமைக்கப்பட்டன. 1) முதலாளி வர்க்கத்தின் வீழ்ச்சி, 2) தொழிலாளர்களின் உயர்வு, 3) வர்க்கப் போராட்டத்தின் மேல் அமைக்கப்பட்ட சமுதாயத்தை அழித்தல், 4) வர்க்கப் பிரிவினைகளுள் தனிச் சொத்துரிமை இல்லாத ஒரு புதிய சமுதாயத்தை உருவாக்குதல்—ஆகியன இச் சங்கத்தின் குறிக்கோள்களாகும்.

இந்த நோக்கங்களை சங்கத்திற்காக உருவாக்கித் தந்தவர் மார்க்சாகும். இதனால் அந்த சங்கத்தின் பழைய சட்ட

திட்டங்கள் எல்லாம் மாற்றப் பட்டு விட்டன. அதே நேரத் தில் அந்த சங்கம் ஜன நாயக விதி முறைகளின் படி உரு வாக்கப் பட்டது;

சங்கப் பணியாளர்கள் அனைவரும் ஜனநாயக விதி களின் படி தேர்ந்தெடுக்கப் படும் நிலை வரையறுக்கப்பட்டு விட்டது. இந்த சட்ட திட்டங்கள் அனைத்தும் மற்ற வெளி நாடு சங்க உறுப்பினர்களின் கருத்தறிவும் அனுப்பப் பட்டது.

தீர்மானம் செய்யப்பட்ட இந்த சட்ட திட்டங்கள் எல் லாம் மற்ற சங்கங்களின் ஒருமித்தக் கருத்துக்களை அறிந்து கொள்ளவும், பொதுவுடைமைக் கட்சியின் நோக்கங்கள் என்ன என்பதை விளக்கிக் காட்டவும், 1847-ம் ஆண்டு மீண்டும் நவம்பர் மாதம் வாக்கில் அதன் இரண்டாவது மாநாடு லண்டன் மாநகரில் கூடியது. இந்த மாநாட்டில் மார்க்ஸ் கலந்து கொண்டதால், முன்பு கருத்தறிய அனுப் பப்பட்ட சட்ட திட்டங்கள் எல்லாம் ஏற்கத் தகுந்தனவே என்ற ஒப்புதலும் கிடைத்து விட்டது.

இந்த ஒப்புதலுக்குப் பிறகு, மேற் கூறிய திட்டத்தின் படி அறிக்கையைத் தயாரிக்கும் அதிகாரம் மார்க்சுக்கும்— எங்கல்சுக்கும் லண்டன் சங்கம் வழங்கியது. மார்க்ஸ் இதற் கான ஓர் ஒழுங்கான அறிக்கையைத் தயாரித்து வழங் கினார்.

**கற்றவர் போற்றும் மார்க்ஸ் அறிக்கை**

ஏறக்குறைய நூற்றைம்பது ஆண்டுகளாகியும், அன்று மார்க்ஸ் தயாரித்து வழங்கிய அந்த லண்டன் மாநாட்டு சட்ட திட்ட அறிக்கையை—இன்று படித்தாலும் அதன் உண்மையான உருவ உணர்ச்சியை நம்மால் பாராட்டாமல் இருக்க இயலாது. அவ்வளவு தெளிவாகவும், முற்போக்கு

சிந்தனையோடும் அந்த அறிக்கை இன்றும் காணப்படு கின்றது. அவ்வளவு ஆழமான சிந்தனையிலே அந்த அறிக்கை பிறந்துள்ளது.

அந்த அறிக்கையைப் படித்த சிலர், இந்த அறிக்கை யைக் கண்டு அஞ்சினார்கள். மானிடர் குலத்தின் ஒரு விரோதி என்று மார்க்சை இகழ்ந்தார்கள். பேய், பூதம் பிசாசு என்று அவரைக் கூறி பயமடைந்தார்கள். நாகரீகத் தின் துரோகி என்று சிலர் தூற்றினார்கள் சிலர், பலர் அவரை ஒரு தீர்க்கதரிசி என்று போற்றினார்கள்; குழப்ப வாதி என்று பேசி சிலர் குடல் நடுங்கினார்கள்; ருஷ்யாவில் அந்த அறிக்கையின் கோட்பாடுகள் அரசு நெறிகளாக இன்றும் இருக்கின்றன.

பாசிச வெறி பிடித்தவர்கள் அந்த அறிக்கையே அழிக் கப்படவேண்டியன என்று எதிர்ப்புக்குரல் கொடுத்தார்கள்: சீனாவிலும், ருஷ்யாவிலும் மார்க்ஸ் உருவத்தை ரூபாய் நோட்டுக்களிலும், நாணயங்களிலும் அச்சிட்டுக் கௌர வித்தன. ஜெர்மன் நாட்டில் அவன் எழுதிய நூற்களையும் கட்டுரைகளையும் தீயில் போட்டு எரித்தார்கள். கண்டனக் கூட்டங்களை நடத்தி, துண்டுப்பிரசுரங்களை வெளியிட் டார்கள்.

மார்க்சினுடைய அந்த அறிக்கை இவ்வாறு உலக நாடு கள் இடையே புரியாத ஒரு புதிராகவே அமைந்து விட்டது. சில நாட்டுப் பாராளுமன்றங் களிலும், சட்டசபை களிலும் அந்த அறிக்கை சர்ச்சைக்குப் பலியாகி வாதப் பிரதிவாதங் களை எழுப்பிக் கொண்டிருந்தன!

## அறிக்கை செய்த புரட்சிகள்

குறிப்பாகவும், சுருக்கமாகவும் கூறுவதானால், அந்த அறிக்கை மாந்தர் குல சமுதாயத்தின் சரித்திரமாகவும். தொகுப்பாகவும் திகழ்ந்து கொண்டிருப்பதுடன், நிகழ்கால

நிலைகளையும், வருங்கால வரலாறுகளையும் வரையறுத்துக் கூறும் ஒரு நம்பிக்கை சாசனமாகவும், அமைந்துள்ளது. மார்க்ஸ் தயாரித்துக் கொடுத்த அந்த கம்யூனிஸ்ட் அறிக்கை மூன்று பகுதிகளாகப் பிரிக்கப்பட்டு, முதல் பகுதியில் மனித சமுதாயத்தின் சரித்திரமாக விளங்கி தற்கால வர்க்கப் போராட்ட வரலாறுகளையும், முதலாளித்துவம் எவ்வாறெலாம் வளர்ந்து கொடி கட்டிப் பறந்து வருகிறது என்ற விவரங்களை விளம்பு கின்றது.

பழங்காலம்முதல் முதலாளித்துவம் தொழில் துறையை அழித்து வரும் கொடுமைகள்; அதனால் புதிய தொழில்கள் தோன்றி பழைய கைத்தொழில்களை புறக்கணித்து வரும் நிலைகள்; அந்தந்த நாட்டு மூலப்பொருள்கள் அந்தந்த நாட்டில் பயன் படாமல் வெளி இடங்களிலிருந்து மூலப் பொருள்களை வரவழைத்து உபயோகப் படுத்தும் பயன்பாடுகள், உள் நாட்டுப் பொருள்கள் வெளி நாடுகளுக்கு ஏற்றுமதி யாகும் தொழிற் துரோகங்கள், இதனால் ஒரு நாடு பிற நாடுகளை நம்பி வாழும் தன்மைகள்; அதனால் உள் நாட்டுத் தொழில்கள் நசிந்து போகும் அழிவுகள். கிராம நாகரிகம் நாணா வட்டத்தில் ஒடுங்கி வரும் சீர்கேடுகள் போன்றவற்றை மார்க்ஸ் அறிக்கையில் தெளிவாகக் கூறப்பட்டிருப்பதை அதைப் படிப்பவரால் காணமுடிகின்றது.

உற்பத்திப் பொருள்கள், உற்பத்திச் சாதனங்கள் ஆகியன எல்லாம் ஒரு சிலர் கையில் அடைக்கலமாகின்றன. சுயநலத்திற்காக ஒரு சிலர் உற்பத்திப் பொருட்களைப் பெருக்குகிறார்கள்; இதனால் தொழிற் துறையில் போட்டிகள் தோன்றுகின்றன.

**தொழிலாளர்கள் சமுதாயம் உருவாகும்**

இந்த முதலாளித்துவப் போட்டிகளால், முதலாளித்துவத்திற்கு அழிவுகாலம் தானாகவே உண்டாகும். இந்த நிலைமை நீடிக்குமானால் தொழிலாளர் சமுதாயம் என்ற ஒரு தனிச்சமுதாயம் தானாகவே உருவாகும்.

தனித் தொழிலாளர் சமுதாயம் அவ்வாறு உருவான பிறகு; நாளடைவில் அவர்கள் அனைவரும் ஒரு திட்டத்தின் கீழ் ஒன்றுபட்டு; அவரவர்களுக்குரிய உரிமைகளைத் தட்டிக் கேட்கும் காலம் வந்தே தீரும்.

அந்த உரிமைகளை முதலாளித்துவம் கொடுக்குமானால், அங்கங்கே தொழிலாளி—முதலாளித்துவப் போராட்டங்கள் ஏற்படத்தான் செய்யும். இதை கால ஓட்டங்களாலும் மறுக்க முடியாது.

இந்த முடிவு எங்கு கொண்டு போய் விடும் என்றால், அது முதலாளித்துவத்தின் முதுகெலும்பை முறிக்கும் முடிவிலே கொண்டு போய்விடும் என்ற முடிவை மார்க்ஸ் தனது கம்யூனிஸ்ட் அறிக்கையின் முதற் பகுதியிலே விவரமாக விளக்கியுள்ளார்.

அறிக்கையின் இரண்டாவது பகுதியில்; பொதுவுடமைக்கும் மற்றத் தொழிலாளர்களுக்கும் உள்ள உறவு முறைகள், நோக்கங்கள்; பொதுவுடமையை எதிர்க்கும் எதிர்ப்புகளுக்குரிய சமாதன வழிமுறைகள்: தொழிலாளர்கள் அதிகாரத்துக்கு வந்தால் அவர்கள் செய்யப் போகும் சட்ட திட்ட விவரங்கள் பற்றியனவற்றை எல்லாம் விளக்கிக் கூறுகின்றார்—மார்க்ஸ்!

அறிக்கையின் மூன்றாம் பகுதி: ஒரு சமுதாயத்தின் பொருள் உற்பத்தி முறை; அதை அனுசரிக்கும் அரசியல் அமைப்பு முறை; அதற்கு முரண்பட்ட மோதல் முறை; அதனால் உருவாகும் அழிவு, பிறகு ஆக்கம்; இவற்றைக் கொண்டே வளர்ந்து வரக்கூடிய மனித வளர்ச்சிக்குரிய வழிகள்; தன்னையே அழித்துக் கொள்ளும் முதலாளித்துவ அழிவு முறை; தொழிலாளர் ஆக்கத்தின் கீழ்தான் வர்க்கப் பிரிவினையற்ற சமுதாயம் உருவாகும் என்ற காரண காரியங்கள்; அபேதவாதம் என்ற பெயரால் தோன்றும் போலி இயக்கங்கள்; அதனை ஆதரித்து எழுதப்படும் நூல்

களுக்குரிய மறுப்புகள்; மார்க்சியத்தின் அடிப்படைத் தத்துவங்கள்; ஆகியனவெல்லாம் இந்த மூன்றாம் பகுதியில் மார்க்ஸ் தர்க்கரீதியாக ஆய்வு செய்து கூறப்பட்டிருக்கின்றன.

"ஐரோப்பாவில் தோன்றியுள்ள 'பொதுவுடைமை' என்ற அற்புத சமுதாயம் மலர, வளர, வாழ, அனைத்து வகைத் தொழிலாளர் தோழர்களே ஆதரவு தாருங்கள்" என்ற வேண்டுகோளை; உலகத்தொழிலாளர் சமுதாயத்துக்கு விடுத்து, தனது கம்யூனிஸ்ட் அறிக்கையை மார்க்ஸ் முடிக்கின்றார்.

## அறிக்கை செய்த முதல் புரட்சி

மார்க்ஸ் எழுதிய இந்த கம்யூனிஸ்ட் அறிக்கை தொழிலாளர்களிடமும், பொது மக்கள் பார்வைக்கும் போய்ச் சேர்ந்த சில நாட்களுக்குள்ளேயே, அதாவது 1848ம் ஆண்டு பிப்ரவரி மாதத்தில், பாரிஸ் நகரத்தில் ஒரு பெரிய புரட்சி உருவாகி விட்டது.

இந்த புரட்சி தோன்றிய போது, பிரான்ஸ் நாட்டில், முதலாம் லூயிஸ் பிலிப் என்பவன் மன்னனாக இருந்தான் அவனுடைய ஆட்சி தொழில்ாளர் விரோத ஆட்சியாக அப்போது இருந்தது.

அந்த அரசினிடம் தொழிலாளர்கள் தங்கள் கருத்துக்களை எடுத்துக் கூறமுடியவில்லை; வேலை நிறுத்தம் செய்து தொழிலாளர்களால் தங்கள் உரிமைகளைக் கேட்க முடியாத நிலை; வேலை பளுவோ அதிகம்; உழைக்கும் நேரமும் அதிகம்; தொழிலாளர்கள் பணியாற்றும் போது அவர்களுக்கான சுகாதார வசதிகள் இல்லை; இதனால் பல தொழிலாளர்கள் சாவு; வேலை இல்லாத திண்டாட்டம்; போன்ற சீர்கேடுகளால் பிரான்ஸ் நாட்டில் குழப்பங்களும், கலவரங்களும் தோன்றின.

லூயிஸ் பிலிப் ஆட்சியை விரும்பாத மக்களும், ஜாதிக் கப்பட்ட தொழிலாளர்களும் ஒன்று சேர்ந்து 'முடியாட்சி ஒழிக, லூயிஸ் ஒழிக' என்ற கோஷங்களைப் பாரிஸ், நகர மூலை முடுக்குகளிலே எல்லாம் எழுப்பினார்கள்.

'அரசு நிருவாகத்தில் தொழிலாளர்களுக்கும் உரிமை வேண்டும். இதற்குரிய வாக்குரிமை தேவை; குறைகளை உணர விசாரணை நடத்த வேண்டும்; என்ற உரிமைக் கிளர்ச்சிகளை எழுப்பித் தொழிலாளர்கள் ஊர்வலமாக வந்து ஆட்சியினரைக் கேட்டார்கள்.

'முதலில் அரசியலில் உரிமை கொடு; பிறகு பொருளாதார நிலைமை உயரும்; என்று வீதி வீதியாகப் பாரிஸ் நகரம் முழுவதும் கூட்டம் கூட்டமாகக் கூடிக் கலவரத்தில் ஈடுபட்டார்கள். இந்த உரிமை கிளர்ச்சிக்கு 1847-ம் ஆண்டில் வித்தூன்றப்பட்டு, 1848-ம் ஆண்டு வரை வளர்ந்து வந்தது.

லூயிஸ் அரசு எவ்வளவோ முயன்றும், அடக்கு முறைகளைக் கட்டவிழ்த்து விட்டுப்பார்த்தும், அதனால் கலகங்கள் வலுத்ததே தவிர அமைதி உருவாகவில்லை. இன்னும் விரிவாகக் கூறுவது என்றால், கலகத்தையும், கிளர்ச்சிகளையும் அடக்கிட மன்னனால் ஏவப்பட்ட ராணுவத்தினர் அனைவரும் புரட்சிக்காரர்களோடு தோள்கோர்த்துப் போராட ஆரம்பித்துவிட்டார்கள். இந்தப் புரட்சிப் படைகளுடன், தொழிற்சாலை தொழிலாளர்களும், வந்தேறி ஜெர்மன்காரர்களும், மாணவர்களும், இணைந்து விட்டார்கள் என்றால் அந்தப் புரட்சியின் கதி என்னவாக இருக்கும்?

### குடியரசு ஆட்சி தோன்றியது

லூயிஸ் மன்னன் அரண்மனையை விட்டே ஓடிவிட்டான் அரசு அமைப்பு அடியோடு சீர் குலைந்தது! போர்

வீரர்களும் பாரீசை விட்டு ஓடிவிட்டார்கள்! மக்கள் கட்சி வெற்றிக் கொடி நாட்டியது! குடியரசு ஆட்சி பிரான்சில் தோன்றியது!

பாரீஸ் நகரத்து தொழிலாளர்களுக்கு என்னென்ன பாதிப்புக்களோ அதே குறைகள் ஐரோப்பா கண்டம் முழுவதுமுள்ள தொழிலாளர்கள் இடையிலும் காற்றிலேகலந்த ஓசைபோலக் கேட்டது! அதனால், ஐரோப்பிய நாடுகளிலே ஒரு வித புரட்சி சலசலப்பு உருவாயிற்று! அப்போது மார்க்ஸ் பெல்ஜியம் நாட்டிலே இருந்தார்.

திரண்டு உருண்டு புரண்டு நெளிந்த இந்த புரட்சி நெருப்புக்கு 1847—48ம் ஆண்டில் நெசவுத் தொழிலாளர்களின் வேலையில்லாத்திண்டாட்டமும், அவர்களது பட்டினிக் கொடுமைகளும் பெரும் தீயாக மாற்றிடும் எண்ணெய் ஆக உருவெடுத்தன அதே நேரத்தில் நாட்டில் உணவில்லா பஞ்சமும் ஒரு பெரும் பூதாகாரமாக உருவெடுத்தது!

இந்த நிலையிலே பாரிஸ் புரட்சி வெற்றி பெற்று அங்கே குடியரசு ஆட்சி ஏற்பட்டதைக் கண்ட பெல்ஜியம் அரசு, எங்கே தனது எல்லைக்குள் அந்த புரட்சி புகுந்து விடுமோ என்று பதறியது! அப்போதைய பெல்ஜிய நாட்டு மன்னன், 'நானும் லூயியைப் போல முடிதுறக்கத் தயார்" என்றான்!

'பெல்ஜியம் மக்கள் எனது முடி இழப்பை விரும்புகிறார்களா?" என்றும், 'ரத்தக் களரி ஏற்படாமல் இருந்தால் எனது அரசை இழக்கத் தயார்" என்று மக்கள் மனம் உருகத் தானாகவே முன்வந்து கூறினான்.

ஏன் இவ்வாறு அரசன் அறிவித்தான் என்பதை அப்போதைய அரசியல் வாதிகள் சிந்தித்தபோது, புரட்சியை எப்படியெல்லாம் எதிர்த்து அழிக்கலாம் என்பதற்கான ஒரு

வியூகத்தை அமைப்பதற்காக தன்னைத் தயார் படுத்திக் கொள்ளவே இவ்வாறு 'முடிதுறப்பு' நாடகத்தை நடத்தினார் என்ற உண்மை புலப்பட்டதாக அரசியல் வாதிகள் கூறினார்கள்.

மக்கள் வேறு ஆட்சிவேறு; அரசியல் சூதாட்டத்தில் மக்களைத் துருப்புச் சீட்டுகளாகப் பயன்படுத்தி வெற்றி பெறுவது; தியாகம் ஏதும் செய்யாமல் வெறும் பரம்பரைப் பழைய கதைகளைக் கூறி பயனை மட்டுமே அனுபவித்தல் என்ற அரசியல் சுயநலங்கட்கு ஆளாகி அக்ரமங்களைப் புரியும், பாவிகள்; எந்த ஓர் பிற்கால அரசியல், சமுதாயப் பிரச்னைகளையும் ஆழ்ந்து நோக்கமாட்டார்கள், இந்த கொடுமை மனப்பான்களுக்காக பிற்காலத்தில் வருந்தப் படவும் மாட்டார்கள். இந்த பொது உண்மையைக் கூட உணராத அரசியல் வாதிகள் வாழும்வரை, பெல்ஜியம் நாடு மட்டுமல்ல; உலகின் வேறு எந்த நாட்டு மக்களும் தீராத வேதனையைத்தான் அனுபவிப்பார்கள் என்பதற்கு அடையாளமாக அப்போதைய பெல்ஜியம் அரசின் ஆசைவார்த்தைகளைக் கேட்டு, மக்கள் கல்லுளி மங்கர்கள் போல் மௌனமாக இருந்ததைக் கண்டு மார்க்ஸ் வேதனைப்பட்டார்!

பெல்ஜியம் மன்னனின் கபட நாடக வியூகத்தை பெல் ஜியம் மக்கள் நன்றாகப் புரிந்து கொண்ட போதிலும், மன்னனது அந்த வாக்குறுதி வார்த்தைக்குச் செவி சாய்க்க வில்லை, பாரிஸ் புரட்சி வெற்றி பெற்றதை வரவேற்கும் மகிழ்ச்சியில். கூட்டங்கள் கூட்டிப் பேசினார்கள்! ஊர் வலமும், பேரணியுமாகத் திரண்டு புரட்சி வெற்றியைப் பாராட்டி மகிழ்ந்தார்கள்.

இந்த வெற்றி வரவேற்பு நிகழ்ச்சிகளில், நாடுகடத் தப்பட்ட ஜெர்மன் நாட்டு தேச பக்தர்களும், வந்தே நிகளும் பெருந்திரளாகக் கூடிக் கொண்டாட்டம் போட்ட

வெறியைக் கண்ட பெல்ஜிய மன்னன் அவர்கள் மீது கடும் அடக்குமுறைக் கணைகளை எய்தான்! பெல்ஜியம் ரணகளமானது!

**மார்க்ஸ் மீண்டும் நாடு கடத்தல்**

யார் யார் இந்த வெற்றி விழா சம்பவங்களிலே கலந்து கொண்டார்கள் என்பதை வேவு பார்த்து தெரிந்து கொண்ட அரசு, அவர்களை எல்லாம் சிறையிலே அடைத்துச் சித்ரவதை செய்தது. ஜெர்மானியர்கள் அனைவரையும் நாடு கடத்தியது. அவர்களிலே ஒருவனாக இருந்த மார்க்சையும் பெல்ஜியம் அரசு மீண்டும் நாடு கடத்தியது! அதுவும் இருபத்து நான்கு மணி நேரத்துக்குள் வெளியேறுமாறு ஆணை பிறப்பித்து உத்தரவிட்டது.

மார்க்ஸ் நாடு கடத்தப்பட்டதை அறிந்த மார்க்ஸ் நண்பர்களில் ஒருவனான ப்ளாக்கோன் என்பவன், மார்க்சுக்கு ஓர் அழைப்பு விடுத்து, மீண்டும் பிரான்சுக்கு வந்து விடுமாறு கேட்டுக் கொண்டான்.

ஆனால், அதற்குள் பெல்ஜியப் போலீசார் மார்க்ஸ் வீட்டிற்குள் துராக்கிரமாகப் புகுந்து, சோதனையிட்டு மார்க்சைக் கைது செய்து கொண்டு சென்றார்கள்.

மார்க்ஸ் கைதான பிறகு, அவரது மனைவி ஜென்னி, பெல்ஜியம் ஜனநாயக சங்கத் தலைவராக இருந்த ஜோத்ராந்த் என்பவரைப் பார்த்து, மார்க்ஸ் சம்பந்தமாக நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும் என்று கேட்டுக் கொள்ள அவர் வீட்டுக்குச் சென்றார்.

திரும்பி தனது வீட்டுக்கு வந்த போது, சில போலீசார் அவள் வீட்டு வாயிலில் நின்று கொண்டு, மார்க்சைப் பார்க்க வேண்டுமானால் என் கூட வாருங்கள் பேசலாம்

என்று அழைத்துக் கொண்டு போனான். ஜென்னியுடன் பெல்ஜிய ஜனநாயக சங்கத்தைச் சேர்ந்த ஒருவரும் போலீஸ் நிலையத்துக்குப் பின் தொடர்ந்தார்.

காவல் நிலையத்தில் நுழைந்த ஜென்னியைக் கண்ட போலீஸ் அதிகாரி, 'மார்க்ஸ் இங்கே இல்லை" என்றார். பிறகு ஜென்னியை நோக்கி "நீயார்?" ஜோராந்திடம் உனக்கு என்னவேலை? உனக்குரிய அனுமதிச் சீட்டு சம்பந்தமான எல்லாம் உன்னிடம் இருக்கின்றனவா? என்று கேட்டார்;

ஜென்னியுடன் சென்ற ஜனநாயகச் சங்கத்தைச் சேர்ந்தவர் கோபம் கொண்டு ஏதோ பேச முயன்ற போது அவரைச் சிறையிலே கொண்டு போய் அடைத்து விட்டார்கள்.

மார்க்ஸ் மனைவியைக் கொண்டு சென்று ஹோட்டல்-டி.வில்லே என்ற சிறையில், வேறு பல விபசிசாரிகள் அடைக்கப்பட்ட அறையினுள், அந்த விபச்சாரிகளுடன் சேர்ந்து ஓர் இருட்டறையில் தள்ளி அடைத்தார்கள்.

மறுநாள் முற்பகல் பதினொரு மணிக்கு, போலீஸ் காவலுடன் நீதிமன்ற விசாரணைக்கு ஜென்னி அழைத்துச் சென்று விசாரிக்கப்பட்டாள். ஒரு பெண்ணின் மீது இவ்வளவு கடுமையான நடவடிக்கை எடுக்க என்ன காரணம்? தனது கணவன் ஏற்றிருந்த லட்சியத்தையே அந்த பெண்ணான என் மனைவியும் கொண்டிருந்தாள் என்பதைத் தவிர வேறு என்ன குற்றம் செய்தாள் பாவம்! என்று வேதனை அடைந்தான் மார்க்ஸ்!

விசாரனை முடிந்தவுடன் ஜென்னி விடுதலை செய்யப் பட்டாள்! அதற்குள் மார்க்சுக்கு அரசு கொடுத்த இருபத்து நான்கு மணி நேரக் கெடுக்காலமும் முடிந்து விட்டது. வழி முழுவதும் பலத்த போலீஸ் காவலுடன் மார்க்ஸ் பெல்ஜிய

நாட்டின் எல்லை வரை அழைத்துச் செல்லப்பட்டு அங்கு விடுதலை செய்யப்பட்டார்.

## 6. உலக நாடுகளின் முதல் தொழிலாளர் மாநாடு!

ஐரோப்பா கண்ட முழுவதும் உள்ள நாடுகளில் 1948-ம் ஆண்டு தோன்றிய பாரிஸ் புரட்சியின் தொடர்க் கிளர்ச்சிகள் ஆங்காங்கே அடக்கப்பட்டது.

அந்தந்த நாடுகளிலே உள்ள பொது மக்களும், புரட்சி வாதிகளும், தீவிரவாதிகளும், மிதவாதிகளும், மார்க்சிய வாதிகளும், சோசலிச வாதிகளும், ஆன்மிக வாதிகளும், தொழிற் துறைப்பணியாளர்களும், சோர்வு கொண்டு செயலற்றுக் கிடந்தார்கள்.

**ஆமை, ஊமையான ஐரோப்பா!**

அவரவர் நாடுகளின் அரசுக்கு எதிராக எதையும் பேச முடியாத ஊமைகளாய், ஆமைகளாய், கோழைகளாய், மோழைகளாய், கூழைகளாய், பாழைகளாய், பேசவும் சிந்திக்கவும் திராணியற்றுத் திரிந்தார்கள்.

ஆனால், அன்றாடம் உழைத்துழைத்து வயிறு வளர்க்கும் தொழிலாளர் வர்க்கங்கள் மட்டும் நீண்ட நாட்களுக்கு அச்சமே உருவான அடையாளங்களாய் அடங்கி இருக்க இயலவில்லை. ஏனென்றால், எதையும் தாங்கும் இதயம் படைத்த அந்த தொழிலாளர் வர்க்கம், தனக்காக, தனது நாட்டு முன்னேற்றத்துக்காக, தனக்குத் தானே போராட வேண்டிய மனிதப்பிரிவு என்ற எண்ணத்திலே வாழ்ந்து கொண்டு இருக்கிறது. அதனால் அந்த வர்க்கம் சமயம் எப்போது வரும்; தனது அரிமா பிடரியை உலுக்கி வீறு கொண்டு எழலாம் என்ற சிந்தனையோடு தூங்குவது போன்று தனது ஓய்வு விழிகளை மூடியவாறு உள்ளது.

ஐரோப்பாவின் ஒவ்வொரு நாட்டுத் தொழிலாளர் களும் தங்களுக்கு என்று தனியான தொழிற்சங்கங்களை ஏற்படுத்திக் கொண்டிருந்தாலும், இதுமாதிரியான ஊமை நேரங்களில் அவரவர் சங்கங்களை மேலும் வலிவோடும் பொலிவோடும் வளர்த்து வருவதிலே அக்கறையும், ஆர்வமும் காட்டி வந்தார்கள்.

அந்த சங்கங்கள் வாயிலாகத் தங்களது உரிமை களுக்கும், நலன்களுக்கும் மேலும் போராடத் துணிவை வளர்த்துக் கொண்டிருந்தார்கள்.

இந்த தொழிற்சங்கங்கள் இது வரையில் மற்றஅரசியல் கட்சிகளுடன் கூட்டணியில் இணைந்தே தங்களது விடு தலைக்கும், உயர்வுக்கும், வழி கண்டு வந்தன.

அந்த அரசியல் கட்சிகள், முதலாளிகள் அனுபவித்து வரும் சலுகைகள், வசதிகள், வருவாய்த் துறைகள் ஆகிய வற்றுக்கு தீமைகள் நேரா வண்ணம் தொழிலாளர்களுக்கு நன்மை நாடி வந்தன.

இத்தகைய வெளவால் வாழ்வு நீடிக்குமா? முடியுமா? என்று தொழிலாளர்கள் நாளாவட்டத்தில் யோசனை செய்தார்கள். இதனால், அழுதாலும் அவள் தானே குழந்தையை ஈன்று தரவேண்டும்; வேறொருத்தியால் கர்ப்பமாற்று வேலை செய்து ஈன முடியுமா குழந்தையை? என்று சிந்தித்தார்கள்.

தன்கையே தனக்கு உதவி என்ற வல்லமையோடு வாழ வேண்டும் என்று தொழிலாளர்கள். இந்த சீரிய நோக் கோடு ஒவ்வொரு நாட்டு சங்கமும் மீண்டும் செயல் பட ஆரம்பித்தன.

இதே நேரத்தில், ஜெர்மனியில் லஸ்சால் என்ற தொழிற்சங்கவாதி இருந்தான். இவன் மார்க்சுடன் சேர்ந்து பொதுவுடைமைச் சங்கத்தில் உழைத்தவன். ஆனால்.

மார்க்ஸ் இவனை நம்புவதே இல்லை. காரணம், தொழிற் சங்க விரோதியான பிஸ்மார்க் என்ற ஜெர்மன் சர்வாதிகாரியின் கூட்டத்தைச் சேர்ந்தவன் என்று அவனைக் கூறுவார்கள்.

இந்த லஸ்சால் என்பவன் ஜெர்மனி தொழிலாளர்களை ஒன்று திரட்டி பல கிளர்ச்சிகளைச் செய்தான். பிரான்ஸ், இங்கிலாந்திலும் உள்ள தொழிலாளர்கள் தங்களுக்கு என்று தனியான சங்கங்களை அமைத்துப் பணியாற்றி வந்தார்கள்.

முதலாளிகள் — தொழிலாளிகளை நேசிப்பதும், தொழிலாளிகள்—முதலாளிகளோடு இணைவதும்— இணங்கியும் பிரச்னைகளில் ஒத்துழைத்துக் கொண்டார்கள்.

**சர்வதேசத் தொழிலாளர் சங்கம் அமைய யோசனை**

இங்கிலாந்து, பிரான்ஸ் நாடுகளில் இருந்த நுண்மையும், விசால மனமும் படைத்த தொழிலாளர்கள் சிலர், எல்லா நாடுகளிலும் வாழ்கின்ற தொழிலாளர்கள் ஒன்று கூடி தங்கள் நலனுக்குரிய ஒரு மத்திய தொழிற் சங்கத்தை ஏற்படுத்த விரும்பினார்கள்.

இலண்டனில் அகில உலகப் பொருட் காட்சி ஒன்று 1862-ம் ஆண்டில் நடந்தது. அப்போது பிரான்சில் இருந்து ஒரு தொழிலாளர் கூட்டம் வந்திருந்தது. இக்கூட்டத்தை வரவேற்றிட லண்டனில் மீண்டும் ஒரு தொழிலாளர் கூட்டம் கூடியது. தொழிலாளர்கள் முதலாளிகளோடு சமாதானமாகப் போக வேண்டும் என்றும் வரவேற்பு விழா உபச்சாரங்களோடும் அந்தக் கூட்டம் முடிந்தது. பேச்சு வார்த்தைகளோடு இந்த பேரவை கலைந்து போனாலும், இருநாட்டு தொழிலாளர்கள் நெருக்கமாக, இணைந்து பழகும் உணர்ச்சி நிலை அக்கூட்டத்தில் உருவானது.

சுயாட்சி அதிகாரத்திற்கும், கொடுங்கோன்மைக்கும் பெயர் பெற்ற ருஷ்யா, போலந்து மக்கள் மீது கொடுமை

களைச் செய்து வந்தது. இதனால் அங்கே கலகங்களும்—கிளர்ச்சிகளும் தலை தூக்கின. அப்போது ருஷ்யா கடும் அடக்கு முறைகளை அளவுக்கு மீறி அவிழ்த்து விட்டது.

ருஷ்யா மீது இங்கிலாந்துக்கும் பிரான்சுக்கும்—இதற்கு முன்பேயும் தொழிலாளர் பிரச்னை சம்பந்தமாக மன வெறுப்பு இருந்தது. எரியும் நெருப்பில் எண்ணெய் ஊற்று வது போல இப்போது அடக்குமுறைகளை அவிழ்த்துவிட்டதும்; அந்த இரு நாட்டுத் தொழிலாளர்களும் கூட்டம் போட்டு ருஷ்யாவின் துராக்கிரகச் செயல்களைக் கண்டித்தன.

போலந்து, நாட்டின் விஷயத்தில் உடனே தலையிட வேண்டும் என்று இருநாடுகளையும் கேட்டுக் கொண்டார்கள். ஆனால் அந்த இருநாடுகளும் தலையிட மறுத்து விட்டன. அதனால் அந்த இரு நாட்டின் தொழிலாளர்களும் பெரிய ஒரு கூட்டம் போட்டு தங்களின் அதிருப்தியைத் தெரிவித்தார்கள்.

1863ம் ஆண்டு ஜூலை மாதம் 22-ம் நாள், லண்டனில் ஒரு பெரிய கலந்துரையாடல் கூட்டம் நடைபெற்றது. இதற்கு பிரான்சிலிருந்து பிரெஞ்சுத் தொழிலாளர்கள் பிரதிநிதியாக வந்து கலந்து கொண்டார்கள், ஆனால் கூட்டத்தின் நோக்கம் வெற்றி பெறவில்லை, அதே நேரத்தில் ருஷ்ய அரசின் அடக்குமுறைகள் தாளாமல், போலந்து மக்கள் அடங்கி விட்டார்கள்.

எந்த நாட்டுத் தொழிலாளர்களானாலும் அவர்கள் ஒன்று பட்டால் உண்டு வாழ்வு—ஒற்றுமை நீங்கில் அவர்களுக்குத் தாழ்வு என்ற பாரதியின் வாக்குக்கேற்றபடி ஒற்றுமையே உயர்வு, வாழ்வு என்பதை உணர்ந்து அன்பு காட்டி பழகினார்கள்! இந்த உள்ள உணர்ச்சி ஒற்றுமை அந்த இரு நாட்டுக் கூட்டங்களால் வெளிப்பட்டது.

அதனால் அந்த நாட்டு பிரதிநிதிகள் தொழிலாளர் ஒற்றுமையைப் பலப்படுத்த, ஓர் உலக நாடுகளின் தொழிலாளர்கள் சங்கம் என்ற சங்கத்தை உருவாக்க வேண்டும் என்றும், அதற்காக ஒரு மாநாட்டை லண்டனில் நடத்தவும், அந்த மாநாட்டின் மூலம் உலகத் தொழிலாளர்களைத் திரட்ட வேண்டும் என்று திட்டமிட்டார்கள்.

அந்த சர்வதேச தொழிலாளர் சங்கம் மாநாடு லண்டன் மாநகரில், 1864-ம் ஆண்டு, செப்டம்பர் 25ல், 'மார்ட்டின்ஸ் ஹால்' என்ற மண்டபத்தில் கோலாகலமாக நடந்தேறியது.

இந்த மாநாட்டிற்கு, கலிபோர்னிய கடற்கரையோரத் தொழிலாளர்களும், சைபீரியா பகுதி சுங்கத் தொழிலாளர்களும், இங்கிலாந்து, பிரான்ஸ், ஜெர்மன், பெல்ஜியம், போலந்து, இத்தாலி போன்ற, நாடுகளிலே இருந்து பெரும் பகுதியினரும் வந்திருந்தார்கள் என்பது குறிப்பிடத் தக்கதாகும்.

தற்போதுள்ள சமுதாய ஒழுங்குகளை மாற்றித் திருத்தி, புதிய தொரு சமுதாய ஒழுங்கை நிலை நாட்ட வேண்டும் என்ற எண்ணம் உடையவர்கள் யார் யாரோ, அவர்கள் எல்லாரையும் அழைத்தாலும், உலகத் தொழிலாளர்களுக்கு இது ஒரு புதிய ஆக்கச் செயல் என்பதாலும், எல்லா நாடுகளில் இருந்தும் பெரும்பாலாக திரண்டு வந்தார்கள்.

**மாநாட்டில் உரிமை முழக்கம்**

அந்த மாநாட்டிலே பலர் பலவிதமான வியூகத்திலே நாவன்மையோடும், ஆணித்தரத்தோடும் முழக்கமிட்டார்கள். தற்போதுள்ள பொருளாதார ஏற்றத் தாழ்வு மேடு பள்ளங்களை சமன் செய்யவேண்டும் என்று ஒரு சிலரும், பொருள் உற்பத்திக்குரிய சாதனமாயுள்ள எல்லா தொழிலாளர்களும் நல்ல சுவாதீனத்திற்கு வரவேண்டும் என்று பேசினார்கள்.

சமுதாயத்தைச் சேர்ந்த எல்லாரும் பொருள் உற்பத்தியின் பயன்களை சமந்துவமாக அனுபவிக்க வேண்டும். தனிச் சொத்துரிமை என்பதுதான் இவற்றுக்கெல்லாம் முதற்படி ஆகையால் அந்த உரிமை ஆகல வேண்டும் என்றனர்.

இந்தக் குறிக்கோள்களைக் கொண்ட சர்வதேசத் தொழிலாளர் சங்கம் ஒன்றை உடனடியாக அமைக்க வேண்டும் என்று அந்த மாநாட்டுப் பிரதிகளில் பலர் பேசினார்கள்! குறிப்பாக மாநாடு வெற்றிகரமாக நடை பெற்றது குறிப்பிடத்தக்கது.

மாநாட்டுப் பிரதிநிதிகள் மிகவேகமாகவும், ஆவேசமாகவும், பேசுவதைக் கேட்டுக் கொண்டிருந்த மார்க்ஸ், இதற்குப் பிறகு கூடிய மாநாட்டுக்குச் சம்பந்தப்பட்ட ஆக்கப்பணிகளிலே ஊக்கமாக ஈடுபட்டார். மாநாடு நடந்து முடிந்த பின்பு, சர்வதேசத் தொழிலாளர் சங்கத்திற்குரிய விதிகள், சட்ட திட்டங்கள், போன்றவற்றை தயாரிப்பதற்காக ஐம்பத்தைந்து உறுப்பினர்கள் கொண்ட ஒரு குழு அமைக்கப்பட்டது. அவர்களில் மார்க்சும் ஜெர்மன் பிரதிநிதியாகத் தேர்வு செய்யப்பட்டார்.

## மார்க்ஸ் திட்டம் சங்கம் ஒப்புதல்

அடுத்த படியாகக் கூடிய இரண்டாவது கூட்டத்தில் ஒரு திட்டத்தைத் தயாரித்துக் கொடுத்தார். அதில்: சங்க உறுப்பினர்கள் தங்கள் பொது நன்மையைக் கவனித்துக் கொண்டு, இப்போதுள்ள முதலாளித்துவ முறைகளை அப்படியே மாற்றி அமைப்பதற்கான ஆக்க வேலைகளைச் செய்யவேண்டும்.

இதற்காக அந்தந்த நாட்டு நாடாளு மன்றங்களில் தங்களை உறுப்பினராக்கிக் கொள்ளல் வேண்டும். மார்க்சின் இந்த திட்டத்தை சர்வதேசத் தொழிலாளர் சங்கக்

குழுவும் ஏற்றுக்கொண்டது. சர்வதேசத் தொழிலாளர் சங்கம் ஏன் ஆரம்பிக்கப்பட்டது என்பதை மார்க்ஸ் பத்திரி கைகளுக்கு விளக்கம் தந்த போது:

தொழிலாளர்கள் விடுதலை அவர்கள் கையில் தான் இருக்கிறது, சமுதாயத்தில் உண்டாகியுள்ள துன்பம், மக்கள் சேவை பண்பு, பெரும்பான்மையான மக்களின் அரசியல் அடிமை மனப்பான்மை, இவற்றிக்கு மூலகாரணம் என்ன?

உழைப்புக்குச் சாதனமாயுள்ள பொருட்களை எல்லாம் தன் உரிமையில் வைத்துக் கொண்டிருக்கின்ற முதலாளி களுக்கு; உழைக்கிற தொழிலாளர்கள் பொருளாதாரத்தில் அடிமைப்பட்டிருப்பது தான்.

தொழிலாளர்களின் நல்ல முடிவு என்ற லட்சியத்தைக் கருதி இதுவரை ஆற்றப்பட்ட முயற்சிகள் தவறானவை ஆகிவிட்டன. ஏனென்றால் ஒரு நாட்டிலேயே பலவகைத் தொழிற் முயற்சிகளில் ஈடுபட்டிருக்கிறவர்களுக்குள் ஒற்றுமை உணர்வே இல்லை.

இவ்வாறே பன்னாட்டுத் தொழிலாளர்களுக்குள்ளும் ஒற்றுமை இல்லை. இந்த ஒற்றுமையை உருவாக்கவே சர்வதேசத் தொழிலாளர் சங்கம் தோன்றியது என்றான் மார்க்ஸ். தொழிலாளர் சங்கங்களுக்கு அரசியல் விழிப் புணர்வு தேவையா என்ற ஒரு கேள்வியைப் பாரிஸ் நிருபர் கள் மார்க்சிடம் கேட்ட போது:

"தேவைதான்! தொழிலாளர்கள் சுரண்டப்படாமல், பொருளாதார வளத்துடன் வாழ வேண்டும் என்றால், அரசியலில் தொழிலாளர்கள் அவசியம் கலந்து கொள்ள வேண்டும்.

## அரசியல் அடிமை இழிவானது

எல்லாவற்றையும் காட்டிலும், அரசியல் அடிமைத் தனந்தான் இழிவானது; கேவலமானது. அரசியல் துறை

யில்தான் தொழிலாளர்களின் அடிமைத்தனம் நன்றாக வெளிப்படுகின்றது. எனவே, தொழிலாளர் அரசியலில் கலந்து கொள்ளாமல் இருப்பது பெரிய குற்றமாகும். எங்கெங்கு அரசியல் உரிமைகள் நசுக்கப் படுகின்றதோ அங்கங்கெல்லாம் தொழிலாளர்கள் நேரிடையாக ஈடுபட்டு, உரிமைகள் நசுக்கப்படடா வண்ணம் பாது காத்துக் கொள்ள வேண்டும். மார்க்ஸ் இக்கருத்துக்களை உலக மக்கள் அறிய வேண்டும் என்ற வேட்கையோடு நிருபர்களிடம் பேசி பத்திரிகைகளிலே வெளியிடச் செய்தான்.

சர்வதேசத் தொழிலாளர் சங்கத்தின் பணிகள் என்ன? என்று கேட்கப்பட்டதற்கு மார்க்ஸ் விடையளித்த போது: "பலவகைத் தொழிலாளர்களும், பல நாட்டுத் தொழிலாளர்களும் ஒன்று பட்டு வேலை செய்ய வேண்டும். பல நாட்டு தொழிலாளர் பற்றிய புள்ளி விவரங்களை, சேகரிக்க வேண்டும். ஒரு நாட்டின் தொழிலாளர்களின் நிலமைகள் என்ன என்பதை அறிய வேண்டும். இந்த விவரங்களை மற்ற நாட்டுத் தொழிலாளர் சங்கங்களுக்கு அறிவித்தல் வேண்டும். என்ற கருத்துக்களை வகுத்துக் கொடுத்து, இவைதான் சர்வதேசத் தொழிலாளர் சங்கத்தின் பணிகள் என்றார் மார்க்ஸ். இவ்வாறு மார்க்ஸ் பத்திரிகைகளுக்கும், பொது மக்கள் செய்தித் தொடர்புகளுக்கும் அடிக்கடி தொடர்புவைத்துக் கொண்டிருந்தார்.

முதல் உலகத் தொழிலாளர் மாநாட்டுக்குப் பிறகு, இந்த பன்னாட்டுத் தொழிலாளர்கள் சங்கம், வெகு வேகமாகவும், தீவிரமாகவும், ஒவ்வொரு நாட்டிலும், அந்தந்த தொழிலாளர்களுக்கு இடையிலே கிளைச் சங்கங்கள் அமைப்பு முறைகளோடு வளர்ந்து வருவதைக் கண்டவர்கள் அச்சப்பட ஆரம்பித்தார்கள்,

மாநாடு முடிந்து ஓராண்டு கூட ஆகாத நேரத்திலே சங்கங்களுக்கு அந்தந்த நாட்டில் நல்ல செல்வாக்கும் கிளை களும் உருவாயிற்று. இந்த செல்வாக்கையும், தொழிலாளர் உணர்ச்சியையும் கண்ட ஐரோப்பிய வல்லரசுகள் ஆடி அதிர்ந்து கொண்டே இருந்தன. ஏதாவது காரணங்கள் மீண்டும் கிடைக்குமா? அந்தச் சங்கங்களைத் தடை செய்ய இயலுமா? என்று அழுக்காறு விளக்கேந்தி ஆய்வு செய்து கொண்டிருந்தன.

**புயல் வேகத்தில் சங்கம் வளர்ந்தது**

இந்தக் குறுகிய காலத்தில் நெடிய வளர்ச்சி பெற்ற சர்வதேச தொழிலாளர் சங்கக் கிளைகள், அந்தந்த நாடு களில் பெரும் பரபரப்பையும், புதிய அரசியல் விறுவிறுப் பையும் ஏற்படுத்தினது என்றால், அதற்குக் காரணம், கார்ல் மார்க்ஸ் செய்த சலியாத முயற்சியும்-ஓயாத உழைப்புமே யாகும்.

மார்க்ஸ் சர்வதேச சங்கத்தின் வேகமான, தீவிரமான வளர்ச்சிக்கு எவ்வாறு காரணமாக இருந்தாரோ, அதே உணர்ச்சிகளோடு அச்சங்கத்தின் முடிவுக்கும் காரணமாக இருந்தான். அதெப்படி என்று வியப்புடன் கேட்கக்கூடும். மார்க்சின் சர்வாதிகார மனப்பான்மை தான் இதற்குரிய காரணம். அந்த விவரத்தையும் பார்ப்போம்.

ஜெர்மனிடம் வீழ்ச்சி அடைந்த பிரான்ஸ் விளக்க வொண்ணா துன்ப-துயரங்களில் சிக்கியது. நிலையான ஓர் அரசு இல்லாமையால், மக்கள் நிலையற்றவர்களைப் போலானார்கள். இந்த நேரத்தில் மூடியாட்சியை ஆதரித்த ஒரு சிலர், ஒன்றிணைந்து, தேசிய சபை ஒன்றை அமைத்து, அதன் வாயிலாக மீண்டுமோர் அரசு பரம் பரையை உருவாக்கிட முயன்றார்கள்.

இந்த முயற்சிக்கு இடையூறாக இருந்திட விரும்பாத குடியரசு கட்சியினரின் அரசியல் வாதிகள், போர் வீரர்கள்

போன்றாரையும் நிராயுத பணிகளாக்கி விட்டார்கள். இது மக்களுக்கு, சிறப்பாக ஜனநாயகத்தை மதித்தவர் களுக்கு ஆத்திரம் பொங்கியது. 1871-ம் ஆண்டு, மார்ச் மாதம் மிகப்பெரிய புரட்சியே உருவானது.

இந்த அமைப்பே அரசு நிர்வாகத்தை ஏற்றது! இதற் குப் 'பாரீஸ் கம்யூன்' என்று பெயர். இந்த கம்யூனர் அனை வரும் தொழிலாளர்கள்; ஏழைகள் ஆவர். அரசு நிர்வா கத்தை இந்த தொழிலாளர்களும், மக்களும் கொதித்து எழுந்து கைப்பற்றிக் கொள்வார்கள் என்று முடியரசு வாதி களும், ஏக போக உரிமைக்காரர்களும் எதிர் பார்க்க வில்லை.

செடான் என்ற இடத்தில் நடந்த போரில் கைது செய்யப் பட்டு விடுதலையான போர் வீரர்கள் துணை யோடு கம்யூனின் உரிமையிலே இருந்த பகுதிகளுள்ளே அவர்கள் திடீரென்று புகுந்தார்கள். இதனால் அந்தப் பிரதேசமே கொலைக்களமாக மாறி விட்டது. ஏறக் குறைய முப்பதினாயிரம் பேர்கள் சுட்டு வீழ்த்தப் பட்டார்கள்! இந்த நிகழ்ச்சி ஐரோப்பா பகுதிகளையே நிலை குலையச் செய்து விட்டது. இதற்குக் காரணம் அப்பகுதி ஏழை மக்கள் கொண்டிருந்த கோபமும், மன அதிருப்தியுமே என்று பதறிப் போனார்கள்.

இந்த பாரீஸ் கிளர்ச்சியைப்பற்றி சர்வதேச சங்கத்தின் மத்தியக் குழுவில் கருத்து வேறுபாடுகள் எழுந்தன. பிரிட்டீஷ் தொழிலாளர்கள் பிரதிநிதிகள் இந்த கொலை பாதகச் செயல்களைக் கண்டிக்க வேண்டும் என்று குரல் கொடுத்தார்கள். தொழிலாளர்கள் இயக்கம் வெற்றி பெற இதுவா வழி என்ற கேள்விகளைக்கேட்டார்கள். பொங்கிப் பொருமினார்கள்!

இப்படிப்பட்ட அராஜகங்கள் நடை பெற்று விட்ட நேரத்தில், சர்வதேச சங்கத்தின் பெயரால் மார்க்ஸ் ஓர் அறிக்கையை விடுத்து விட்டார். அந்த அறிக்கையில் அவர்,

'ஒருவரை ஒருவர் குற்றம் சாட்டிக் கொண்டு இருப்பதற்குரிய நேரமல்ல இது; பாரீஸ் கிளர்ச்சியானது தொழிலாளர்களின் எதிர்ப்புச் சக்திக்கு அடையாளமாய் உள்ளது; யாரார் தொழிலாளர் சமுதாயத்திற்கு விரோதிகள்; அவர்களது சுயரூபம் என்ன? என்பதற்கு அறிகுறியாக இந்தக் கிளர்ச்சி நடந்துள்ளது. தொழிலாளர் அரசின் ஒரு சிறிய அம்சம் போலவே பாரீஸ் 'கம்யூன்' உருவானது; என்ற கருத்துக்களோடு மார்க்சின் அறிக்கை இருந்தது.

இந்த மார்க்ஸ் அறிக்கை சர்வதேச சங்கத்திற்கு ஓர் இக்கட்டான சூழ்நிலையைத் தோற்று விற்று விட்டது. மார்க்ஸ் ஏன் இவ்வாறு அறிக்கை விட்டார்? திடீரென்று இப்படி ஏன் திசை மாறினார்? என்று சங்கத்தின் உறுப்பினர்கள் வருத்தப்பட்டதோடு மார்க்சைக் கண்டிக்கவும் முற்பட்டார்கள்.

மார்க்சுக்கு எதிர்ப்பாக எழுந்த குரல் சிறிது காலத்துக்குள் மறைந்தது. ஆனாலும், சர்வதேச சங்கத்தின் பெயருக்குக் களங்கம் சூழ்ந்தது. இதனால், மார்க்ஸ் பெயருக்கும் செல்வாக்குக் குறைந்து வந்தது. முயல் போல வேகமாக ஓடிய சங்கத்தின் இயக்கமும் ஆமை போல நகர ஆரம்பித்தது.

சர்வதேசத் தொழிலாளர் சங்கத்தின் மத்தியக்குழுவின் செயற் கூட்டம் 1872-ம் ஆண்டு கூடியது. அப்போது சங்கப் பிரதி நிதிகள் காரசாரமாக விவாதம் செய்தபோது, தொழிலாளர்கள் தாங்கள் நடத்தும் அரசியல் போராட்டத்திற்காக எந்தக் கட்சிகளின் உதவியையும் பெறக் கூடாது. வேண்டுமானால், தொழிலாளர்கள் தங்களுக்கென்றே தனியாக ஓர் அரசியல் கட்சியை ஆரம்பித்துக் கொள்ளலாம் என்றும் முடிவு எடுக்கப் பட்டது.

### பிரிட்டிஷ் தொழிற்கட்சி

இந்தத் தீர்மானத்தின் படிதான் இன்றுள்ள பிரிட்டிஷ் தொழிற் கட்சி துவக்கப்பட்டது என்பது குறிப்பிடத்தக்க

சம்பவமாகும். பிரிட்டிஷ் தொழிலாளர்கள் சர்வதேசத் தொழிலாளர் சங்கத்திலே இருந்து பிரிந்து வெளியேறினார்கள். தங்களது நலன்களைப் பாதுகாத்துக் கொள்ள, தனியாக ஓர் அரசியல் கட்சியைத் துவங்கினார்கள். அது தான் பிரிட்டிஸ் தொழிலாளர் கட்சி, இன்றும் அக் கட்சி பெரிய தோர் அரசியல் கட்சியாக இங்கிலாந்தில் இயங்கி வருகின்றது.

இந்தப் பிரிவு மார்க்சுக்குப் பெரும் வருத்தத்தைக் கொடுத்தது: தன்மீது அவர்களுக்கு நம்பிக்கை இல்லையே என்று அவர் மிகவும் வேதனைப் பட்டான். இந்த சமயத்தைப் பயன் படுத்திக் கொண்டு இவருக்கு நண்பர்களாக இருந்தவர்களுள் சிலரும் விரோதமாகவே நடந்து கொண்டார்கள். இந்த ஓர் இக்கட்டான கொந்தளிப்பில் 1872—ம் ஆண்டு செப்டம்பர் மாதம் முதல் வாரத்தில் மீண்டும் சர்வதேசத் தொழிலாளர் சங்கம் மாநாடு நடத்தியது.

### மார்க்ஸ் விரோதி நீக்கப்பட்டனர்

மார்க்ஸ் செல்வாக்கு சங்கத்தில் குறைந்திருந்தாலும், தனக்கென்று இருந்த அக்கட்சியின் பலத்தைக் கொண்டு தனக்கு சூழ்ச்சி செய்து வந்த பழைய நண்பர்களுள் ஒருவனான பக்குனின் என்பவனைக் கட்சியிலே இருந்து நீக்கி விட்டார். மற்றும் சில விரோதிகளையும் சங்கத்தை விட்டுத் தூக்கி எறிந்தார்.

இதுவரை இலண்டன் மாநகரிலே இருந்த சர்வதேசத் தொழிலாளர் சங்கத்தின் தலைமையகத்தை அமெரிக்காவிலே உள்ள நியூயார்க் நகருக்கு மாற்றிட சங்கத்தின் மாநாட்டில் தீர்மானமிட்டு, அதற்கேற்ப மாற்றிவிட்டார்.

சங்கத்தில் தனக்கு விரோதமாகப் பணியாற்றி வந்த பக்குனின், மற்றும் சிலரது சூழ்ச்சிகளிலே இருந்து சர்வதேசத் தொழிலாளர் சங்கத்தைக் காப்பதற்காகவே

மார்க்ஸ் அதை அமெரிக்காவிற்கு மாற்றினார். ஆனால் அந்த சங்கம் அமெரிக்கா சென்றும் இயங்காமல் அழிந்து விட்டது.

மார்க்ஸ் துவங்கிய முதல் இண்டர் நேஷனல்' என்ற சர்வதேசத் தொழிலாளர்கள் சங்கம், எட்டு ஆண்டுகள் உயிரோடு இருந்து உலகத் தொழிலாளர்கள் ஒற்றுமையை உயிர் கொடுத்து வளர்த்தது. அதனால் தொழிற்சங்கப் பெருமை உலகளாவி உலாவியது. ஒவ்வொரு நாட்டிலும் அதன் கிளைச்சங்கங்கள் வேரூன்றி, மார்க்ஸ் பெயருக்கும் புகழுக்கும் ஆணிவேராக ஆழப்பதிந்தும் தலைழத்து பணியாற்றின!

## 7. மார்க்சியம் அல்லது சமதர்மத் தத்துவம்!

காரல் மார்க்சின் போதனைகளும் தத்துவங்களும் 'சமதர்மம்' அல்லது 'மார்க்சிசம்' என்ற பெயரால் குறிப்பிடப்படுகின்றன. இப்போது நாம், தர்மம், சமதர்மம், மார்க்சிசம் என்றால் என்னவென்று பார்ப்போம்.

### தர்மம் என்றால் என்ன?

மக்கள் நலமாக வாழவேண்டும், வளமாகவும் வாழ வேண்டும் என்ற எண்ணத்தில் அவர்கள் அனைவரின் வாழ்க்கைக்காகச் செய்யப்படுகின்ற நற்காரியங்களுக்கும், அதற்கேற்றவாறு நடந்து கொள்கின்ற பண்பாடுகளுக்கும் தர்மம் என்று பெயர்.

இந்த தர்மம் போலவே சமதர்மமும் அமைய வேண்டும். மக்கள் எல்லோரும் மனத்தாங்கல் இல்லாமல் இல்லாமையைப் போக்க வேண்டும். ஈவதும் ஏற்றத் தாழ் வற்ற பேதங்கள் இல்லாமல் வழங்கல் வேண்டும். இதனைச் சமதர்மம் என்று குறிப்பிடுவதும் உண்டு.

**சமதர்மம் ஒரு தத்துவமா?**

சமதர்மம் என்ற வார்த்தையை ஒரு தத்துவமாக உருவகப்படுத்திக் காட்டியவர் கார்ல் மார்க்ஸ். அவ்வாறு அன்று செய்து காட்டாமல் இருந்தால், இன்று யார் அவரை உலகளாவிய அளவில் நினைத்துப் பார்த்திருப்பார்கள்?

இந்த சமதர்மம் என்ற சொல், தத்துவம்—இதற்கு முன்பும் இல்லாமல் இல்லை! சமதர்மம் என்ற இந்த நாகரிகப் பண்பு—கற்பனை உலகத்திலே, புராண உலகத்திலே, எங்கோ, எப்பொழுதோ ஒரு காலத்தில், மக்களுடைய வாழ்க்கையில் மார்கழி மாதப் பனிப்படலம் போல அடர்ந்து படர்ந்திருந்த துண்டு!...

அந்த படர்வு நிலையை, ஒழுங்காக, சிந்தனைக்குக் கொண்டு வந்து ஆராய்ச்சிக்கு அடிப்படை ஆதாரமாக்கி, அதிலே இருந்து பல அற்புத உண்மைகளைக் கண்டு பிடித்து உலகுக்கு உணர்த்தி நிலைநாட்டிய மாபெரும் சிந்தனையாளன் மார்க்ஸ்!

அந்த சமதர்மம், சமுதாயத்திலே உலாவரும்போது—சாதி பேத ஏற்றத் தாழ்வுகளை அகற்றி, யாவரும் கேளிர், என்ற, சங்ககாலச் சமுதாயத்தை நினைத்துப் பார்க்கவும், நிலை குலைந்துபோன இன்றைய சமுதாயத்தை மீண்டும் உருவாக்கி நிலை நிறுத்தவும் பயன்படும் ஒரு தத்துவமாகத் ஆனந்தத் தாண்டவமிடுகிறது.

அதே சமதர்மம் என்ற சொல் அரசியலுக்குள்' நுழையும் போது—வர்க்கபேத மற்ற சமுதாயம் உருவாக வழிகாட்டுகின்றது. ஏகாதிபத்தியத்தை, ஏகபோகத்தை. முதலாளித்துவத்தை, சுயேச்சாதிகாரக் கொடுங்கோன்மையைத் தவிடு பொடியாக்கி, எல்லாரும் எல்லாமும் பெற்று, சுயமரியாதையோடு, தன்மானத்தோடும், 'சுவரிமா' இனமாக மனித குலம் மேம்பாடு பெறவேண்டும். என்ற மேன்மையை மலர்த்துகின்றது!

இந்த அற்புதத்தை செய்து காட்டிய முதல் சிந்தனையாளர் கார்ல்மார்க்ஸ்! அதனால்தான் அவர் கண்ட சமதர்ம விஞ்ஞானக் கண்டு பிடிப்புக்கு கற்றோர், நல்லோர் பண்புற்றோர் அனைவரும் அதை மார்க்சியம் என்ற செல்லப் பெயரை வாய் மணக்கக் கூறி அழைத்து வருகின்றார்கள்.

கார்ல் மார்க்சும், சமதாமம் என்ற தத்துவத்தோடு பிறக்கவில்லை; தத்துவங்களை வளர்ப்பதற்காகப் பிறந்த எவரும் அந்தந்த தத்துவ உணர்வுகளோடு, சம்பந்தப்பட்ட நிகழ்ச்சிகளுக்காகவும் தோன்றவில்லை.

மார்க்ஸ் கண்ட உண்மைகள், ஆராய்ச்சி செய்த முடிவுகள், அனுபவித்த செயல்கள் இவை எல்லாம் சேர்ந்தே சமதர்மம் என்ற ஒரு தத்துவத்தையே மார்க்சியம் என்று அழைக்கின்றோம்; —அவ்வளவுதான்!

**மார்க்சியம் என்றால் என்ன?**

மார்க்ஸ், பிரடரிக் எங்கல்ஸ் இந்த இருமேதைகளும் இணைந்து நாற்பதாண்டு காலமாக நாடோடியாக உழைத்துச் செய்த ஆய்வுக் கனியின் பரிணாமம்தான் இந்த மார்க்சியம் என்ற மாண்புமிழும் தத்துவம்!

அறிஞர் உலகம் இதற்கு என்ன இலக்கணம் கூறுகிறது தெரியுமா? மார்க்சும், எங்கல்சும் சேர்ந்து அரசியல் சம்பந்தமாக வகுத்துத் தந்த தத்துவங்கள், அதனைப் பயன் படுத்தும் முறைகள், ஆசியவற்றின் தொகுப்புதான் மார்க்சியம்' என்கிறது!

ஆனால் இந்த இலக்கணம் அவ்வளவு சரியானது அல்ல என்கிறார் அறிஞர் வெ.சாமிநாதசர்மா என்ற மேதை: அவ்வாறானால் அதற்கு அவர்தரும் விளக்கம் என்ன?

"மார்க்சியம் வெறும் அரசியலுக்கு மட்டும் பொருந்து கிற தத்துவமோ, அனுஷ்டான முறையோ இல்லை. அது; மனித வாழ்க்கையைப் பண்படுத்திக் காட்டுகிற ஓர் ஒழுங்கு முறை; மானிட ஜாதியின் சரித்திரத்தைப் புதிய உருவத் தில் காட்டுகிற கண்ணாடி; பொருளாதாரத்தை முக்கிய அடிப்படையாகக் கொண்ட சமுதாயத்தின் தோற்றம்; முதலாளித்து வத்தின் முடிவு இன்னபடி தான் ஆகும் என்று அறுதியிட்டுச் சொல்கிற இறுதி வாசகம் இவையனைத்தும் அனுஷ்டான சாத்திய மற்றவை; அல்லது கருத்து வேற்றுமைகளுக்கு இடங்கொடுப்பவை என்று நாம் ஒதுக்கி விட்டாலும், விடலாம்.

ஆனால் வெறும் அறிவுக்கு மட்டும் விருந்தளித்துக் கொண்டிருக்கக் கூடிய ஒரு சிறந்த சித்தாந்தம் அது என் பதை யாரும் மறுக்க முடியாது.; மார்க்சின் முடிவுகளைச் சிலர் ஒப்புக் கொள்ளாமல் இருக்கலாம்; ஆனால், அவர் அந்த முடிவுகளுக்கு வந்த வழியே யாரும் பாராட்டாமல் இருக்க முடியாது. என்று அவர் விளக்கவுரை கொடுத்து மார்க்ஸ் என்ற ஞானியை மனம் திறந்து பாராட்டி யுள்ளார்.

எனவே, இவ்வாறு அறிவுக்கும், மக்கள் பின் பற்று வேண்டிய முறைக்கும், தனி மனிதனுடைய மேம்பாட்டுக் கும், ஒரு நல்ல சமுதாயத்தைக் காண விரும்பும் வாழ்க்கை நெறிகள் கொண்ட தத்துவத்தை சமதர்மம் என்று பெயர் சூட்டி அழைக்கலாம் அல்லவா?

அடுத்து மார்க்சியம் என்றால் என்னவென்று ஆராய் வோம்:

வரலாற்றை மார்க்ஸ் உலகக் கண்கொண்டு நோக்கு கிறான், உலகத்திலே உள்ள மதங்கள் எல்லாம் அது எந்த மதமாக இருந்தாலும் சரி, அவை எவ்வாறு உலகத்தினு டைய தோற்றம், அதன் வளர்ச்சி, முதலியனவற்றிற்கு உட்பட்ட கருத்துக்களை உடையனவாக உள்ளதோ,

அதனைப் போலவே, மார்க்சிசமும்—உலகம் எவ்வாறு உருவாகியிருக்கக் கூடும், படிப்படியாக மனிதகுலம் எவ்வாறு வளர்ச்சியடைந்திருக்கக் கூடும் என்பன போன்ற எல்லா கருத்துக்களையும்— மதங்களைப் போலவே மார்க்சிசமும் தொடுகின்றது. மதம் பற்றி மார்க்ஸ் கூறும் போது:

'மனிதன் தான் மதத்தை உருவாக்குகிறான். மதம் மனிதனை உண்டுபண்ணவில்லை. மதம் என்பது ஒடுக்கப் பட்ட ஒரு பிரயாணியின் புலம்பல்; மனமில்லாத ஓர் உலகத்தின் உணர்ச்சி; உயிரில்லாத நிலைமைகளின் உயிர். அது மக்களுக்கு அபினி. மக்களுக்கு மகிழ்ச்சியை அளிப்ப தாகப் பிரமை காட்டுகிற மதத்தை ஒழிக்க வேண்டும் என்று கோருவது, மக்களுடைய உண்மையான மகிழ்ச்சி யைக் கோருவதாகும், என்கிறார்.

மார்க்சியவாதிகள் மதத்திற்கு விரோதமான கருத்தையே கொண்டிருக்கிறார்கள். மதத்தை ஒரு ஏமாற்றுக் கருவியாகவே கருதுகிறார்கள். இந்த விரோத மனப்பான்மைக்குக் காரணம் மதத்தின் பெயரால் சுரண் டலும், ஒரு முதலாளித்துவ மனப்பான்மையினையும் மதம் ஏற்படுத்துகின்றது.

உழைப்பாளிகளை மதம் சுரண்டுகிறது; வறுமை ஒரு மகத்துவம் கொடுத்துப் பேசுகிறது; ஏழைகளுக்கு மோட்ச சாம்ராஜ்ஜியத்தில் நிரந்தரமான ஓரிடம் இருக்கிறது என்று கூறுவதும் சொத்துடையவர்களின் சூழ்ச்சிகளே!

உழைப்பாளிகள் தங்களது அடிமை வாழ்க்கையிலே ஒருவித திருப்தி அடைய வேண்டும் என்பதற்காக, தங்களது அடிமை நிலையை உணராதிருக்க, மதம் ஒரு கருவியாக உள்ளது.

மதங்கள் என்ன போதிக்கின்றன? அடிமைத்தனத்தின் வெளித் தோற்றங்களாகிய அடக்கம், நிதானம்

பொறுமை, திருப்தி முதலிய குணங்களுக்கு ஒருவித புனிதத் தன்மையைப் புகட்டுகின்றன.

பொருளில்லாரிக்கு அவ்வுலகத்தைக் காட்டி, இவ்வுலகத்தை அவர்களது பிடியினின்று அப்புறப்படுத்தி இருக்கின்றன. பரநலத்தை மனிதன் நாட போதிக்கின்றன. அப்படி என்றால் என்ன பொருள்?

பொருளுடையவர்களின் நலத்தை நாட வேண்டும் என்பது தானே? ஏழைகள், தங்கள் சொந்த நலத்தை நாடாமல் இருந்தால்தான் பணக்காரர்களுக்கு சாதகம். எனவே, மார்க்ஸ் கருத்துப்படி மதம் என்பது பணக்காரர்கள் தங்களுடைய நன்மைக்காக, நிலைமையை உறுதி செய்து கொள்வதற்காக உபயோகிக்கும் கருவி அல்லவா?

மதம் ஏழைகளுக்குப் பூட்டப்பட்ட கடிவாளம்; பூட்டி விட்டால் ஏழைகள் பணக்காரர்களுக்குச் சாதகமான பாதையில் ஒழுங்காகச் சென்று கொண்டிருக்கிறார்கள்" என்று கூறுகிறார்.

மதம், உலகையும், மக்களையும் ஆண்டவனால் படைக்கப்பட்ட பொருள் என்று கூறுகின்றது. ஆனால் மார்க்சிசம், உலகத்தை ஆண்டவன் படைக்கவில்லை; ஏதோ ஒரு தெய்வ சக்தியின் துணைபெற்று மனிதன் வாழ்க்கையை நடத்தவில்லை. அவனுடைய உழைப்பினால்தான் அவனது வாழ்க்கை நடக்கின்றது. எனவே, உலகை தெய்வ சக்தி உருவாக்கவில்லை என்று மறுக்கின்றது.

**மார்க்சியம் ஒரு விஞ்ஞானம்!**

மார்க்சியம் விஞ்ஞானத்தை அடிப்படையாகக் கொண்டு உலகத்தை உற்றுநோக்குகின்றபோது, 'உலகில் முதன் முதலாக சிந்திக்கின்ற ஒரு சக்தி தோன்றியது' என்றும், ஜடங்களான பொருள்களை முதலில் தோன்றி

அவற்றின் விஞ்ஞான, ரசாயன மாறுதல்களுக்கேற்ப உயிரும், பிராணிகளும், உணர்வுகளும் உருவாகியிருக்கக் கூடும் என்றும் கூறுகிறது.

பதம், அரசு முதலியவை எல்லாம் ஆண்டவனால், அறிவுக்கு எட்டாத ஒரு சக்தியால், தெய்வ சக்தியால், கற்பனைக்கும் எட்டாத ஒரு சக்தியால் சிந்திக்கக் கூடிய ஒரு சக்தியால் படைக்கப்பட்டன என்ற கருத்து ஒரு கற்பனாவாதம்! அதாவது Idealism பாவப் கற்பனா வாதம் என்பது ஒரு கருத்தியற் கோட்பாடு; புலன்வழி அறியப்பட்ட புற அறிவுலகு முழுவதும் கருத்தியல் தோற்றமே என்ற கொள்கைக்கு உட்பட்ட கற்பனைக் குறிப்பீடாகும்.

தருக்கவியல்

மார்க்சின் கருத்துப்படி தருக்கவியல் என்பது வெளி உலகத்திலும், மனித மூளையிலும் உண்டாகிக்கொண்டே இருக்கும் இயக்கத்தின் பொது நியதிகள் பற்றிய விதிகளின் விஞ்ஞானம்தான் என்கிறார்.

தருக்க வியல் அறிவு பற்றிய கொள்கையும், மனித அறிவு வளர்ச்சி எவ்வாறு வளர்ந்து வளர்ச்சி அடைந்து வந்திருக்கிறது என்பதையும், அறியாமையில் இருந்து, அறிவுடைமையை நோக்கி எவ்வாறு வரலாற்று பூர்வமாக முன்னேற்றமடைந்து வந்திருக்கிறது என்ற தத்துவங்களையும் உள்ளடக்கிய ஓர் உண்மைச் சுரங்கமாகும்.

மார்க்சாலும், எங்கல்சாலும் வளர்ச்சி பற்றிய சித்தாந்தம் கூறப்பட்டிருக்கிறது. தான் தாண்டி வந்த கட்டங்களை வளர்ச்சி மீண்டும் அடைவதுபோலத் தோன்றினாலும் உண்மையில் அதற்கு நேர்மாறாக, எதிரிடைக்கு எதிரிடை என்ற நியதியில் ஒரே மாதிரியாக நேர் கோட்டிலன்றி, வளைந்து வளைந்து, தாண்டித் தாண்டிக் குதித்தும், திடீர் மாற்றமாகவும், பயங்கர விளைவுகளோடும் ஏற்படுகிறது.

ஒரு குறிப்பிட்ட பொருளில், கோவையில் அல்லது சமுதாயத்தில் பரஸ்பரம் உள்ள பகுதிகள் ஒன்றையொன்றை சார்ந்தும்—தழுவியும் நின்றாலும், அவை எல்லாம் ஒரே ஒரு பொது நியதிக்கு, இயக்கத்தின் வளர்ச்சிக்கு உட்பட்டே திருகின்றன' என்று மார்க்ஸ் தருக்கவியல் கூறுகிறது.

## 8. பொருள் முதல் வாதக் கண்ணோட்டம்!

மார்க்ஸ் சமுதாயம் பற்றிய விஞ்ஞானத்தையும், பொருள் முதல்வாத அடிப்படையில் திருத்தி அமைத்தார். பொருளில் இருந்தே உணர்வு தோன்றியது என்று கூறியதால், மனித இனத்தின் சமுதாய வாழ்க்கையிலும், சமுதாய மனப்பான்மையும் உண்டாயிற்று என்பதற்கான விளக்கத்தை கீழே காணலாம்:

ஒரு சமுதாயத்தைச் சேர்ந்த மனிதர்கள் ஒருவருக்கு ஒருவர் எப்படி நடந்து கொள்கிறார்கள்; பொருளாதார சம்பவத்திலாகட்டும் இவர்களுக்குள் எந்த மாதிரியான சம்பவங்கள் ஏற்படுகின்றன என்பவை எல்லாம்; அந்தச் சமுதாயத்தில் உள்ளவர்கள் கடை பிடிக்கின்ற பொருள் உற்பத்தி முறை, அவர்களுடைய பொருள் உற்பத்திச் சக்தி ஆகியவைகளைப் பொறுத்திருக்கின்றன என்று கூறுகிறார் மார்க்ஸ்.

### சமுதாய சம்பந்தம் மாறும் நிலைகள்

பொருள் உற்பத்தி முறை; சக்தி இவைகளைப் பொறுத்தே ஒரு சமுதாயத்தில் வாழ்பவர்கள் இடையே சம்பந்தம் இருக்கிறது. பொருள் உற்பத்திக்கு அவர்கள் புதிய சக்திகளைப் பெறுவார்களானால், அதாவதுபொருள் உற்பத்திக்கான சாதனங்கள் மாறுமானால்; அப்போது

அவர்களுடைய பொருள் உற்பத்தி முறைகளும் மாறிவிடும் இந்த பொருள் உற்பத்தி முறையின் மாற்றத்திற்கு ஏற்றார் போலவே அவர்களுடைய வாழ்க்கை வழிமுறைகளும் மாறும். இதனால் அவர்களது சமுதாய சமபந்தங்களும மாறுபடும்.

ஒரு சமுதாயத்தில் என்னென்ன விதமான வகுப்பு வித்தியாசங்கள், தகுதிகள், வேற்றுமைகள் முதலியன இருக்கின்றன. இந்த பல்வகை வகுப்பினரும் ஒருவருக்கு ஒருவர் எவ்விதமான தொடர்புடையவர்களாக இருக்கிறார்கள் என்பதைக் கணக்கிடும் போது, சமுதாயத்தில் உள்ளவர்கள் பொருட்களை எந்த அளவுக்குச் சொந்த மாக்கிக் கொண்டார்கள் என்ற உண்மைகள் நன்கு புலப்படும்.

**மிஞ்சிய மதிப்பு என்பது எது?**

"மிஞ்சிய மதிப்பு" என்றால் என்ன? என்ற இந்த தத்துவத்திற்குப் பெட்ரண்டு ரஸ்ஸல் என்ற தத்துவ ஞானி என்ன விளக்கம் கொடுக்கிறார் பாருங்கள்.

ஒரு தொழிலாளி ஒரு நாளைக்குப் பன்னிரண்டு மணி நேரம் வேலை செய்கிறான் என்று வைத்துக் கொள்வோம். அவன் உழைப்புக்கு என்ன மதிப்போ, அதாவது எவ்வளவு கூலியோ, அதனை ஆறுமணி நேரத்திலேயே உற்பத்தி செய்து விடுகிறான். அதாவது, பன்னிரண்டு மணி நேரம் அவன் உழைத்தால், என்ன கூலி அவனுக்குக் கிடைக்கின் றதோ, அந்த தொகைக்கு ஈடான பொருளை அவன் ஆறு மணிநேர உழைப்பிலேயே உற்பத்தி செய்து விடுகிறான்.

மிகுதி ஆறுமணி நேரத்தில் அவன் உழைத்து உற்பத்தி செய்கிற பொருள் இருக்கிறதே, அதுதான் முதலாளியின் சுரண்டல் பொருள்; அவனுடைய மிஞ்சிய மதிப்பு' கடைசி ஆறுமணி நேரம், அந்த தொழிலாளி உழைத்துப் பொரு

னைத் தயாரிக்கிறானோ அந்தப் பொருளுக்கு மூதலாளி அதிகமான கூலி கொடுக்கவில்லை. ஆனாலும் அந்தப் பொருளுக்கு விலை வைக்கிறபோது, உழைப்பு நேரத்தின் விகிதாசாரப்படியே விலை வைக்கிறான்''

பொருளாதார நிலையால் தான் ஒரு சமுதாயத்தை மாற்ற முடிகின்றது. இதனைச் சார்ந்தே அந்த சமுதாயத்தின் சட்ட திட்டங்கள், கரும நியாயங்கள், ஒழுக்க முறைகள், இலக்கிய வளர்ச்சிகள், மத உணர்வுகள் போன்றவை யாவும் அமைகின்றன.

இந்தக் குறிக்கோள்கள் தான், மார்க்சியத்தின் உயிர் நாடி! மனித இனம் மெல்ல மெல்ல வளர்ந்து வந்திருக்கிற தென்றால், அதற்கு அடிப்படையான காரணமே அந்தந்தக் காலத்தில் நிகழ்ந்து வந்துள்ள பொருளாதார மாற்றங்கள் தான். பொருளாதார அமைப்பைக் கொண்டு தான் சமுதாய அமைப்பு நிர்மாணிக்கப்படுகிறது என்பது மார்க்சியத்தின் அடிப்படை சித்தாந்தம்.

### இலக்கியம் பற்றி மார்க்ஸ் சிந்தனை

மார்க்சியம் இலக்கியத்துக்கு அல்லது அதன் வாழ்க்கைக்கு எதிரியல்ல; பொருளாதார அமைப்பு, அரசியல் அமைப்புக்கு ஏற்றவாறு சமுதாய வளர்ச்சிக்கான இலக்கியங்கள் வருவதை மார்க்சியம் வரவேற்கிறது.

இலக்கியம் என்றால் என்ன? அந்தந்தக் கால மக்கள் வாழ்ந்து வரும் வாழ்க்கையோடு ஒன்றுபட்டது தானே! வாழ்க்கையை உயர்த்துவதற்காக எழுதப்படும் சிந்தனை தான் இலக்கியம். வாழ்க்கையை உயர்த்துவது என்றால் என்ன? மனிதனுடைய சிருஷ்டி சக்தியை அதிகப்படுத்துவதே. இந்தசக்திவளரவளரஎழுதுபவன்தனதுசிந்தனையை சமுதாயநலனுக்குக்காணிக்கையாக்குகிறான்என்றுபொருள் அதனால் ஒரு சமுதாயம் வளம் பெறுகிறது அல்லவா?

சமுதாய வளர்ச்சிக்கு, முன்னேற்றத்திற்கு வழிகாட்டாத எந்த இலக்கியமும் இலக்கியம் ஆகாது. இதுதான் மார்க்சிசத்தின் அடிப்படைக் கருத்து. இதே எண்ணம் கலைக்குப் பொருந்தும். ஏனென்றால், மக்களது ஆவல்களை எதிரொலிப்பதுதானே கலையின் பண்பு. எனவே கலை என்பது மக்களது வாழ்க்கையினை, எதிர்கால வாழ்க்கையின் லட்சியங்களை எதிரொலிப்பதுதான் கலை! இந்த நோக்கங்கள் வளரவழிகாட்டுவதாக கலை உருவாக வேண்டும்.

## 9. மார்க்சின் மூலதனம்

மார்க்ஸ் எழுதிய நூலை 'காபிடல்'! அல்லது 'மூலதனம்' என்று உலகம் அழைக்கின்றது. இந்த நூல் உலகிலேயே தலை சிறந்த சில நூற்களில் ஒன்றாக கருதப்படுகிறது. இன்று மட்டும் அல்ல; என்றும் இந்த நூலுக்கு ஒரு தனிமரியாதையும்-மதிப்பும் மனித சமுதாயம் வழங்கியே தீரும்!

சிப்பியிலே இருந்து முத்து தோன்றுவது போல்; மூங்கில் மரத்திலே இருந்து மக்களை மயங்கவைக்கும் புல்லாங்குழல் உருவாவது போல, துன்பங்களிலே இருந்து இன்பங்கள் பிறப்பது போல, மார்க்ஸ் எனும் ஒரு மனிதனிடம் இருந்து "காபிடல்' அல்லது. 'மூலதனம்' என்ற ஓர் அறிவுப் புதையல் நூல் கிடைத்துள்ளது.

உயர்வான இந்த தத்துவ நூலை மார்க்ஸ் லண்டனிலே குடியிருந்த, நேரத்தில் மேல் சட்டை, படுக்கை, தட்டு முட்டு சாமான்கள், கால் பூட்சுகள் உட்பட அனைத்தையும் விற்றுக் குடும்பத்தின் நன்மை தீமைகளை அனுபவித்துக் கொண்டிருந்த பத்து, பன்னிரண்டு ஆண்டு கால உழைப்பின் போது எழுதினார்.

'காபிடல்' என்ற இந்த நூலை மார்க்ஸ் எழுதுவதற்கு ஏறக்குறைய ஆயிரத்து ஐநூறு நூல்களை ஆதாரங்களுக் காகப் படித்தார்! கவலையும், வறுமையும், அவனைப் புரட்டிப் புரட்டி எடுக்கும் குடும்பத்தில்! என்றாலும் மார்க்ஸ் எழுதுவதற்கு சலித்ததே இல்லை! எப்படியோ மார்க்ஸ் காபிடல்' என்ற புத்தகத்தை மூன்று பாகங்களாக எழுதி முடித்தார். 867-ம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 16-ம் தேதி 'மூலதனம்' என்ற 'காபிடல்' நூலின் முதல் பாகம் அச்சேறி புத்தகமாக வெளிவந்தது!

அன்று விடியல் இரண்டு மணி இருக்கும். காபிடல் புத்தகத்தைப் படித்து முடித்துச் சரிபார்த்து விட்டு, தனது இணைபிரியா நண்பன், வறுமையிலும், சிறுமையிலும் பெருமையுடன் பண உதவி செய்து நட்புக்கு இலக்கண மாகத் தன்னுடன் இரண்டறக் கலந்து விட்ட நண்பன் எங்கல்சுக்கு 'முதல் பிரதியை அனுப்பி அத்துடன் ஓர் அஞ்சலும் எழுதினான். அந்த கடிதத்தில் அவன் எழுது கின்றபோது;

### எங்கல்சுக்கு எழுதிய கடிதம்!

"அருமை நண்பா! காபிடல் முதல் பாகம் முடிந்தது. இதற்கு நீ ஒருவனே காரணம். எனது நன்றியை ஏற்றுக் கொள். எனக்காக நீ தியாகம் செய்திரா விட்டால், இந்த நூலின் மூன்று பாகங்களையும் நான் தயாரிக்கவே முடி யாது. வணக்கத்தோடு உன்னை நெஞ்சாரக் கட்டித் தழு விக் கொள்கிறேன். என் அரிய உண்மையான நண்பனே! உன்னை வாழ்த்துகிறேன்" என்று எங்கல்சுக்கு கடிதத்தை எழுதி அனுப்பினார்!

### அமைப்பு முறை மாற்றங்கள்

கைராட்டினம், கைத்தறி, கொல்லனுடைய சம்மட்டி ஆகியவற்றுக்குப் பதிலாக, நூல்நூற்கும் யந்திரம், நெசவு யந்திரம், யந்திரச் சம்மட்டி போன்ற புதிய வை தோன்றின

ஒவ்வொருவரும் ஒவ்வொரு இடத்தில் வேலை செய்தது மாறி, ஆயிரக்கணக்கான தொழிலாளர் ஒன்று கூடிப் பணியாற்றும் ஆலைகள் உற்பத்தியாயின. பொருள் உற்பத்தி தனிப்பட்டவர்கள் வேலையாக இல்லாமல் அது ஒரு சமுதாயம் பணியாக உருவெடுத்தது. அதாவது சமுதாய மக்களில் சிலர் சேர்ந்து செய்யும் வேலையாக மாறிற்று.

நூலோ, ஆடைகளோ, உலோகப் பொருள்களோ அனைத்தும் ஒரு தொழிற்சாலையிலே உள்ள பலர் கூடிப் பணியாற்றி உருவாக்கும் பொருள்களாக மாறின. ஏனென்றால், இவை தொழிற்கூடத்தில் இருந்து வெளியே வருவதற்கு முன்னர் எந்தத் தொழிலாளியும் நான் செய்தவை இவை என்று எந்தப் பொருளையும் கூற முடியாத நிலை ஏற்பட்டது. இவ்வாறு முதலாளித்துவமானது உற்பத்தியில் சமுதாயப் பொதுத்தன்மையை, அதாவது ஒரு பொருளை உற்பத்திச் செய்வதற்கு பலருடைய கூட்டுறவு-உழைப்பு தேவையாயிருக்கிறது என்ற பொதுத்தன்மை உருவானது.

### உரிமை அடிமையான முறைகள்

இந்த உற்பத்தி முறையில் சமுதாயத்திற்குச் சில சாதகங்கள் ஏற்பட்டன என்றாலும், இவற்றை உற்பத்தி செய்ததில் பலருக்கு இருந்த உரிமை பறி போய்விட்டது. எடுத்துக்காட்டாக, தச்சன் ஒருவன், தான் தொழில் செய்ய உளி, அரம், சம்மட்டி ஆகியவற்றைச் சொந்தமாக வைத்துக் கொண்டிருந்தான். யந்திர உளியும், யந்திர அரமும் கண்டு பிடிக்கப்பட்ட பிறகு அந்த தச்சன் ஆயுதங்கள் பயனற்றுப் போனதால், அவனுடைய சொந்தமும் பறிபோனது அல்லவா? இதனால் அவன் நாணாவட்டத்தில் தொழில் இல்லாமல் போய்விடுகிறான்.

அந்த தொழிற் கருவிகளுக்கு உரிமையானனாய் இருந்தவன், வயிற்றுப் பிழைப்பு காரணமாக யந்திர சாலைக்கு அடிமையாகி விடுகிறான். இதனால் நேற்றைய முதலாளி இன்றைய தொழிலாளியாக மாறிவிடுகிறான். இதுதான்

தொழிலாளர் சமுதாயத்தின் வரலாறு. இப்படிப்பட்ட தொழிலாளர் சமுதாயத்தை மார்க்ஸ் ப்ராலிடேரியட் (Frole tariat) என்று குறிப்பிடுகிறார்.

எனவே, இந்த சமுதாயம் எதிலிருந்து பிறந்தது என்று இப்போது சிந்தித்துப் பாருங்கள்; உண்மை புரியும். அதாவது முதலாளித்துவத்தில் இருந்து பிறந்து, அதன் மடியிலே வளர்ந்து, நாளடைவில் அதனையே அழிக்கும் கருவியாக ஒரு காலத்தில் மாறிவிடுகிறது. முதலாளித்துவத்தின் முடிவு இப்படித்தான் முடியும் என்று மார்க்ஸ் மேலும் விரிவாக எழுதுகிறார் அதை இங்கே விவரமாக விவரித்தால் புத்தகம் பெரியதாகும் என்பதால் ஓர் எடுத்துக்காட்டோடு முடித்துக் கொள்கிறோம்.

எனவே, முதலாளித்துவத்தை வீழ்த்தும் சக்தி; அந்த முதலாளித்துவத்தினிடமே தோன்றிவிடுகின்றது. முதலாளித்துவம் எந்தத் தொழிலாளர் சக்தியை, சமுதாயத்தை உருவாக்கியதோ, அந்த சக்தியினாலேயே, தொழிலாளர் சமுதாயத்தினாலேயே அது அழிக்கப் படுகின்றது. இல்லையா? இவ்வாறு தொழிலாளர்கள் சமுதாயம் எண்ணிக்கையில் பெருகிவருகிறது. அதனுடைய தேவைகளும் நாளடைவில் அதிகரித்து வருகின்றன. இறுதியில், சுரண்டுபவர்கள் அகற்றப்பட்டு விடுகிறார்கள்.

இதுவரை தனிச்சொத்துக்களாக இருந்த பொருள் உற்பத்திச் சாதனங்கள், சமுதாயப் பொதுச் சொத்துக்களாகின்றன. இதனால் அரசியல் அதிகாரம் தொழிலாளர்களிடம் வரும்சூழ்நிலை உருவாகின்றது. இவற்றிற்கு குறைவான எந்தச் சீர்திருத்தத்திலும் அது திருப்தியடையாது

அதாவது தொழிலாளர் சமுதாயம், பலாத்காரப் புரட்சி செய்ய வேண்டிய அவசியம் ஏற்படுகிறது. ஏனென்றால், உரிமை உடையவர் தங்களது உரிமைகளை அவ்வளவு சுலபமாக விட்டுக் கொடுக்க முன் வரமாட்டார்கள் அல்லவா?

தொழிலாளர் புரட்சி நடைபெற்று, தொழிலாளர் சமுதாயம் வெற்றி பெறுகிறது: தொழிலாளர்கள்—அதாவது சமுதாயத்தின் கீழ்ப்படியிலே உள்ளவர்கள்—அரசியல் அதிகாரத்துக்கு வந்து விடுகிறார்கள். இதற்குரிய எடுத்துக் காட்டுதான் ருஷ்யாவிலே. 1917-ம் வருஷம் ஏற்பட்ட புரட்சி என்று மார்க்சிய வாதிகள் இன்றும் குறிப்பிடு கிறார்கள்...

இவ்வாறுதான் பொது மக்களுக்குரிய நன்மைகள் உருவாவதும், வர்க்கப் பிரிவினைகள் இல்லாத சமுதாயம் அமைவதும் மார்க்சியத்தின் லட்சியமாக அமைகின்றது. இந்த லட்சியத்தின்படி தொழிலாளர் அரசு அமையுமா?

ஏன் அமையாது? என்பதற்கு மார்க்சீய வாதிகள் 1917ம் ஆண்டுக்குப்பிறகு, ரஷ்யாவில் லெனின் உருவாக்கிக் காட்டிய ராஜ்யத்தையும், அந்த அரசு அமைந்திட அவன் ஆற்றிய அரிய சாதனை வழிகளையும் மார்க்சியவாதிகள் மகிழ்ச்சியோடு எடுத்துக் காட்டிப் போராடி வருகிறார்கள்.

ஓர் ஆட்சியிலோ, சமுதாயத்திலோ மக்களைச் சுரண்டுவோர் இல்லாவிட்டால், சுரண்டப்படுவோரும் இருக்க முடியாது. அப்போது சமுதாயத்தில் பொருளாதார ஏற்றத் தாழ்வுகள் இருக்காது. வர்க்கப் பிரிவினைகள் அற்றுப் போய்விடும். மக்கள் வர்க்கப்பேத மற்ற வாழ்க் கையிலே போதிய மகிழ்ச்சியை அடைவார்கள் என்பது உறுதி என்று 'மூலதனம்' நூலில் விவரிக்கின்றார்.

## 10. மார்க்ஸ் சிந்தனையில் பெரியார் அண்ணா!

தமிழ்த் தரணியிலே பகுத்தறிவுக் கோட்பாடுகளை ஓர் இயக்கம் வைத்துத் தவழ்விட்டவர் தந்தை பெரியார். அந்த தத்துவங்களுக்காகத் தனது இறுதி மூச்சுள்ளவரை உழைத்தவர். அதனால் அவரை நாம் பகுத்தறிவு இயக்

கத்தின் பாதுகாவலர் என்று போற்றினோம்! கட்சிசாரா Rationalist என்பவர்கள் கூட பெரியாரை ஆதரித்து மகிழ்ந்தார்கள்.

புரோகிதம் நலம் பேணும் அதிக அதிகாரம் பெற்ற வைதிக மத, ஆன்மிக மனப்பான்மையான Sacredotalism என்ற தத்துவங்களை, நடைமுறைகளுக்கு ஒத்துவராத கற்பனைக் கோட்பாடு Utopianism என்று கூறிக் கடுமையாக ஊருக்கு ஊர் மேடைக் களம் கண்டு எதிர்த்தவர் தந்தை பெரியார்!

தமிழர் தம் மொழி, தொல் பொருள் வாழ்வியலின் பண்பாடுகள் புகழுக்கு மாசுகற்பித்த Stigmatism என்ற பித்தலாட்ட இனவெறிகளை பண்டைய கிரேக்க அறிஞர் சீனோ Zeno வின் Stocicism என்ற கடுந்தேவைக் கட்டுப்பாட்டு நிலை தத்துவக் கண்ணோட்டம் என்ற சிந்தனையிலே பல போராட்டங்களை அரசுக்கு எதிராக நடத்தி வெற்றி பெற்றவர் தந்தை பெரியார்!

இவை போன்ற ஒரு சமுதாயச் சிந்தனைகளின் தூண்டுதல்களுக்கு ஏற்றவாறு tactism எனப்படும் தூண்டுதலுக்கேற்ற ஓர் இயக்கம் தேவை என்ற குறிக்கோள்களுக்காக, தன்மான சிந்தனைக்குரிய மானத்தை உருவாக்கும் பாசறையை Dravidar Kazhagam என்ற பெயரால் உருவாக்கிவிட்டு மறைந்தவர் தந்தை பெரியார்.

சுயமரியாதையுள்ள அந்த திராவிடர் கழகத் தன்மானிகள் இயக்கம், ஜேம்ஸ் ஹட்டன் என்பாரின் எரிமலை கோட்பாடுத் தத்துவம்போல் வெடித்து தமிழ் நாட்டுப் புரோகிதத்துவத்தின் மீது அக்னிக் குழம்புகளை வாரி இறைத்துப் பணியாற்றி வரும் பெரியார் சக்தியை நாம் இன்றும் பார்த்து வருகின்றோம்.

அந்த புரோகிதத் தத்வதுப் பண்புகள் Rheumatism என்ற கீல் வாதக் காய்ச்சலுக்கு ஆட்பட்டு தள்ளாடித் தள்ளாடி தன்னுணர்வு பெற்று, RationaliSm மாக

வளர்த்து Machiauallism என்ற சூழ்ச்சி திறம் வாய்ந்த சாணக்கியத்தை எதிர்த்துப் போர் புரிந்து வரும் தத்துவங் களுக்கு இன்றுள்ள வரலாற்றுப் பெயர்தான் Periyarism என்ற பெரியாரின் கோட்பாடாகும்.

மதம் ஒரு அபினி என்று மார்க்ஸ் கூறினார் அந்த போதை மக்களிடையே பரவிடக் கூடாது என்று நினைத்த பெரியார், காந்தியடிகள் கோட்சேவால் சுடப்பட்டு மறைந்த போது, இந்து மத போதையேற்று வாழும் ஒரு மதத்திற்கு 'காந்தி மதம்' என்றும், அந்த மதம் வாழும் இந்திய நாட்டிற்கு 'காந்தி நாடென்றும், பெயரிடுங்கள் என்று அப்போதைய ஆட்சியிடம் வேண்டினார்! எந்த காந்தி பக்தனும் அதை ஏற்க மறுத்துவிட்டதை இந்த உலகமே அறியும்.

சாதி ஒழிய வேண்டுமா? கலப்புமணம் செய்! சுயமரியா தைத் திருமணம் செய்! என்று கூறியவர் தந்தை பெரியார் அதைச் செய்யும் பழக்கத்தையும் மக்களிடையே ஏற்படுத்தி னார்! 'ஆத்மா, மோட்சம், நரகம்,மறுபிறப்பு,பிதிர்லோகம் கடவுள் போன்றவற்றைக் கற்பித்தவன் அயோக்கியன். நம்புகிறவன் மடையன், இவற்றால் பலன் அனுபவிக் கிறவன் மகா மகா அயோக்கியன்' என்று மதம் எதிர்ப்பிலே ஈடுபட்டு பகிரங்கமாக சவால் விட்டு சமுதாய அறப்போர் புரிந்தவர் தந்தை பெரியார்!

இவை போன்ற எண்ணற்ற சமுதாயச் சீர்திருத்தங் களைச் செய்தவர் தந்தை பெரியார் என்று நாம் ஒரு பெரும் பட்டியலே போட்டுக் காட்டலாம்! இடம் கருதி இத்துடன் நிறுத்துகிறோம். அடுத்து அறிஞர் பெருந்தகை அண்ணா அவர்கள், தந்தை பெரியாரின் சமுதாயச் சீர்திருத்த இயக்கத்தின் தலைமாணவராகஇருந்தவர்!

அவர் சிறந்த நாவன்மை படைத்த அற்புதப் பேச் சாளர்! தமிழிலே மட்டுமல்ல— ஆங்கிலத்திலும்கூட!

படித்த மாணவர்கள், கல்வியாளர்கள், பாமரர் உட்பட அனைவரும் அவரது செஞ்சொற் பொழிவு என்ற மகுடி முன்பு நாகம்போல ஆடுவர்!

அறிஞர் அண்ணா எழுதுவதிலே ஒரு வால்டேர்! சிந்தனையிலே ரூசோ! சமுதாயச் சீர்திருத்த, நாடகம் எழுதுவதிலே அவர் ஒரு பெர்னாட்ஷா இப்சன், கான் பூர்த்தி! நாம் கூறவில்லை இதை! பேராசிரியர் கல்கி கணிப்பு! ஜஸ்டிஸ் ஏ.எஸ்.பி.ஐயர் மலைப்பு!

அறிஞர் அண்ணா நடிப்பதிலே மிகச் சிறந்த நடிகர், சிறுகதை எழுத்தாளர், நாவலாசிரியர், அரசியல் கடிதங் களைப் பத்திரிகையிலே எழுதுவதிலே அவர் ஒரு ஜெபர்சன்! நாடாளுமன்ற, சட்ட மன்ற நடவடிக்கைகளில் அறிஞர் அண்ணா பேசும்போது ஆசியாவின் ஜோதி என்று போற்றப்படும் பண்டித நேருவும், தத்துவஞானி டாக்டர் ராதாகிருஷ்ணனும் உடல் சிலிர்த்துக் கேட்பர்! அவரது ஆங்கில நடையின் ஆலிட்ரேஷன் உருவுகள் அவ்வாறு அருவிபோல சலசலத்து அவர் கபாலத்தை விட்டு இறங்கி வரும்! 'மாற்றான்தோட்டத்து மல்லிகைக்கும் மணமுண்டு என்று எதிர்க்கட்சிக்கு இலக்கணமளித்தவர்! தம்பியை உடையான் படைக்கஞ்சான் என்று போர்முரசுகாட்டியவர் எதையும் தாங்கும் இதயம் வேண்டும் என்ற மனிதத்துக்குள் மணம் கமிழ்ந்தவர் அறிஞர் அண்ணா!

தந்தை பெரியாரை விட்டுப் பிரிந்து கையிலேகாலணா காசு இல்லாமல் ஒரு ஆட்சியை ஆரம்பித்து, பதினெட்டே ஆண்டுகளுக்குள் ஓர் ஆட்சியை அமைத்துக் காட்டியவர்! தனது இனத்துக்காக பலமுறை சிறை சென்ற தியாகச் சீலர் அண்ணா! அவர் ஆட்சி பீடத்தில் ஏறி முதலமைச்ச ரானவுடன், தான் பிறந்த நாட்டுக்குத் 'தமிழ்நாடு' என்று பெயர் சூட்டிய தமிழ்த்தாயின் தவச் செல்வம்! தமிழ் மொழிக்குத் தீராப் பகையாக மூன்று நான்கு முறை தமிழ்

நாட்டுக்குள் புகுந்து நூற்றுக்கணக்கான மக்களை பிணமாக்கிய இந்தி மொழிக்கு அரசியல் சட்டப் புதைகுழி வெட்டி அதைப் புதைத்தவர்.

தந்தை பெரியார் கூறிய சாதி ஒழிப்புக்குரிய சுயமரியாதை திருமணம், கலப்புமணம் அனைத்திற்கும் அரசு அங்கீகாரம் அளித்தவர்! அரசியல்வாதியானாலும் அவன் வாக்குத்தவறக்கூடாது என்ற அரிச்சந்திராசத்துக்குவாய்மையாளனாக நின்றபடி அரிசி வழங்கிய வாய்மையாளர் அவர். அதனால் அமெரிக்கா அவரை அழைத்தது! யேல் பல்கலைகழகம் அவர் நாவன்மையை அறிவின் அற்புத அடையாளங்களைப் பாராட்டி 'சப்-பெல்லோஷிப்' என்ற பட்டத்தை தந்த ஒரேஒரு அமெரிக்க அல்லாது அயல்நாட்டு எதிர்க் கட்சிமுதல் அமைச்சர் ஆவார்! அவர் ஆற்றலுக்கு மேலும் எண்ணற்றவைகளை எடுத்துக்காட்டாகத் தரலாம்! இடம் கருதி சுருக்கி விட்டோம்! இப்போது பேரறிவுப் பெருமகன், கார்ல்மார்க்சிடம் வருவோம்!

தந்தை பெரியார், அறிஞர் அண்ணா அவர்களுக்கு சமுதாயச் சிந்தனைகள் என்னென்ன இருந்தனவோ அத்தனையும் அப் பழுக்கின்றி பெற்றவர் கார்ல் மார்க்ஸ்! கார்ல் மார்க்ஸ் புத்தகமாகிய இதனை முழுவதும் ஊன்றிப் படிப்பவர்களே, தந்தை பெரியாரையும்—அறிஞர் அண்ணாவையும் ஒப்பிட்டுப் பார்த்தால் தெரிந்து கொள்ளலாம் ஏதோ ஒன்றிரண்டு துறைகள் ஒருவருக்கு ஒருவர் திறமை, செயல், பண்பு குறைவாகவும் இருக்கலாம்—இல்லாமலும் போகலாம்!

தந்தை பெரியார் உலகிலேயே மிகச் சிறந்த ஒரு சமுதாய ஞானி!—அவர் மத எதிர்ப்புக்காகக் கடுமையாகப் போராடி உழைத்தவர்! சுருங்கக் கூறுவதானால் பிள்ளையார் சிலைகளையே நடுரோட்டில் தூக்கிப் போட்டு உடைத்தவர்!

அரசியல் பிரச்சனைக்காக நேருவின் இந்திய அரசிலே தேசியக் கொடியை எரிப்பதாக அறிவித்தார். நேரு அரசு வாக்குறுதியின் பேரில் கொடி எரிப்பை ஒத்திவைத்தார்! அப்படிப்பட்ட அஞ்சா நெஞ்ச அரிமா பெரியார்!

1956ல் ராமன் படத்தை எரித்தார்! வினோபாவை திருச்சியில் சந்தித்து அரசியல் சட்டத்தை எரிக்கும்படித் தூண்டினார்! தமிழ்நாடு பிரிவினைக்காக தமிழ்நாடு நீங்கலான இந்திய தேசப் படத்தை நேரு உயிரோடு இருந்த போதே அவரை எதிர்த்து 1960ல் தீயிட்டார்!

கார்ல் மார்க்ஸ், தொழிலாளர் சமுதாயம் வாழ்ந்திட, முதலாளித்துவம் ஒழிந்திட, சிலமுறை நாடு கடத்தப்பட்டதால் நாடோடியானார்! எந்தநாட்டுக் குடிமகனுமாக உரிமை இல்லாமலேயே மாண்டார்! உலகம் போற்றும் சர்வதேசத் தொழிலாளர் சங்கத்தை முதன்முதல் நிலை நாட்டினார்! எவருமே எழுதாத சிந்தனைகளோடு அரும் பாடுபட்டு 'மூலதனம்' என்ற நூலை எழுதினார். தொழிலாளர் சமுதாயத்திற்காகவே தாங்கொணாத் தொல்லைகளை அவர் மனைவியும்—அவரும் ஏற்றார்கள்! எப்பாடு பட்டேனும் முதாலாளித்துவத்தை ஒழிப்பேன்! வர்க்கப் பேதமற்ற சமுதாயத்தை அமைக்கும் அரசு உருவாக உழைப்பேன் என்று சூளுரைத்துப் பணியாற்றிய தியாக ஞானி கார்ல் மார்க்ஸ்!

கார்ல் மார்க்ஸ் கண்ட கனவை, மாவீரன் லெனின் பெருமகன், 1917-ம் ஆண்டைய ரஷ்யப் புரட்சிக்குப் பிறகு சோவியத் ருஷ்யாவிலே நனவாக்கினார்! சமதர்ம பூமியாக ருஷ்யா மாறியது! வர்க்கப் பேதமற்ற சமுதாயம் லெனின்—ஸ்டாலின் தலைமையிலே தன்மானத்தோடு ஏறுநடை போட்டது! கார்ல் மார்க்சின் மார்க்சியம், லெனின்; ஸ்டாலின் ஆட்சிகளிலே அரசு நடைபோட்டதை

உலக நாடுகள் எல்லாம் பாராட்டின! சில நாடுகள் அழுக்காறுற்றன! மற்றும் சில நாடுகள் மார்க்ஸ் நடந்த அடிச்சுவடுகளிலே கால் பதித்து நடந்தன!

சோசலிசம் பூக்கள் படர்ந்த பூந்தோட்டமாக ருஷ்யா மணம் வீசுவதைக் கண்ட பிறநாட்டுத் தலைவர்கள். அறிஞர்கள், அரசியல் வாதிகள், கலைஞர்கள், பொருளாதார மேதைகள், அறிவியல் வித்தகர்கள், தத்துவஞானிகள், போன்றவர்கள். ருஷ்யப் பூந்தோட்டத்திலே உலா வந்து அந்த பூக்களின் நாற்றத்திலே மூச்சுத் திணறி வந்தார்கள் அவர்களிலே ஒருவர் தந்தை பெரியார்.

தமிழகத்தின் சாக்ரடீஸ் என்று போற்றப்படும் தந்தை பெரியார், தனது சொந்த செலவிலே, உலக நாடுகள் சுற்றுப் பயணத்தை 1931-ம் ஆண்டு முடிவிலிருந்து—1932-ம்ஆண்டின் முடிவுவரை, ஏறக்குறைய பதினொன்று மாதம் சென்று திரும்பினார்.

துருக்கி, எகிப்து, கிரீஸ், இரஷ்சியா, இங்கிலாந்து, வேல்சு, ஸ்பெயின், 'செர்மன்' போர்ச்சுக்கல், இத்தாலி, பிரான்ஸ், இலங்கை முதலிய நாடுகளில் சுற்றுப் பயணத்தை முடித்துக் கொண்டு பதினொன்று மாதம் கழித்து இந்தியா வந்தார்!

சோவியத் இரஷ்சியாவுக்குச் சென்ற தந்தை பெரியார்; அங்கே ஸ்டாலின் ஆட்சியில் கார்ல் மார்க்ஸ் ஆட்சி நடப்பதையும், வீழ்ச்சியுற்ற முதலாளித்துவத்தால்அந்த நாடு எழுச்சி பெற்று வர்க்கப் பேத மற்ற சமுதாயம் அமைத்து வளமாக வாழ்வதையும், அந்த நாட்டு மக்களின் கடவுள் உணர்வுகளற்ற மதச்சீர் திருத்தத்தையும் பெரியார் மகிழ்ச்சியாகச் சுற்றிப்பார்த்து விட்டு தாயகம் வந்தார்!

தமிழ்நாட்டில் மேதினம்

தந்தை பெரியார் தமிழகம் வந்ததும் முதன் முதலாக தனது கட்சிக்காரர்களுக்கு 'மே நாள்' கொண்டாடும்படி அறிக்கை விட்டார். தமிழ்நாடு முதல் மே தினத்தைக் கொண்டாடியது.

காரல் மார்க்ஸ் சோசலிச சமுதாயம் அமைவதற்காக என்ன காரணங்களைச் சிந்தித்தாரோ, அதே கருத்துக் களைத் தந்தை 'பெரியாரும், அறிஞர் அண்ணாவும் சிந்தித்தார்கள். ஏனென்றால், இவர்கள் எல்லோரும், மார்க்ஸ் உட்பட, சமுதாயமும் மக்களும் நாடும் நன்றாக வாழ வேண்டும் என்று உழைத்த பெருமக்களாவர்.

சமுதாயத்தின் அக்கறையும், பொறுப்பும் உள்ள தலைவர்கள் அவர்கள் யாரானாலும், இப்படித்தான் சிந்திப்பார்கள். இந்த சிந்தனை கிரேக்க மண்ணில் பிறந்த சாக்ரடீஸ், கௌதம் புத்தர், மகாவீரர், இயேசுநாதர், நபிகள் நாயகம், ஆதிசங்கரர் போன்றவர்களுக்கு எல்லாம் தோன்றியது. அவர்களும் மக்களுக்குப் போதிக்க வேண்டிய முறையில் போதனை செய்து விட்டுத்தான் போனார்கள். ஆனால், முதலாளித்துவம் அழிய தொழி லாளர் சமுதாயம் அமைய மார்க்ஸ்போல எவரும் கூற வில்லை.

## 11. காரல் மார்க்ஸ் நம்மை மேம்படுத்தும் எண்ணங்கள்

மதம் மக்களுக்கு அபினி! அதுஒரு போதைப் பொருள்! மதத்தை உருவாக்குபவன் மனிதன் தான். மதம் மனிதனை உண்டு பண்ணவில்லை! மதம் ஒடுக்கப்பட்ட ஒரு பிராணி யின் புலம்பல்! மனமில்லாத ஓர் உலகத்தின் உணர்ச்சி

உயிர் இல்லாத நிலைமைகளின் உயிர் வறுமைக்கு மகத்துவம் கொடுத்துப் பேசும்! ஏழைகளுக்கு மோட்ச சாம்ராஜ்யத்தில் நிரந்தரமான இடம் உண்டென்று சொல்லும் பணக்காரர் களின் சூழ்ச்சிக் கருவி.

இலக்கியம் என்பது வாழ்க்கையோடு ஒன்றுபட்டது. ஒருசமுதாயத்தின் அரசியல் அமைப்பு, பொருளாதார நிலை இவற்றை ஒட்டியே இலக்கியமும் இருக்க வேண்டும். உயர்ந்த இலக்கியம் வாழ்க்கையை உயர்த்துவதாக இருக்க வேண்டும். உயர்த்துவது என்றால் மனிதனுடைய சிருஷ்டி சக்தியை அதிகப்படுத்துவதே. இந்த சிருஷ்டி அதிகமாகும் போது அது சமுதாய நலனுக்குப் பயன்படும் கருவியாகும்.

எல்லாச் செல்வங்களுக்கும் மூலமாக இருப்பது உழைப்பு ஒன்று தான். பணக்காரர்களின் நிலைமை எவ்வளவுக்கு எவ்வளவு வளர்ச்சி அடைகிறதோ, அவ்வளவுக் கவ்வளவு உழைப்பாளிகளின் நிலைமையும் கேவலமடையும். எந்தத் தொழிலுக்கு நாம் தகுதியுடையவர்கள் என்று நினைக் கிறோமோ, அந்தத் தொழிலில் நாம் புகமுடியாமல் இருக் கலாம். ஏனென்றால், நமக்கும் சமுதாயத்திற்கும் எந்த விதமான சம்பந்தம் இருக்கவேண்டும் என்று நாம் நிர்ண யிப்பதற்கு முன்பே, அந்தச் சம்பந்தம் உருவகப்பட்டு விட்டி ருக்கிறது.

ஒரு பத்திரிகையைப் பணம் சம்பாதிப்பதற்கான ஒரு கருவியாகப் பயன்படுத்தக்கூடாது. இதன் நியாயமான கடமை எதுவோ அதை ஒழுங்காகச் செய்ய வேண்டும். ஓர் ஆசிரியன் பணம் சம்பாதிக்க வேண்டியதுதான். எதற்காக? உயிர் வாழ்வதற்கா! தொடர்ந்து எழுதுவதற் காக! எந்த ஓர் ஆசிரியன் தனது செல்வ நிலைமையை வளர்த்துக் கொள்வதற்கான கருவியாகப் பத்திரிகையைப் பயன்படுத்துகிறானோ, அவன் தண்டனைக்குரியவன்! ஏனென்றால், அவன் வியாபாரத்திற்கு அடிமையாகி விடுகிறான்!

பத்திரிகை மூலமாகத்தான் மக்களை அணுக முடியும். மக்களுக்கு அறிவையும், உணர்ச்சியையும் ஒரே சமயத்தில் சேர்த்து ஊட்ட வேண்டுமானால் அதற்குப் பத்திரிகை ஒன்றுதான் ஏற்ற கருவி. எந்த ஒரு தத்துவமும் அனுபவ வாழ்க்கைக்கு, நாகரீகமான வாழ்க்கைக்கு பொருந்த வேண்டும். உலகத்தில் ஜனநாயக சக்திகளைத் தூண்டி விட்டு, அவற்றிற்கு ஒரு ஜீவ களையை உண்டு பண்ண வேண்டுமானால் அது தொழிலாளர்களால்தான் முடியும். இதற்காக சர்வதேசத் தொழிலாளர்களும் சேர்ந்து புரட்சி செய்ய வேண்டும். உலர்ந்த எலும்புகளை உடைத்து மாவாக அரைத்து அதிலிருந்து சாறு பிழிவதும், அரசியல் சம்பந்தமாகக் கட்டுரைகள் எழுதுவதும் ஒன்றுதான்.

வறுமை பற்றி எழுத எனது கை கூசுகிறது. ஒரு சமயம் என்மேல் சட்டையை அடகு வைத்தேன். சட்டை இல்லாத காரணத்தினால் வெளியிலே செல்ல முடியாமல் வீட்டிலேயே அடைபட்டுக் கிடந்த நாட்களும் உண்டு. அறிஞர்களுடைய கற்பனை உலகத்திலே சஞ்சரித்துக் கொண்டிருந்த எப்பொழுதோ ஒருகாலத்தில் மக்களுடைய வாழ்க்கையில் பனிப்படலம் மாதிரி படர்ந்திருந்து மறைந்து போன சமதர்மத்தை ஒழுங்கான ஓர் ஆராய்ச்சிக்குட் படுத்தி, அதிலிருந்து சில முடிவுகளைக்கண்ட பெருமைக்கு சமதர்மம் அல்லது மார்க்சியம் என்று பெயர். அறிவுக்கும் அனுஷ்டானத்திற்கும் தனிமனிதனுடைய வாழ்க்கைக்கும் சமுதாய வாழ்க்கைக்கும் பொருந்துகிற ஒரு தத்துவத்தை, திட்டத்தை சமதர்மம் என்பது தானே பொருந்தும்,

உலகத் தொழிலாளர்களே ஒன்று சேருங்கள்!
என்பதுதான் எண்ணம்

★ ★ ★